கல்கி

ஸ்வீட்டா...ஸ்டைலா...ஸ்மார்ட்டா...



நான் நம்பர் ஒன் இல்லை!

KALKI • 27.06.2010 • ரூ.10.00 • 96 பக்கங்கள்



செம்மொழி மாநாடு சிறப்பிதழ்!

மெய்ப்பட்ட கனவு..!

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு

சிறக்க வாழ்த்துக்கள்!



பார்ன் பேபீஸ்

Born Babies

A CHAIN OF BABY STORES

சென்னை

நுங்கம்பாக்கம்
18, லோகேஷ் டவர், கோடம்பாக்கம்
நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை - 34. 044-2825 0067
Customer Care No : 97109 22230

அண்ணாநகர் மேற்கு
334/2, 2வது அவென்யூ,
அண்ணா நகர் மேற்கு, சென்னை - 40
(நீலகிரீஸ் அருகில்) 044 - 2616 2225
Customer Care No : 99419 11120

வேளச்சேரி
1, 1வது மெயின் ரோடு, லக்ஷ்மி நகர்,
100அடி பை-பாஸ் சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. 044- 2259 1222
Customer Care No : 95516 98098

கோயம்புத்தூர்
69, T.V. சாமி ரோடு கிழக்கு,
R.S. புரம், கோயம்புத்தூர் - 2
0422 - 254 1626, 436 64555
Customer Care No : 98438 88811

கொச்சி
ரூபிகான் பில்டிங், சவுத் ஓவர் பிரிட்ஜ்,
வளஞ்சம்பலம், கொச்சி - 16
0484 - 235 8818, 403 0220
Customer Care No : 98951 08686

ஹைதராபாத்
எம்.ஜி-15, சிட்டி சென்டர் மால்,
ரோடு எண்.1, பஞ்சாரா ஹில்ஸ்,
ஹைதராபாத் - 34 040 - 40033391
Customer Care No : 98488 33391

Born Babies For all Customer Who Can't Compromise on Quality www.bornbabies.in

SHWAA

Special page

அறம் செய்!



ஔவையார், தானே தர்ம போதனை பண்ணினவள். குழந்தைகள்தான் நாட்டுக்கு விதைமுதல். அவர்களை சரி செய்து விட்டால் எல்லாம் சரியாகிவிடுமென்பதால், அவர்களை முன்னிட்டே நீதி நூல்களை இயற்றித் தந்தாள். வேத தர்மத்தை, குழந்தைகளுக்குக் குட்டிக் குட்டிப் போதனைகளாகக் கொடுத்தாள். நம் மதத்துக்கு அச்சாணி, 'தர்மம்' என்ற கொள்கை. இதுவே தமிழில் 'அறம்' என்பது. இதை வைத்தே ஔவை ''அறம் செய விரும்பு'' என்று ஆத்திசூடியை ஆரம்பித்திருக்கிறாள். ''தர்மம் சர'' - ''அறத்தைச் செய்'' - என்பது வேத கட்டளை. 'பூர்ண அதிகார ஸ்தானத்திலுள்ள வேதம் கட்டளை போடலாம்; கிழப்பாட்டி நாம் போடலாமா?' என்று ஔவை அடக்கத்தோடு நினைத்தாள். அதனால், 'இஷ்டமிருக்கிறதோ இல்லையோ, தர்மம் பண்ணித்தான் ஆகணும்' என்று கட்டளை போட்டுக் 'கம்பெல்' செய்வதாக ''அறம் செய்'' என்று சொல்லாமல், ''நீயாக இஷ்டப்பட்டு அறம் பண்ணேன்!'' என்று குழந்தைகளை 'நைஸ்' பண்ணும் விதத்தில் ''அறம் செய விரும்பு'' என உபதேசித்திருக்கிறாள்!

'ஆத்திசூடி' என்று இந்த நூலுக்கு ஏன் பேர் என்றால், அது பரமேச்வரனுடைய ஒரு பேர். எந்த போதனைக்கும் முந்த வரும் முதல் போதனை, பரமாத்மாவை நினைக்கப் பண்ணுவது. நம்முடைய கலாசாரத்தில் அவனை ஸ்மரிக்கப் பண்ணாமல் எதையும் எழுத ஆரம்பிக்கும் வழக்கமில்லை. சிருங்கார ரஸ ப்ரதானமான நாடகமானால் கூட, அதன் ஆரம்பத்தில் பகவானை நமஸ்காரம் பண்ணும் 'மங்கள ஸ்லோகம்' இருக்கும். விஷய மறிந்தவர்கள் இதை 'நாந்தி' என்பார்கள். தமிழிலும் 'கடவுள் வாழ்த்து' இல்லாத நூலே கிடையாது. தமிழ்மக்கள் படிக்கும் நூலான 'ஆத்திசூடி'யின் ஆரம்பத்தில், பரமேச்வரனை ''ஆத்திசூடி'' என்று குறிப்பிட்டு ஔவை கடவுள் வணக்கம் செலுத்தியிருக்கிறாள். ஆத்தி என்ற பரம ஔஷதத்தை (அகத்திக் கீரையை) அகஸ்திய மகரிஷி லோகத்துக்குக் கொண்டு வந்ததால் அவரையும் குழந்தைகள் நினைக்கட்டும் என்றே... ஈச்வரனுக்கு எத்தனையோ நாமாக்கள் இருந்தாலும், தமிழ்ப் பாட்டி 'ஆத்திசூடி' என்று ஆரம்பித்திருக்கிறாள் போலிருக்கிறது.

- ஜகத்குரு காஞ்சிகாமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்



கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : **சீதா ரவி**

உதவி ஆசிரியர்கள் :
கதிர்பாரதி, அமிர்தம் சூர்யா

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்

தொலைபேசி : **044 - 4343 8888**
தொலைநகல் : **044 - 4343 8899**

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
kalki@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.500/-
வெளிநாடு : ரூ.3,800/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இந்தியாவிலேயே கயிலாய யாத்திரையை மட்டுமே 12 ஆண்டுகளாக, யாரும் தர இயலாத குறைவான கட்டணத்தில் 15 நாட்களிலும் அதிக சலுகையுடன் நவீன வசதியோடு அனைவரையும் கிரிவலம் அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க நிறுவனம்

கைலாஷ்-மானஸரோவர்-முக்திநாத்

ஜூலை 14, ஆகஸ்ட் 13, செப்டம்பர் 12, 2010

புனிதத்துவம் வாய்ந்த கயிலாயம் மற்றும் மானஸரோவரின் எழுச்சி மிக்க சக்தியை நீங்கள் உணரக்கூடிய அரிய வாய்ப்புடன் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று மானஸரோவரில் புனித நீராடி, பிரதோஷத்தில் கிரிவலம் வர உலகத்தரம் வாய்ந்த நேபாளில் உள்ள SHRESTHA HOLIDAYS உடன் இணைந்து ஒவ்வொரு குழுவிலும் சத்சங்கங்கள் மற்றும் பஜன், தியானத்துடன் புறப்படுகிறோம்.

ரயில் மூலம் 22 நாட்கள், விமானம் மூலம் 15 நாட்கள், ஹெலிகாப்டர் மூலம் 10 நாட்கள்

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மண்டு வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.61,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து இரயில் மூலம் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் (4500 மாடல் புது வண்டி) மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் இரயில் மூலம் சென்னை வருவதற்கு 22 நாட்கள் ஆகும். இரயில் கட்டணம் உட்பட (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) **ரூ.64,900/-** மட்டுமே (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து டெல்லி வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து டயோட்டா கார் மூலம் கயிலாயம் சென்று தரிசித்து, பின் விமானம் மூலம் சென்னை வருவதற்கு 15 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.61,900/-** + விமான கட்டணம்

காட்மண்டில் இருந்து (சூப்பர் டீலக்ஸ் வசதியுடன்) ஹெலிகாப்டர் மூலம் கயிலாயம் சென்று தரிசித்து பின் காட்மாண்டு வருவதற்கு 10 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட **ரூ.1,40,000/-** மட்டுமே. (வேறு எந்த கட்டணமும் கிடையாது)

சென்னையிலிருந்து டெல்லி வழியாக விமானத்தில் காட்மண்டு சென்று, அங்கிருந்து மனக்கமனா, போக்ரா, ஜோம்சோம் வழியாக முக்திநாத் சென்று உபன்யாசத்துடன் தரிசனம் செய்து, மீண்டும் காட்மாண்டு அடைந்து சென்னை வர 5 நாட்கள் ஆகும். அனைத்து கட்டணம் உட்பட ரூ.12,900/- + விமான கட்டணம்

சிவாச்சாரியார்கள், திருமுறை ஓதுபவர்கள், டாக்டர்கள் மற்றும் குழுவாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை. பாஸ்போர்ட் அவசியம். இல்லாதவர்களுக்கு ஏற்பாடு செய்து தரப்படும்.

♦ காட்மண்டுவில் ஸ்டார் ஹோட்டலில் தங்கும் வசதி ♦ மானஸரோவர், கயிலாயம், முக்திநாத்தில் சாஸ்திரிகளைக் கொண்டு அவரவர்களுக்கு சிறப்பு பூஜை செய்யப்படும் ♦ ஒவ்வொரு ஜீப்பிலும் ஆக்சிஜன், மாஸ்க் வசதியுடன் 4 அன்பர்கள் மட்டுமே ♦ கயிலை பயணம் வீடியோ எடுக்கப்படும் ♦ யாத்திரை காலம் முழுவதும் மினரல் குடிநீருடன் ஆசாரமான பிராமணாள் உணவு ♦ மருத்துவ வசதி ♦ குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) ♦ சென்னையிலிருந்து கயிலாயம் சென்று கயிலைநாதனை தரிசித்து ஊர் திரும்பி வரும் வரை நாங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம்.

கயிலாய, முக்திநாத் பயணத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களுடனும் பாதுகாப்புடனும் தரமான, சுகாதாரமான தமிழக உணவு வகைகளை 3 வேளையும் வழங்கி ஒவ்வொரு குழுவிலும் டாக்டர் மற்றும் சிவாச்சாரியார் துணையுடன் அனைத்து வயதினரையும் (age no limit) அழைத்துச் செல்லும் அனுபவம் மிக்க ஒரே நிறுவனம்.



ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்

Kailash - Manasarovar & Mukthinath Yatra Entirely Organised by Brahmins

63, நடுத்தெரு, மயிலாப்பூர், சென்னை - 600 004

Cell : 97911 11979 / 94446 76757 (24 Hrs)



SPECIAL CARE FOR SENIOR CITIZENS ENJOY POURNAMI (FULLMOON NIGHT) AT MANASAROVER

● கோ.ப.செ. காண்டிடேட்



குஷ்புவின் கன்னிப் பேச்சு எப்படி?

● வி.நிர்மலா, மும்பை-81 ❑

? பெண் சிங்கமாகட்டும், வெறும் சிங்கமாகட்டும்! தெக்கத்தி அல்லது வடக்கத்திப் பெண்கள் குத்தாட்டம் போட்டால்தான் படங்கள் ஓடும் என்ற நிலைமையிலிருந்து தமிழ் சினிமா எப்போது மீளும்?

! பெண்கள் வெறும் சிங்கங்களாக இல்லாமல், சீறும் சிங்கங்களாக மாறி, இத்தகைய நரித்தனமான காட்சிகள் உள்ள படங்களைப் புறக்கணிக்கும் போது.

● கல்யாணி பாலு, திருநெல்வேலி

? இராணுவத்தினர் தீவிரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது, பொது மக்களின் மனித உரிமைகள் பாதிக்கப்படாமல் கவனமாகச் செயல்பட வேண்டும் என்று பிரதமர் பேசியிருப்பது ராணுவத்தை அதைரியப்படுத்தாதா?

! ராணுவத்தை ஏவுவது என்று அரசு தீர்மானித்தால், அதனிடம் அபிப்ராயம் கேட்கக்கூடாது; கோரிக்கைகள் வைக்கக்கூடாது; உத்தரவிட வேண்டும்! அதற்கு முன்பாக ரகசிய ஆலோசனைகள் நடத்தி, குறிப்பிட்ட பகுதியில், மிகக் குறுகிய காலத்தில் தீவிரவாதிகளை ஒழித்துக்கட்ட வியூகம் வகுக்க வேண்டும். இதை, பொது மக்களுக்கு அதிகத் துன்பமின்றி நிறைவேற்றத் திட்டம் வகுக்க வேண்டும். மின்னல் வேகத்தில் காரியத்தை முடித்து, ராணுவம் வெளியேறிவிட வேண்டும். இழுக்கடிப்பதால் மனித உரிமைகள் பறிபோகும்.

● அ.ராஜப்பன், கருமத்தம்பட்டி

? குஷ்புவின் கன்னிப் பேச்சு...?

! கொ.ப.செ.வாகவே நியமிக்கலாம் என்று தி.மு.க. வட்டாரத்தில் பரவலாக கருத்து நிலவுகிறதே. முதல் வெற்றிக்கு இது போதாதா!

● ச.நாராயணன், பாளையங்கோட்டை

? ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ் ரயிலைக் கவிழ்க்கும் முயற்சியில்தான் விழுப்புரம் அருகே தண்டவாளம் தகர்க்கப்பட்டது என்றும், சரியான நேரத்தில் தகவல் அளிக்கப்பட்டதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது என்றும் செய்திகள் வந்துள்ளனவே?

! அந்தச் செய்தியை வாசித்த போது எழுந்த மகிழ்ச்சியும் ஆறுதலும். ஆனால், சமயோசிதமாகச் செயல்பட்ட பொறுப்புள்ள ரயில்வே ஊழியர்களுக்கு வெகு

நீங்கள் கேட்டவை - தராசு

❑ ரூ. 150 பரிசு பெறுபவர்:
வி.நிர்மலா, மும்பை-81

✱ ரூ. 75 பரிசு பெறுபவர்:
என்.காளிதாஸ், சிதம்பரம்

மதியாகத் தலா ஐயாயிரம் ரூபாய் மட்டுமே வழங்கப் பட்டதை அறிந்து வருத்தம் ஏற்பட்டது. விபத்து நிகழ்ந் திருந்தால் நஷ்டஈடாக எவ் வளவு தரவேண்டியிருந்திருக் கும் என்பதைக் கூட ரயில்வே நிர்வாகம் யோசிக்கவில் லையே!

● என்.காளிதாஸ், சிதம்பரம். ★

? பாகிஸ்தானில் இருபது தலிபான் தீவிரவாதிகள் விடு தலை செய்யப்பட்டது பற்றி...?

! இதில் ஆச்சர்யமே இல்லை. பாக் உளவுத் துறை யான ஐ.எஸ்.ஐ.க்கும் தலிபா னுக்கும் இடையே உள்ள நெருங்கிய உறவை - தொடர்பை லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆதாரபூர்வ மாக அண்மையில் அம்பலப் படுத்தியிருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு, பாகிஸ் தானை நம்பிக் கொண்டிருக்கும் அமெரிக்கா அசடு வழியப்போகிறது. இந்தியாவோ, முன்னிலும் அதிக ஆபத்தைச் சந்திக்கப் போகிறது.


✱ சாடும் அதிதி


✱ தேடும் ஆதாயம்

● டி.ஜெய்சிங், கோவை

? கொடாக்கண்டன் விடாக் கண்டன் என்றால் தற்போது யார்?

! கொடாக்கண்டன்: பிஹாருக்குச் செய்த நிதி உதவியை விளம்பர மாக்கி அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்யும் மோடி. விடாக் கண்டன்: அதைக் கடுமையாக ஆட்சேபித்துக் குரல் எழுப்பும் நிதிஷ் குமார்.

● கே.சண்முகம், ஆதமங்கலம்புதூர்

? ஜெயலலிதா தமக்கு 63 வயது ஆகிவிட்டது என்றும், "பக்குவப்பட்டுவிட்டேன்; தோல்விக்கான காரணங்களை யார் எழுதிப் போட்டாலும் படிப்பேன்" என்றும் கூறியுள்ளது பற்றி?

! இத்தனை காலம் பக்குவம் இல்லாமலிருந்ததை ஒப்புக் கொண்டதற்காகப் பாராட்டலாம். ஆனால், இப்போது பக்குவம் அடைந்துவிட்டதை அவர் இனிதான் நிரூபிக்க வேண்டும்.

● மு.மதிவாணன், அரூர்

✱ சீறாத...



✱ ...சிங்கங்கள்!



? "தி.மு.க. மட்டுமே உண்மையான திராவிட இயக்கம்; மற்றவை எல்லாம் போலி" என்கிறாரே கருணாநிதி?

! அடக் கடவுளே! இதைக் கேட்டுக்கிட்டு மௌனமாயிருக்கிற நிலைமை திராவிடர் கழக வீரமணிக்கு ஏற்பட்டிருக்கு பாருங்க!



உலகத் தமிழ் செம்மொழி மாநாடு ஜுன் 23, 27 - 2010, கோவை.

புரியாத குறளுக்கும் பொருள்கூறிக்

குறளாய்ந்தபுலமையால் பேர் பெற்ற புலவராம்

கலைஞர்

அழைக்கிறார் வாரீர்! வாரீர்!!

BENZE VACCATIONS CLUB

COIMBATORE ERODE ECR MOUNTROAD



மெய்ப்பட்ட கனவு

மாண்புமிகு தமிழக முதல்வர்: கலைஞர் மு. கருணாநிதி

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு என்ற வகையில், நாம் நடத்திடப் போவது முதல் மாநாடாகும். நமது தமிழ்மொழி செம்மொழி என்பதற்கான அனைத்துத் தகுதிகளையும் நிரம்பவே பெற்றிருப்பதால், அதனைச் செம்மொழி என்று அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று, இன்று நேற்றல்ல, ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதிமாற் கலைஞர் அவர்களால் குரலெழுப்பப்பட்டது. அன்று எழுப்பப் பட்ட அந்தக் குரல் - தமிழ்க்குரல். மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாகக் காலப்போக்கில் தமிழறிஞர்களின் குரலாக, தமிழ் ஆர்வலர்களின் குரலாக, தமிழ்ச் சமுதாயத்தின் குரலாக, அரசியலரங்கத்தில் ஆற்றல் செறிந்த குரலாக உருப்பெற்று, அந்தக் குரலைக் கேளாக்காதினர் மதித்திடத் தவறி விட்டாலும், செவித்திறனும் சீர்த்த பண்பும் உடையோர் அதனை மதித்துப் போற்றி, அந்தக் குரலின் மாண்பமைந்த நியாயத்தை உணர்ந்து, தமிழ் செம்மொழியே என இந்தியத் திருநாட்டளவில் அங்கீகாரம் செய்து பிரகடனப்படுத்தப்பட்ட நாள் 12.10.2004.

1911-ல் துவங்கப்பட்ட தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கம் - செம்மொழி வரலாற்றிற்கு வழங்கியுள்ள மிகச் சிறப்பான பங்களிப்பு போற்றத்தக்கது மட்டுமல்ல; புவியில் வாழும் நாள் வரை தமிழர்களால்

மறக்க முடியாததுமாகும். தொடங்கிய காலம் முதல், தம் வாழ்நாள் இறுதிவரை அதன் தலைவராக இருந்து அரும்பணி யாற்றியவர் தமிழறிஞர் த.வே.உமா மகேசுவரம்பிள்ளை. அதனால்தான் 18.2.06 அன்று உமாமகேசுவரனார் அஞ்சல்தலை வெளியீட்டு விழாவில், "மற்ற அறிஞர்களை விட இவரது பெயர் அதிகமாக நினைக்கப்பட வேண்டிய காலகட்டம் இது. காரணம், தமிழ் செம்மொழி என்று எண்ணினால் பரிதிமாற்கலைஞருக்கு அடுத்து, நினைவுக்கு வரவேண்டிய பெயர் உமாமகேசுவரனார் பெயர்தான். அவர்தான் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில், தமிழ் செம்மொழி ஆக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியவர். இல்லையேல், தமிழ் செம்மொழி ஆவதற்கு எந்த ஆதாரத்தை வைத்து நாம் மத்தியிலே இருக்கிற அரசோடு பேச முடிந்தது" என்று பேசினேன்.

நுண்ணிய ஆய்வுக்குப் பிறகு, தமிழ் செம்மொழியே என மொழி அறிஞர்கள் அனைவரும் ஏற்றுப் போற்றும் வகையில், உரிய சான்றுகளுடன் "உலகின் முதன்மையான செம்மொழி (The Primary Classical Language of the World) என்ற அரியநூலை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டவர் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள். லெமூரியாவை மூலமாகக் கொண்டுள்ள மொழியான தமிழ்மொழி, மிகப் பெருமளவுக்கு செழித்து வளர்ந்துள்ள செம்மொழியாகும் என்ற கருத்தை, உரிய சான்றுகளுடன், விளக்கியவர் பாவாணர். அவர் எடுத்துவைத்த ஆதாரங்கள், வடமொழி மற்றும் ஆங்கிலப் புலமைமிக்கோரையும் பெரிதும் ஈர்த்து ஏற்றுக்கொள்ளச் செய்தன.

★ நான்காவது முறையாக நான் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது, தமிழ் செம்மொழி என்று உரிய முறையில் நிலைநாட்டி, மத்திய அரசில் கோரிக்கை வைப்பதற்கென ஆசியவியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குனர், முனைவர் ஜான் சாமுவேல் அவர்களால் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அதை முனைவர் ச.சத்தியலிங்கம், முனைவர் வா.செ.குழந்தைசாமி, திரு.மணவை முஸ்தபா, முனைவர் அவ்வை நடராஜன், முனைவர் பொற்கோ போன்ற வல்லுனர்கள் ஏற்றுக் கொண்டனர். தமிழைச் செம்மொழியாக்க வேண்டும் என்று கழக அரசின் சார்பில் அனுப்பப்பட்ட இந்த அறிக்கை மைசூரிலுள்ள இந்திய மொழிகளின் நடுவண் ஆணையத்திற்கு பரிசீலித்துக் கருத்துரைக்குமாறு அனுப்பப்பட்டது.



★ தேவநேயப் பாவாணர்

★ அமெரிக்காவில் உள்ள பர்க்லி நகரில் அமைந்துள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 1975 முதல் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்து வருபவர் ஜார்ஜ் எல்.ஹார்ட். பேராசிரியர் இ.மறைமலை கேட்டுக் கொண்டதற்கிணங்க, 2000 ஏப்ரல் திங்களில் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்களின் தமிழ்மொழியைச் செம்மொழியெனக் கூறும் நிலைப்பாடு பற்றிய அறிக்கை- உலகெங்கிலும் உள்ள கல்வியாளர்களைப் பெரிதும் ஈர்த்தது. ஆங்கிலத்தில் வரையப்பட்ட அந்த அறிக்கை தமிழ்ச் செம்மொழி

வரலாற்றில் ஆணிமுத்தை ஒத்த அத்தியாயமாகும். "தமிழ் ஒரு செவ்வியல் மொழி" என்ற கருத்தை நிலைநாட்ட, நான் இது போன்ற ஒரு கட்டுரை எழுத வேண்டியுள்ளது என்ற எண்ணமே எனக்கு இயல்புக்கு மாறானதாகத் தோன்றுகிறது. இச்செயல் எப்படியிருக்கிறது என்றால், "இந்தியா ஒரு மிகப் பெரிய நாடு; இந்து சமயம் உலகின் மிகப் பெரிய சமயங்களில் ஒன்று" என்னும் கூற்றை நிலைநாட்ட முற்படுவது போன்றுள்ளது" என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டார் ஹார்ட்.

★ "முக்கியமான உலக மொழிகளின் மொத்த எண்ணிக்கை அறுநூறு. அதிலே இலக்கணம், இலக்கியம் உடைய மொழிகள் முந்நூறு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றை உடைய மொழிகள் ஆறு. அவை தமிழ், சீனம், சமஸ்கிருதம், லத்தீன், ஹீப்ரு, கிரீக். தமிழ்மொழி ஒன்றுதான் மனிதச் சிந்தனைகளை, நுண்ணிய உணர்வுகளைப் பிசிறில்லாமல், அழுத்தம் திருத்தமாகத் துல்லியமாக உணர்த்தும் ஆற்றல் கொண்ட மொழி என்று மொழியியல் தந்தை டாக்டர் எமினோ கூறியிருக்கிறார். ஐரோப்பாவை மொழி வழியிலே அறிந்து கொள்ள வேண்டுமென்றால், இலத்தீன், ஹீப்ரு, கிரீக் மொழிகளின் துணை தேவைப்படுவதைப் போல, இந்தியாவை அறிந்து கொள்ள தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இருமொழிகளின் துணை தேவை. இந்திய மொழிகளுக்குத் தாயாக இந்த இரு மொழிகள்தாம் உள்ளன.

★ கால்டுவெல்



★ பரிதிமாற் கலைஞர்



★ திராவிட மொழி ஒப்பிலக்கணம் கண்ட கால்டுவெல் என்கின்ற பேரறிஞர், அவரைத் தொடர்ந்து பல ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு, தமிழ் மொழி செம்மொழி ஆக்கப்பட வேண்டுமென்று முதன் முதலாக் குரல் கொடுத்த பரிதிமாற் கலைஞர், அவர்களைத் தொடர்ந்து தமிழ்ச் சங்கங்கள் பல; தமிழ்ப் புலவர்கள் பலர்; தமிழ்ப் பேரறிஞர்கள் பலர்; இப்படி நூற்றுக்கணக்கில், ஆயிரக்கணக்கில், இந்த ஒரு நிலையினை நாம் எய்துவதற்காகப் பாடுபட்டிருப்பதை எண்ணிப் பார்க்கும்போது, அவர்களுக்கெல்லாம் தெரிவிக்க வேண்டிய பாராட்டுதல்களை, வழங்க வேண்டிய நன்றியை என் வாயிலாக வழங்கி வருகிறார்கள். நான் ஒரு கருவி; இந்தக் கருவியைத் தமிழ்நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். தமிழர்களின் நூற்றாண்டுக் காலக் கனவு நனவானது. தமிழ் செம்மொழியெனப் பிரகடனமாயிற்று. செம்மொழிக்கு நாம் அடுத்தடுத்து ஆற்ற வேண்டிய பணிகள் அணி, அணியாக உள்ளன. அவற்றுக்காக நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்வோம்.

('செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்' என்ற தலைப்பில் முதல்வர் எழுதிய ஏழு கடிதங்களிலிருந்து...)

தொகுப்பு: ப்ரியன்



palamsilk.com
மனம்மயக்கும்
பட்டின்
பாவனைகள்
ஸ்ரீ பாலம் சில்க் சாரீஸ்
2432 3034 | www.palamsilk.com
Palam



அமரர் கல்கி நினைவு அறக்கட்டளை

மாணவமணிகளுக்கு உதவி: ரூ.4,50,000/-

சென்ற ஆண்டைவிட நடப்புக் கல்வி ஆண்டுக்கு (2010 - 2011) ரூ.40,000 அதிகரித்து, ரூ.4,50,000/- உதவித் தொகைகளாக பின்வருமாறு விநியோகமாகும்.

* ஒருவருக்கு ரூ.5,000/- வீதம், பத்து பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சி மாணவர்களுக்கு ரூ.50,000/-.
* ஒருவருக்கு ரூ.3,000/- வீதம், 65 பட்டப் படிப்பு மாணவர்களுக்கு ரூ.1,95,000/-.
* ஒருவருக்கு ரூ.2500/- வீதம், 72 மேல் நிலைப்பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்கு ரூ.1,80,000/-.
* ஒருவருக்கு ரூ.5000/- வீதம் சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப் படும் ஸ்பாஸ்டிக், டிஸ்லெக்ஸிக், ஆட்டிஸ்டிக் போன்ற பாதிப் புக்கு உட்பட்ட மாணவர்கள் ஐந்து பேருக்கு ரூ.25,000/-.
* இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிகளில், மூன்று மேல்நிலை மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற மாணவ மாணவியர் விண்ணப்பிக்கலாம்.

முக்கிய நிபந்தனைகள் :

❖ விண்ணப்பங்களை மாணவர்கள் தங்கள் கைப்பட ஒரு கடிதம் வடிவில் எழுத வேண்டும். தட்டச்சு, கம்ப்யூட்டர் கடிதங்கள் நிராகரிக்கப்படும். பார்வையற்ற மாணவர்கள், பிறர் எழுதித் தர கைநாட்டு பதிக்கலாம். சிறப்புக் கல்விப் பயிற்சி தேவைப் படும் (ஸ்பாஸ்டிக் போன்ற) மாணவர்கள் சார்பில் பெற்றோர் விண்ணப்பிக்கலாம்.

❖ விண்ணப்பத்துடன் பின்வரும் நான்கு அம்சங்களையும் உறுதி செய்து, கல்வி நிலையத்தின் முதல்வருடைய முத்திரை, கையெழுத்துடன் சான்றிதழ் தேவை:

(அ) அரசு அங்கீகாரம் பெற்ற கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றுள்ளது குறித்து (தாற்காலிக அனுமதி செல்லாது).

(ஆ) பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவர் / மாணவி எனவும் படிப்பில் சிறந்து விளங்குபவர் எனவும் உறுதியளித்து.

(இ) உடல் ஊனமுற்றவர் எனில் அது பற்றிய விவரம்.

(ஈ) சென்ற ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண் பட்டியலின் ஜெராக்ஸ் நகல் - முதல்வரின் முத்திரை, கையெழுத்துடன்.

தபால் மூலம் மட்டுமே விண்ணப்பங்களை அனுப்பவும். கூரியர் கூடாது. நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். தேவையற்ற சான்றிதழ்களை அனுப்பு தல் கூடாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விவரம் தெரிவிக்கப்படும். மற்றபடி கடிதப் போக்குவரத்து ஏதும் கிடையாது. சான்றிதழ்கள் / நகல்கள் திருப்பி அனுப்ப இயலாது.

உதவித் தொகை பெறத் தகுதி உடையவர்களைத் தேர்வு செய்வதில் அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளை,
புது எண் 14, நான்காவது பிரதான சாலை,
கஸ்தூர்பா நகர், அடையாறு,
சென்னை - 600 020.

விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி: ஜூலை 31, 2010



கல்கி



2010 ஜூன் 27
விக்ருதி ஆனி 13
மலர் : 68
இதழ் : 48

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - *பாரதியார்*

அள்ளிச் சென்ற ராஜபக்ஷ


ராஜபக்ஷ வந்து சென்ற கையோடு, தமிழகத்தில் மலைக் கோட்டை எக்ஸ்பிரஸ் ரயிலைத் தகர்க்க சதி முயற்சி நடந்திருக் கிறது. அம் முயற்சி தோல்வியுற்றது நமது மத்திய மாநில அரசுகளின் அதிர்ஷ்டம் என்றே கூறவேண்டும்!


இலங்கைக்குப் பல்வேறு வகையான உதவிகளை வள்ளன் மையுடன் வாரி வழங்கியுள்ள இந்திய அரசு, அங்கே மறுவாழ்வுக் கும் ஜனநாயக உரிமைகளுக்கும் காத்துக் கிடக்கும் தமிழர்களின் நலன் குறித்து, உறுதிபட ராஜபக்ஷவிடம் பேசத் தவறியிருப் பதோ மிகப் பெரும் துரதிர்ஷ்டம்.

இலங்கைத் தமிழர்களின் புனர்வாழ்வுத் திட்டங்களை மேற் பார்வையிட, நடுநிலையான ஓர் இந்தியக் குழுவுக்கு அனுமதி வேண்டியிருக்கலாம். இலங்கை அதிபர் அதற்கு ஒப்புக்கொள்ள மறுத்திருக்கக்கூடும்; என்றாலும், இந்தியாவின் நிலைப்பாடு உலகறியப் பிரகடனமாகியிருக்கும்; தமிழர்களிடம் ராஜபக்ஷ காட்டிவரும் பாரபட்சப் போக்கும் உலகறிய உறுதிப்பட்டிருக்கும்.

இப்போதோ, இலங்கைத் தரப்பில் கூறப்படும் விளக்கங்களை நாம் மௌனமாக ஏற்கவேண்டியிருக்கிறது. அள்ளிச் சென்ற ராஜபக்ஷ, தமிழர்களுக்குக் கிள்ளிக் கொடுக்கக் கூட யோசிப்பார்.

தமிழக அரசும் இந்த விஷயதில் போதுமான அளவு அழுத்தம் கொடுக்கவில்லை. முதல்வர், பிரதமருக்குக் கடிதம் எழுதியது வரவேற்கத்தக்கது; ஆனால் அது போதாது. அவர் அழுத்தம்





கொடுத்தால் மறுக்க இயலாத நிலையில் மத்திய அரசு இன்று இருக்கிறது. அந்த அரசியல் ஆதாயத்தை, ராஜபக்ஷயவை நிர்ப்பந்திக்கப் பயன்படுத்தாமல் விட்டது, இலங்கைத் தமிழர்களின் துயரத்தையும் கஷ்டங்களையும் நீட்டிக்கப்போகிறது.

அது மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களின் அதிருப்தியும் அவர்கள் அனுபவிக்கும் அவலங்களும், தனித்தமிழ் ஈழப் போராளிகளின் கரங்களுக்குத்தான் வலுசேர்க்கப் போகின்றன. இதனால் தமிழகத்தின் அமைதி கேள்விக்குறியாகிப் போகும். அதன் முதல் அறிகுறியே விழுப்புரம் அருகே நிகழ்ந்த ரயில் பாதை தகர்ப்பு.

தமிழகக் கட்சிகள் பலவும், தங்கள் அரசியல் ஆதாயம் கருதி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான வன்முறைப் போராட்டத்துக்குக் குரல் கொடுத்து வருகின்றன. முதல்வரால் அக்கட்சிகளைக் கட்டுப்படுத்த இயலவில்லை. வைகோ, நெடுமாறன், சீமான் போன்றோர் வன்முறை ததும்பப் பேசுவதைக் கண்டனம் செய்யக்கூட அவரால் முடியவில்லை. உடனே 'தமிழ் விரோதி' முத்திரை அவர் பேரில் குத்தப்படும் என அஞ்சுகிறார்! ஆனால், இத்தலைவர்களின் பேச்சினால் இங்கே மறைந்தும் பதுங்கியும் உள்ள விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களின் மனம் துணிவு பெறுகிறது; கரமும் பலம் பெறுகிறது. இவர்கள் இன்னொரு மாவோ இயக்கமாக வலுப்பெறுவதற்கு அதிக காலம் ஆகிவிடாது.

இந்த அபாயத்திலிருந்து தமிழகத்தைக் காப்பாற்ற பிரதமரும் முதல்வரும் உடனடியாகச் செயல்பட வேண்டும். இடம்பெயர்ந்த ஈழத் தமிழர் புனர்வாழ்வை உறுதி செய்வதுடன், அனைத்து ஈழத் தமிழர்களுக்கும் முழுமையான ஜனநாயக உரிமைகளை வழங்கவும் ராஜபக்ஷயவை நிர்ப்பந்திக்க வேண்டும்.

ஒத்துழைப்பு என்பது ஒருதலைப்பட்சமானது அல்ல என்பதை முதலில் இந்திய அரசு புரிந்துகொண்டு இலங்கை அரசுக்கும் புரிய வைக்கட்டும்! ●




அன்பு வாசகர்களே!
உங்களுக்குத் தெரியுமா...
நான் தமிழ்ல மட்டுமில்ல இங்கிலீஷ்லேயும் கவிதை எழுதுவேன்...
காவியம்கூட எழுதியிருக்கேன்... நீங்க படிச்சதில்லையா...
அப்ப இந்தத் தொடரைப் படிங்க... உங்களுக்குப் புரியும்..
வாரம்தோறும் நமக்குள்ளே ஃப்ரெண்ட்ஷிப்பை உருவாக்கும்
காலை எழுந்தவுடன் சிரிப்பு!
11.07.2010 இதழ் முதல்...
இப்படிக்கு
ஊர்வசி

மொழி, சமயங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. சமயமும் மொழிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. ஒன்றையொன்று சார்ந்து நிற்காமல், இவை இரண்டும் இணைந்து நின்று வளம் சேர்த்ததுதான், தமிழ் மொழிக்கும் சமயத்துக்கும் உள்ள மாறாப் பிணைப்புக்குக் காரணமாய் இருந்திருக்கிறது.

இந்து சமயத்தின் கூறுகளான அறுவகைச் சமயங்களும் தமிழ் மொழிக்கு வளம் சேர்த்தன. விரிந்து பரந்த இந்து மதம், தனது ஆழத்தையும் பரப்பையும் தமிழ் மொழிக்குச் சொந்தமாக்கியது.

''கனித் தமிழ்ச் சொல்லினால் இனிதுனை அனுதினம் எப்படிப் பாடினாரோ'' என்று அப்பரும், சுந்தரரும், ஆளுடைப் பிள்ளையும், அருள் மணிவாசகரும் பொருளுணர்ந்து பாடிய தேவாரத் திருவாசகத்தைப் பார்த்து வியந்து போகிறார், சுத்தானந்த பாரதி! வில்லிப்புத்தூர் கோதை சொன்ன சங்கத் தமிழ் மாலை முப்பதும், தன்னுள் அடக்கிய திவ்யப்பிரபந்தங்கள், திருமூலரின் திருமந்திரம், வள்ளலாரின் திருஅருட்பா என்று... எண்ணி மாளாத அளவுக்குக் கொட்டித் தீர்த்துவிட்டார்கள்.

வேதம், உபநிஷதம், இதிகாசம், புராணங்கள், தலவரலாறுகள், தொண்டர் புராணங்கள், சித்தர் இலக்கியங்கள் என்று பரந்து விரிந்து கொண்டே இருக்கும் ஒரு களத்தை, தமிழ் மொழி தன்பால் அரவணைத்துக் கொண்டது. மாணிக்கவாசகர், அண்டப் பெருவெளி



yஇல் உலாவரும் அறிவியல் அதிசயங் களைத் திருவாசகத்தில் பதிவு செய்ததும், பெரியாழ்வார் அக்கார வடிசில் சமைக்கும் பதத்தைத் தமது பாசுரத்தில் பதிவு செய்ததும் இதனால்தானே சாத்திய மாயிற்று! தெருவில் சின்னப் பயல்கள் சுழற்றி விளையாடும் பம்பரத்தின் சுழற்சி யையும், பேரண்டத்தில் சுழன்று வரும் கோள்களின் சுழற்சியையும் ஒரு சேரக் கற்பனை செய்த, திரிகூட ராசப்பக் கவி ராயரின் குற்றாலக் குறவஞ்சியின் வரி களில்தான் எத்தனை வளம்!

''சாட்டி நிற்கும் அண்டமெலாம் சாட்டையிலாப் பம்பரம்போல் ஆட்டி வைக்கும் குற்றாலத்து அண்ணலார்'' என்று அவர் பாடும்போது, எவ்வளவு பரந்த வீச்சு என்று அதிசயிக்கிறோம். இயற்கையின் உன்னதங்களில் எல்லாம் இறைவனையே தரிசித்தார்கள் தமிழர்கள். ''உண்ணும் சோறு; பருகும் நீர்; தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணனே!'' பலா மரத்தில் காய்த்த பலாக்கனிகளும், அதில் பொதிந்திருக்கும் சுளைகளும் விதைகளும் எல்லாமே சிவலிங்க சொரூபமே!

சித்தர் இலக்கியங்களில், விஞ்ஞான அறிவும் மெய்ஞான நிலையும் கைகோத்து

பகுத்தறிவை வளர்த்த தெய்வத்தமிழ்!

த.கி.நீலகண்டன்

நிற்கின்றன. ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'' என்னும் வள்ளலார் வாக்கில், மனிதாபிமானமும் ஜீவகாருண்யமும் பொலிகின்றன. ''நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக் கையில்? சுட்ட சட்டி சட்டுவம் கறி சுவை அறியுமோ?'' என்பது போன்ற பழுத்து முதிர்ந்த பகுத்தறிவுக் கொள்கை களுக்குச் சித்தர் பாடல்கள்தாம் மூலமாக விளங்குகின்றன என்பது பலருக்குத் தெரியுமோ, தெரியாதோ!

சங்க இலக்கியங்கள் தமிழ்கூறும் நல்லுலகை ஐவகை நிலங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தெய் வத்தை அடையாளம் காட்டியது. தமிழ்ப் புலவர்களின் நட்பையும் கேண்மையையும் விரும்பி, இறைவனே நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினான் காண்!'' என்று தேவாரம் பேசுகிறது. இறைவனே சங்கப் புலவர்களில் முதன்மைப் புலவனாக வந்த மர்ந்து தமிழ் வளர்த்தான் என்றும், குறுந் தொகையின் ''கொங்குதேர் வாழ்க்கை'' எனத் தொடங்கும் பாடல் அவன் இயற்றி யதே என்றும் பேசப்படுகிறது. ''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக'' என்று கேட்டு அதன்படி மணி வாசகர் இயற்றிய திருக்கோவையார் தான் 'விரும்பிக் கேட்டவை' நிகழ்ச்சி யின் முன்னோடி! சுந்தரரின் ஏசல் மொழிகளைக் கூட அதன் தமிழின் சுவைக்காக வேண்டிப் பெற்றான் இறைவன்!

முருகன் கச்சியப்ப முனி வரின் கந்தபுராணக் காப்புச் செய்யுளில், இலக்கணப் பிழை என்று ஆட்சேபித்து புலவர் களுக்கு, புணர்ச்சி விதியின்



கடவுள் மறுப்புக் கொள்கையை அடித்தளமாகக் கொண்ட இராவண காவியத்துக்கே கம்பராமாயணம் தானே தூண்டு கோல்?

புலப்பாடல் பொருள்களைச் கட்டிக் காட்டிப் புரிய வைத்தான். கம்பரது வாக்கில் வந்து விழுந்து விட்ட 'துமி' என்னும் சொல், வழக்கில் இல்லாத சொல் என்று புலவர்கள் மறுத்துரைக்க, சொல்லுக்கும் பொருளுக்கும் ஆதாரமாய் விளங்கும் கலைமகளே, தயிர் கடையும் ஆயர்குலப் பெண்ணாக வந்து 'துமி' என்ற சொல் எளிய மக்கள் வாயில் புழங்கும் சொல்லே என்று நிலைநாட்டினாள்! இந்தக் கதைகள் எல்லாம் வெறும் கற்பனை என்றும் புனைந்துரை என்றும் சொல்பவர்கள் சொல்லட்டும்! தெய்வமே இறங்கிவந்து தமிழ்ப்புலவர்களோடு கலந்துறவாடி, அவர்களின் படைப்பில் பங்கேற்று, அவற்றில் ஒரு தெய்விக அம்சத்தைத் தோற்றுவித்தது என்றால், அது புனைந்துரையானாலும் புகழுரைதானே! இம்மாதிரியான புனைந்துரைகளால் புராணங்கள் உருவானதால் 'நன்கு புராணங்கள் செய்தார்; அதில் நல்ல கவிதை பல தந்தார்'' என்று பாரதி நிறைவடைந்து பேசுகிறானே! அது போதாதா?

இசை, இலக்கியம், ஓவியம், சிற்பம், நாட்டியம், நாடகம், இயற்கையின் எழில், இல்லறத்தின் மாண்பு, நீதி நேர்மை கலந்த அரசியல் என்று உலக வாழ்வின் பல்வேறு பரிமாணங்களைச் சமயம் தன்னுள்ளே கொண்டிருப்பதால், அதைப்பாடும் இலக்கியங்களுக்கும் அத்தகைய பரிமாணங்கள் கிடைத்துவிடுகின்றன. இவற்றை வைத்தே காவியங்கள் எழுந்தன! சிலப்பதிகாரம் முதலிய ஐம்பெருங்காப்பியங்களும், பின்னால் எழுந்த கம்பராமாயணம், பெரிய புராணம் போன்ற நூல்களும் இந்த அடிப்படையில்தான் உருவாகி, அழியாத்தன்மை எய்தின! சமணமும் பௌத்தமும் தமிழுக்குச் சேர்த்த வளங்கள் ஏராளம். கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற சமயங்களும் தமிழின் தெய்விகத் தன்மையால் ஈர்க்கப்பட்டன. அம்மொழி தந்த வளத்தினாலேயே, வீரமாமுனிவர் தேம்பாவணியையும், உமறுப் புலவர் சீறாப்புராணத்தையும் தமிழிலே எழுதி வைத்தனர். கவியரசர் கண்ணதாசன் ஏசு காவியம் இயற்றினார். சித்தர் பாடல்களின் வழியொட்டியே சந்தத் தமிழில் குணங்குடி மஸ்தான் சாகிபு பல பாடல்களை இயற்றினார். கொஞ்சம் அசந்தால் ''இது திருப்புகழோ'' என்றுகூட எண்ணிவிடுவோம்! அந்த அளவுக்கு சந்த நயம் சாகிபுவின் பாடல்களில்! இந்துமதம் என்ற வரையறைக்கு அப்பாற்பட்டு, தமிழ் மொழி அடைந்த தெய்விக வளத்தின் அடையாளங்கள் இவை!

ஏன், கடவுள் மறுப்புக் கொள்கையை அடித்தளமாகக் கொண்டு புலவர் குழந்தை இயற்றிய இராவண காவியத்துக்கே கம்பராமாயணம் தானே தூண்டு கோலாக இருந்திருக்க வேண்டும்! ●



COMPAQ
GET GOING
hp
சலுகை கொண்டாட்டம்
DESKTOP
CQ3223IX
Intel Dual Core Processor E5300 2.7GHz
1GB Ram DDR3
320 GB HDD
Super Multi DVD RW
Kbd | Optical Mouse
Inbuilt Card Reader
RED HAT LINUX OS.
1 YEAR WARRANTY
LAPTOP
CQ42-139TU
Intel Pentium Dual-Core
Processor T4500 (2.2 GHz)
1 GB DDR | 160 GB SATA
8X Double Layer DVD RW Writer
14.1" Widescreen (WXGA)
Free DOS | Bluetooth | Wireless LAN
Integrated Web Cam
1 YEAR WARRANTY
HP MINI 210-1085TU
Intel Atom Processor N 450 1.66GHz
1GB DDR 2 ram | 160 GB HDD
10.1" LED Backlit Wide Screen
Bluetooth | VGA out
1.3MP Cam | Wireless LAN
Digital Media Reader
Win7 Starter / Blue
1 YEAR WARRANTY
Buy any HP Laptop or Compaq Laptop / Desktop
get a Kodak CD14 8.2 MP Digital Camera
by paying just Rs.1700/-* Extra!
PRINTER
HP LASER JET-P1008
17ppm | 600X600DPI
ADF | PSCF
HP LASER JET
ALL IN ONE-M1136
600dpi,18ppm,32MB,PSC
HP OFFICE JET
ALL IN ONE-F4488
26/20PPM PSC
HP OFFICE JET
ALL IN ONE K209A
29/23 ppm 1200dpi, PSC
ECONOMICAL PRINTER
HP OFFICE JET
WIRELESS PRINTER OJ8500
600dpi,18ppm,32MB,PSC
SCHEMES
AVAILABLE
* Conditions apply
Buy Back offer Available
SRI LAKSHMI SYSTEM PRODUCTS
9A, Periyar Road, T.Nagar, Chennai - 17.
Ph: 2834 5811/ 1627 / 2834 2272. www.slsponline.in





"மணி சாரும் நானும் சேர்ந்து ஒரு படம் பண்ணணும்னு ரொம்ப நாளா பிளான் பண்ணிக்கிட்டிருந்தாலும், அது தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. கடைசியாகத் தமிழில் ராவணன் படத்தில் நடிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்புறம் திடீரென்று ஒரு நாள் 'இந்தி ராவண் படத்திலேயும் நடிக்கிறியா?' என்று அவர் கேட்டபோது, 'ஐயோ! என்னால முடியாது! எனக்கு இந்தி தெரியாது!' என்று மறுத்தேன். ஆனால் அவர் விடவில்லை. 'ஐஸ்வர்யாவுக்குக் கூடத்தான் தமிழ் தெரியாது! அவங்க ரெண்டு படத்திலேயும் நடிக்கலையா? நீ ரெண்டு ஆப்போசிட் டான கேரக்டரில் நடிக்கப்

நான் நம்பர் ஒன் இல்லை!

– விக்ரம்



போறே! இது ரொம்ப அபூர்வமான சான்ஸ்! முயற்சி பண்ணிப் பாரேன்' என்றபோது தயக்கத்துடன் சம்மதித்தேன்'' என்கிற விக்ரமின் கண்கள் அங்குமிங்கும் நகர்கின்றன.

''இதுவரை, இந்தி, தமிழ் இரண்டுக்கும் வெவ்வேறு ரசிகர்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அது தவறு என்பது எனக்கு சீக்கிரமே புரிந்து விட்டது. மும்பையில் என்னிடமே பலர், 'தமிழ்ல நீங்க ராவணன் ரோல்ல எப்படி நடிச்சிருக்கீங்கன்னு பார்க்கணும்னு ஆசையா இருக்கு; நான் நிச்சயம் தமிழ்ப் படத்தையும் பார்ப்பேன்'ன்னு சொன்னாங்க. ஷூட்டிங் ஸ்பாட்லயே அசிஸ்டன்ட் டைரக்டர்ஸ் சிலர், அடுத்தடுத்து நடிச்சாலும், கேரக்டர்ல நல்லா வித்தியாசம் காட்டி இருக்கீங்கன்னு பாராட்டினாங்க! இப்படி நடிப்புல வித்தியாசம் காட்டுறதுக்கு 'அந்நியன்' பட அனுபவம் கொஞ்சம் கைகொடுத்தது. தவிர, 'பிதாமகன்' மாதிரி இதையும் ஒரு நடிப்பு ஒர்க் ஷாப் போல உணர்ந்தேன்'' என்கிறார் ராமன் (எ) ராவணன் (எ) விக்ரம்!

''எனக்கு என் நடிப்பு ரொம்ப திருப்தியா இருக்கு. மணி சார் யூனிட்ல அசிஸ்டன்ட் டைரக்டர் ஒருத்தர், 'விக்ரம்! உங்களுக்கு நேஷனல் அவார்ட் நிச்சயம்! அப்படி வாங்கினா, என்னை உங்க செலவுல யூரோப் டூர் அனுப்பணும்னு சொல்லி இருக்காரு! நல்லது நடக்கும் என்று நம்புவோம்!'' என்கிற விக்ரமின் முகத்தில் ராமனாகவும் ராவணனாகவும் நடித்த திருப்தி தெரிகிறது.

''அந்நியன் படம் வெளியானபோது ஒரு பிரபல ஹீரோ, 'விக்ரமோட ஒரு படம் வெளிவர்ற டைம்ல, என்னோட ஏழு படம் ரிலீஸ் ஆகியிருக்கு. அவர் ஏழு ஸ்டெப் பின்னால இருக்காருன்னு சொன்னாராம். ஆனா, அந்நியன் ரிலீஸ் ஆனதும் அவரைவிட நான் நாற்பது ஸ்டெப் மேலே போயிட்டேன். ராவணனுக்கப்புறம் நான் இன்னும் மேலே போவேன்.


'படம் ஓடினால் நெம்பர் ஒன் என்பார்கள்; ஓடவில்லை என்றால் அந்த இடத்திலிருந்து தூக்கி எறிந்து விடுவார்கள். நிச்சயம் அதுபோன்ற நெம்பர் ஒன் இடத்தில் நான் இல்லை; எனக்கு இந்த நெம்பர் ஒன் ரேஸில் விருப்பமில்லை.

மறைந்து நூறு வருஷம் ஆன பிறகும், எம்.ஜி.ஆர்., சிவாஜி மாதிரி மக்கள் மனதில் நான் நிற்கணும்... அதுதான் என் ஆசை; லட்சியம் எல்லாம்!'' என்கிறார் மிகத் தெளிவாக.



- எஸ்.சந்திர மௌலி

3 கொடிமரம்



கண்டறியாதன கண்டேன்

ஆலய அமைப்பில், அருமையான அங்கம் கொடிமரம். பரமனின் அருளாட்சிக்கான அடையாளம்.

ஆலயத்தில் நடைபெறும் எந்த உத்ஸவமானாலும், கொடியேற்றத்துடன்தான் அது தொடங்கும். அப்படித்தான் தில்லை நடராஜப் பெருமான் திருக்கோயிலில், திருவிழாவுக்கான கொடியேற்ற முனைந்தார்கள். ஆனால், கொடி ஏறவில்லை! என்ன ஆயிற்று? ஒருவருக்கும் புரியவில்லை. குழம்பினார்கள்.

மதுரையில் புரிந்த திருவிளையாடல்களால் திருப்தியடையாத ஆடல்வல்லான், தில்லையிலும் ஒரு லீலை புரிந்தான். அசரீரியாகப் பேசினான்:

''கொற்றவன்குடி உமாபதியை அழைத்து வாருங்கள். கொடி ஏறும்.''

யாரவர்? சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் என்று சொல்லப்படும் பதினான்கு நூல்களில் எட்டு நூல்களை எழுதியவர். சந்தானக் குரவர்களில் ஒருவர். 'சிவஞான சித்தியார்' என்ற சைவ சித்தாந்த நூலை அருளிய அருள் நந்தி சிவத்தின் சீடரான மறைஞான சம்பந்தரை குருவாகக் கொண்டவர். குல ஆசாரத்தை விட்டவர் என்று ஒதுக்கப்பட்டவர். ஏன்?

தில்லையில் அருள்புரியும் ஆடல்வல்லானைத் தொட்டுப் பூஜிக்கும் உரிமை பெற்ற

தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே!

தீட்சிதர் குலத்தில் பிறந்தவர் உமாபதி சிவம் எனப்பட்ட உமாபதி சிவாச்சாரியார். ஒருநாள் வழக்கம்போல, ஆலயப் பூஜையை முடித்துவிட்டு இல்லத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் அவர். பல்லக்கில் அமர்ந்தவாறு அவர் செல்ல, பல்லக்கின் முன்னே தீவட்டி பிடித்துச் சென்று கொண்டிருந்தனர். இது அவருக்கு வழங்கப்பட்டிருந்த மரியாதை.

இந்தக் காட்சியை அங்கிருந்த ஒரு வீட்டின் திண்ணையில் அமர்ந்திருந்த துறவியொருவர் பார்த்தார். சற்றே விகசித்த முறுவலுடன் உரத்த குரலில் சொன்னார்:

'பட்ட கட்டையில் பகல்குருடு போகுது பார்!'

அந்தக் குரல் தெளிவாகக் கேட்டது உமாபதிசிவத்துக்கு! கேட்க வேண்டும் என்பதற்காகவே உரத்துச் சொல்லப்பட்டதுதானே? குரல் வந்த திசையைத் திரும்பி நோக்கினார். பரதேசிக் கோலத்தில் உட்கார்ந்திருந்த மறைஞான சம்பந்தரைப் பார்த்தார். பல்லக்கில் இருந்து கீழிறங்கி ஓடினார். அவர் முன் கைகட்டி நின்றார். நடப்பது புரியாமல் பார்த்துக்கொண்டே நின்றார்கள் பல்லக்கைத் தூக்கியவர்களும், தீவட்டி பிடித்தவரும்.

ஏனிப்படிச் செய்தார்? பட்டகட்டை என்பது பல்லக்கையும், பகல்குருடு என்பது தீவட்டி பிடித்துச் செல்வதையும் மட்டும்தான் குறிப்பிட்டதா? இல்லை. 'தன் ஆத்மாவை அறிந்து கொள்ளாத வரையில், மனித சரீரமும் பட்டகட்டைக்கு ஒப்பானதுதான். அந்தக் கட்டைக்குப் பார்வை உண்டு. ஆனால், தன்னை அறிந்துகொள்ளாத நிலையில்- அறியாமை நிலையில், அந்தப் பார்வை முழுமையானதல்ல;



ஸ்ரீநிவாச ராகவன்

குறைபாடுடையது' என்பதைத்தான் அந்தச் சொற்கள் உணர்த்தின.

கற்பூரம் போலத் தீட்சண்யமான புத்தி கொண்ட உமாபதிசிவத்துக்கு, இந்தச் சூட்சுமம் பளிச்சென்று புரிந்தது. அதனால் தான், மறைஞான சம்பந்தர் முன் கைகட்டி நின்றார். ஆனால், மறைஞான சம்பந்தரோ ஏதும் பேசாமல் எழுந்து நடந்தார். உமாபதிசிவம் அவரைப் பின் தொடர்ந்தார்.

ஓர் இல்லத்தின் வாயிலில் நின்றார் சம்பந்தர். அவரைப் பார்த்த மாத்திரத்தில், உள்ளே இருந்து வந்த பெண்மணி, பாத்தி ரத்திலிருந்து கூழை வார்த்தார். பாத்திரங் களைப் பயன்படுத்தாத மறைஞான சம்பந்தர், தம் கரங்களைச் சேர்த்து அந்தக் கூழை வாங்கிப் பருகினார். பருகும்போது, அவர் கையிலிருந்து, முழங்கை வழியே வழிந்த கூழை, 'குருவின் பிரசாதம்' என்று சொல்லிப் பருகினார் உமாபதி சிவம். 'குலாசாரத்தை விட்டவர்' என்று அவர் ஒதுக்கப்பட்ட காரணம் இதுதான்!

இந்த உமாபதி சிவாச்சார்யரைத்தான் அழைத்துவரச் சொன்னான் கூத்துகந்த பெருமான். சிதம் பரத்தை அடுத்திருந்த 'கொற்றவன்குடி'யில் தங்கியிருந்த உமாபதி சிவம் வந்தார். அம்பலக் கூத்தனின் அடிமலர்களைத் தொழுது பாடினார்:

'ஒளிக்கும் இருளுக்கும்
ஒன்றே இடம்; ஒன்று
மேலிடில் ஒன்று
ஒளிக்கும் எனினும்
இருள் அடராது
உள்ளுயிர்க் குயிராய்த்
தெளிக்கும் அறிவு
திகழ்ந்துளதேனும்
திரிமலத்தே



குளிக்கும் உயிரருள் கூடும்படிக்
கொடி கட்டினனே.''

- அடுத்தடுத்துப் பாடிக் கொண்டே வந்தார்... ஐந்தாவது பாடல் பாடிய நிலையில், தானாகவே கொடியேறியது. 'கொடிக்கவி' என்று குறிப்பிடப்படுவது இதுதான். கூத்தபிரான் இங்கே ஏற்றியது உமாபதிசிவத்தின் பக்திக்கொடியை மட்டுமா? தன்னேரில்லாத தமிழ்க் கொடியையுமல்லவா?

ஆடல்வல்லான் கொடிக்கவி கேட்க லீலை புரிந்தான் என்றால், நம்பி எம்பெரு மான் கொடிமரத்தை ஒதுங்கச் செய்து தரிசனமளித்தான். இவன் திருக்குறுங்குடி நம்பி. 'கைசிகப் பண்'ணில் தன்னைப் பாடி வழிபட்ட நம்பாடுவான் என்ற தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த பக்தனுக்காகக் கொடிமரத்தை ஒதுங்கச் செய்து காட்சி தந்தான். இன்றும் திருக் குறுங்குடியில் ஒதுங்கி நிற்கும் கொடி மரத்தைப் பார்க்கிறோம்.

நம்பி எம்பெருமானிடம் திருமங்கை மன்னனுக்கு பெரும் ஈடுபாடு உண்டு. திருநறையூர் நம்பி, திருமங்கையாழ்வாருக்கு முத்ரா தாரணம் என்னும் திருஇலச்சினை இட்டான். அதன் காரணமாகவே, பெரிய திருமடல், சிறிய திருமடல் இரண்டையும் திருநறையூர் நம்பி மீதே பாடினார் திருமங்கையாழ்வார். அதைப் பற்றி அரங்கத்தின் நம்பெருமாள் கேட்டதாகவும், அதற்கு 'மதில் இங்கே; மடல் அங்கே' என்று ஆழ்வார் பதில் சொன்னதாகவும் வழக்கு.

அதன் பிறகு, பரகாலனான திருமங்கையாழ்வார் கடைசியாக வந்து தரிசித்ததும், பாடியதும், அதைத் தொடர்ந்து திருநாட்டை எய்தியதும் இந்தத் திருக்குறுங்குடியில்தான்.

பொதுவாக மூலஸ்தானம், வாஹனம், பலி பீடம், கொடி மரம் இவை யாவும் ஒரே நேர்க்கோட்டில்தான் அமைந்திருக்கும். ஆனால், விதி விலக்கும் உண்டு. திண்டிவனத்தில் இருந்து பாண்டிச்சேரி செல்லும் வழியில் உள்ள திருவக்கரை சந்திரமௌலீஸ்வரர் ஆலயத்தில், இந்த நேர்க்கோட்டு மரபு இல்லை. ஆலயந்தோறும் கொடிமரம் இருக்கும் என்றாலும், அபூர்வமாகச் சில ஆலயங்களில் இரண்டு கொடிமரங்கள் இருக்கும். சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் கோயிலில் இரண்டு கொடிமரங்களும் உண்டு. இரண்டாவது கொடிமரம் இங்கே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நரசிம்மனுக்கு.

தில்லைக்கூத்தனின் கொடியை ஏற்றியது தமிழ்; அவன் எழுதிக் கையெழுத்திட்டதும் தமிழ்; அவனுடைய பஞ்சாட்சரப் படியை எட்டியதும் தமிழ்.

இதற்கு மாறாக, கொடிமரமே இல்லாத புகழ்பெற்ற ஆலயமும் உண்டு. அது கருங்கற்களையே காணமுடியாத கடற்கரையில், கல்லில் இழைத்த கவிதையாக விளங்கும் சிற்ப அற்புதங்களைத் தன்னகத்தே கொண்ட திருப்பெருந்துறையில்.


திருவாசகம் என்னும் அருளமுதம் பிறந்த தலமான, ஆவுடையார்கோயில் என்னும் திருப்பெருந்துறையில் கொடி மரம் இல்லை; நந்தி இல்லை; சண்டிகேஸ்வரர் இல்லை. ஏன்; சிவபிரானுக்கு லிங்கத் திருமேனியே இல்லை. அம்பிகைக்கும் உருவம் இல்லை. உத்ஸவம், விழாக்கள் எல்லாம் மணிவாசகப் பெருமானுக்குத்தான்! தன்னை வழிபடுவதை விடத் தன் பக்தனை வழிபடுவது சிறப்புக்குரியது என்று பரமன் உபதேசிப்பதன் அடையாளமாகவே விளங்கிக் கொண்டிருக்கிறது திருப்பெருந்துறை.

வியாசர் சொல்ல விநாயகர் எழுதியது மகாபாரதம் என்றால், மணிவாசகர் சொல்ல அம்பலக் கூத்தன் தன் கைப்பட எழுதியது திருவாசகம்! ஆக, தில்லைக் கூத்தனின் கொடியை ஏற்றியது தமிழ்; அவன் எழுதிக் கையெழுத்திட்டதும் தமிழ். அவனுடைய பஞ்சாட்சரப் படியை எட்டியதும் தமிழ். அட! 'என்னை நன்றாய் இறைவன் படைத்தனன், தன்னை நன்றாய் தமிழ் செயுமாறே' என்ற திருமூலர் பாடலின் உட்பொருள் இதுதானோ?!

(அடுத்த வாரம் நந்தி)

'உத்தமமான' சேவை!

● வெங்கடரங்கன்



உத்தமம் என்பது 'உலகத் தகவல் தொழில்நுட்ப மன்றம்' என்பதன் சுருக்கம். இந்த அமைப்பு 1977-ல் இணையத் தமிழை வளர்க்கத் துவங்கப்பட்ட ஒரு தன்னார்வ அமைப்பு. கலிஃபோர்னியாவில் பதிவு செய்யப்பட்ட இந்த அமைப்பு, இணையத்தில் தமிழை வளர்க்கச் சிறந்த பணியாற்றி வருகிறது. 1997 முதல் இதுவரை 8 சர்வதேச மாநாடுகளை நடத்தியிருக்கிறார்கள். இந்த முறை செம்மொழி மாநாட்டின் ஒரு அங்கமாக உலக இணையத்தமிழ் மாநாட்டை நடத்துகிறார்கள். தற்போதைய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு.வெங்கடரங்கனைச் சந்தித்தபோது...

உத்தமம் இணையத்தமிழுக்காக இதுவரை என்ன செய்திருக்கிறது?

"இந்த அமைப்பு, இணையத்தில் தமிழ் மொழியை எளிதாகக் கையாள விசைப்பலகை அமைப்பிலிருந்து, மைக்ரோசாஃப்ட் போன்ற பெரிய நிறுவனங்கள் மென்பொருளில் செய்ய வேண்டிய மாற்றங்களுக்கான யோசனைகள் வரை, பலவற்றிற்கு உதவியிருக்கிறது. கடந்த ஆண்டு ஜெர்மனியில் நடந்த உத்தமம் மாநாட்டில் ஆழ்ந்து விவாதிக்கப்பட்ட 'கணினி வழி காண்போம் தமிழ்' என்ற மையக் கருத்தைத் தொடர்ந்து, பலர் இணையம் வழி தமிழ் கற்பிக்க அவசியமான கருவிகளையும், மென்பொருட்களையும் உருவாக்கி வருகிறார்கள். இப்படிப் பல முயற்சிகளுக்கு உத்தமம் அடிகோலியிருக்கிறது."

கோவை மாநாட்டில் என்ன செய்யப் போகிறீர்கள்?

"பதினைந்து நாடுகளிலிருந்து முன்னூற்றைம்பது பேர் கலந்துகொள்கிறார்கள். நூற்றுஇருபது பேர் கட்டுரைகள் படிக்கின்றனர். மாநாட்டில் படிக்கப்படும் கட்டுரைகளைத் தொகுத்துப் புத்தகமாக்கி மாநாட்டின் துவக்கத்திலேயே வழங்கிவிடுவோம். இதை சி.டி.யாகவும் தரப் போகிறோம்.

கணினி வழியாகத் தமிழ் கற்றல்/கற்பித்தல், தமிழ் தேடு பொறிகள் (search engine) செல்ஃபோனில் தமிழ்/குறுஞ்செய்தி... இப்படிப் பல விஷயங்கள் விவாதிக்கப்படவிருக்கின்றன. இந்த இணைய மாநாட்டில், அரசும் பல மென்பொருள் நிறுவனங்களும் பார்வையாளர்களுக்குத் தங்கள் சி.டி.களை இலவசமாக வழங்க முன்வந்துள்ளன. உத்தமத்தில் தமிழார்வமுள்ள, இணையம் வழியே தமிழ் வளர்க்கும் பணியில், பங்களிக்க விரும்புபவர்கள் வரவேற்கப்படுகின்றனர். http://www.infitt.org என்ற தளத்தில் தொடர்புகொள்ளலாம்."

சந்திப்பு, படங்கள் : **ரமணன்**



மீடியா துறையில்

சாதிக்கலாம்! சம்பாதிக்கலாம்!
இதோ ஒரு வாய்ப்பு!

- **Diploma in Visual Communication**
- **Diploma in Sound Engineering**
- **Diploma in Digital Film Making**
- **Diploma in Animation**

கொஞ்சம் ஆர்வம்... கொஞ்சம் அக்கறை... நிறைய கனவு... நிறைய கற்பனை... இவை இருந்தால் போதும்! விஷ்வல் கம்யூனிகேஷன் டிப்ளோமா படித்து சினிமா, டிவி, எப்எம், விளம்பரம் போன்ற பொழுது போக்கு துறைகளில் கை நிறைய சம்பாதிக்கலாம். ஒரே வருடம்தான் வேலை வாய்ப்புகள் தொடர்பான உங்கள் லட்சியக் கனவுகள் நிச்சயம் நிறைவேறும். உங்கள் வாழ்க்கை வளமாகும். விஷ்வல் கம்யூனிகேஷன் டிப்ளோமா படிப்பின் மூலம் அந்த மாற்றத்திற்கான உத்தரவாதத்தைத் தருகிறது சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகில் உள்ள பிரிட்ஜ் அகாடமி.

வாரம் ஒரு சினிமா திரையிடப்பட்டு திரைக்கதை, எடிட்டிங், டப்பிங், மிக்சிங், மியூசிக், கிராபிக்ஸ், அனிமேஷன், உள்ளிட்ட திரைப்படத்தின் அத்தனை பிரிவுகள் பற்றியும் சொல்லித் தருகிறார்கள். இவற்றை நீங்களே பிராக்டிகலாக செய்வதற்கு வசதியாக அத்தனை அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்ட எடிட்டிங் ஸ்டுடியோ, டப்பிங் ஸ்டுடியோ, அனிமேஷன் ஸ்டுடியோ, உயர்தர கேமிரா என நவீன தொழில் நுட்ப வசதிகளையும் உள்ளடக்கியது தான் பிரிட்ஜ் அகாடமி.

மேலும் டிஜிட்டல் ஃபிலிம் மேக்கிங், சவுண்ட் இன்ஜினியரிங், போட்டோ கிராபி, வீடியோ கிராபி, ஜெர்னலிஸம், கிராபிக்ஸ் டிசைனிங், வெப் டிசைனிங், 3டி அனிமேஷன் போன்ற பல்வேறு டிப்ளோமா படிப்புகளையும் திறமையான ஆசிரியர்களை கொண்டு கற்றுத் தருகிறார்கள்.

எல்லாம் சரி, குறைத்த பட்ச தகுதி ? அது ஒரு விஷயமே அல்ல. இவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் சாதிக்க வேண்டும் என்கிற ஆர்வம் உங்களுக்குள் இருந்தால் அது போதும்!



Bridge academy for Media Studies

Bridge Academy (P) Ltd.

(Opp. to Nugambakkam Railway Station)
27, Sowrashtra Nagar, 5th Street, Chennai - 94.
http://www.bridgeacademy.in; Email : info@bridgeacademy.in
Phone : 044-23727111
Mobile: **97100 55668** Branches: Chennai & Pondy

கிரேஸியைக் கேளுங்கள்

● ரம்யா பிரகாஷ், சென்னை

தமிழில் மெஸேஜ் அனுப்ப செல்லில் வழியுண்டா?

சுஜாதாவைத் தொடர்ந்து விஞ்ஞான எழுத்தாளராக விளங்கும் இரா.முருகனைக் கேட்கிறேன்.... ''அய்யா முருகா விஞ்ஞானப் பழமே... செம்மொழியில் மெஸேஜ் அனுப்ப SIMமொழி உண்டா''!

● என்.பாலகிருஷ்ணன், மதுரை

மனிதனால் இயற்கைக்கு என்ன பயன்...?

மனிதன் மரம் வெட்டுவதைப் பார்த்தால், இன்னும் சில வருடங்களில் இயற்கையே ''இயற்கை எய்திவிடும்'' போலிருக்கிறதே!

● எம்.மிக்கேல்ராஜ், சாத்தூர்


ராமர் சிவனை வணங்கிய இடம் ராமேஸ்வரம். அது போல் சிவன் ராமனை வணங்கிய இடம் உள்ளதா?

உள்ளதா என்பதற்கு பதில் உள்ளம் தான். அனுமன் சிவனின் அம்சம். அனுமனின் உள்ளம் என்ற தியாகேஸ்வரத்தில் சிவன் ராமனை வணங்கினார்!

● அ.கு.கிருஷ்ணன், புதுவை

நம் காதுகள் இரண்டாக இருப்பது ஏன்?

ஒன்று மூக்குக் கண்ணாடி மாட்டிக் கொள்ள....இரண்டு, தேவையில்லாத சமாசாரங்களை ஒரு காதால் வாங்கி,





Sim

இன்னொரு காதல் விடுவதற்கு!

● **என்.சித்தாலட்சுமி, சென்னை**

கண்ணுக்குப் பயன்படும் கண்ணாடிக்கு மூக்குக் கண்ணாடி என ஏன் பெயர் வந்தது?

மோ(க்)கனிடம் கேட்ட இந்தக் கேள்வியை மூக்கனிடம் கேளுங்கள் NOSE only KNOWS....!

● **என்.கோமதி, நெல்லை**

ஏன் கிரேசி....கடவுள் யாருமே தாத்தா, பாட்டியாகவில்லை?

யார் சொன்னார்கள்... உ.வே.சாமினாதய்யர், அவ்வையார் இருவரும் தமிழ்த் தாத்தா, தமிழ்ப் பாட்டியாகப் பிறந்த தமிழ்க் கடவுள்கள்!

● **மீனா ரெங்கநாதன், மேற்கு மாம்பலம்**

மனைவிக்கு கணவன் ஆற்றும் கைம்மாறு என்ன?

கணவன் கைமாறாமல் இருப்பதுதான்!

● **பா.அசோக், திருவில்லிப்புத்தூர்**

இறந்த தன் கணவனை மீட்ட சாவித்திரியைப் போல், இக்காலப் பெண்கள் என்ன செய்ய வேண்டும்?

''அது வேண்டும் இது வேண்டும்'' என்று நச்சரித்து கணவனின் ஆகத்தை பற்றவைத்துச் சாவடிக்கும் சாவுத்திரியாக இல்லாமல் இருந்தாலே போதும்...!

● **ஸ்டெல்லா, சென்னை**

கடவுள் கல்லா?

தேடிக் கண்டுபிடித்தால் கல்-கண்டு!

● **பவானி கிருஷ்ணா, பெங்களூர்**

''பானை பிடித்தவள் பாக்கியசாலி'' என்கிறார்களே ஏன்?

மணிவயிறு என்ற பாண்டத்தில் மழலையைப் பத்து மாதம் சுமந்த பாக்கியசாலி அல்லவா....!

● **மஞ்சு வாசுதேவன், அபிரோலி**

டைம் பார்ப்பதற்குத் தோதானது கை கடிகாரமா இல்லை சுவர் கடிகாரமா?

தோதாக இருக்கு என்பதற்காக சுவர் கடிகாரத்தைக் கையில் கட்டிக் கொண்டு திரியமுடியுமா... இல்லை கை கடிகாரத்தை சுவற்றில் மாட்டி, ஒவ்வொரு தடவையும் ஏணி வைத்து ஏறி டைம் பார்க்க முடியுமா!

மொழி உண்டா?

● **தீபா, அரக்கோணம்**

பெண்கள் பஞ்சா, நெருப்பா?

நெருப்பை அணைக்கும் பஞ்சு!

● **மு.மதிவாணன், அரூர்**

வெள்ளிக் கிழமை மட்டும்தான் நல்ல நாளா?

வறுத்தெடுக்கும் வெய்யிலில் நமக்கு எல்லா நாளுமே FRY DAYதான்!

● **பழனி, திண்டுக்கல்**

காதல் சைவமா... அசைவமா...?


காதலிக்காக காத்திருக்கும்போது கொலை பட்டினி!

பொன் மயில் ஏறி வருவான் - ஐயன்
பன்னிரு கையால் தண்ணருள் சொரிவான்

செங்கதிர் வேலன் சிவனருள் பாலன்
மங்கை வள்ளி மணாளன்
பங்கய தாளன் தீன தயாளன் (பொன்)

புன்னகை தன்னால் இன்னல்கள் தீர்ப்பான்
புன்மை இருள் கணம் மாய்ப்பான்
கன்னலின் இனிய தண்தமிழ் அளிப்பான்
(பொன்)

அமரர் கல்கி



கன்னலின் இனிய தண்தமிழ்...

இருக்கும் நூறு



பிரபஞ்சன்

திராவிட இயக்கமும் அதன் அரசும் தமிழ்நாட்டில் தமிழ் உணர்ச்சியை ஏற்படுத்தின என்பது உண்மைதான். இந்த உணர்ச்சி, வளர்ச்சியை நோக்கித் திருப்பி விடப்பட்டதா என்றால் இல்லை. ஒரு மொழி, வெறும் உணர்ச்சியால் வளர்ந்துவிடாது. அப்படி வளர்ந்ததாக வரலாறு இல்லை. அறிவியல் பார்வையோடு, உலக மொழிகள் பற்றிய புரிதலோடு, பலப்பலத் துறைகளிலும் திட்டமிட்டுச் செயல்படுதலின் விளைவாகவே ஒரு மொழி வளர்ச்சியுறும்.

ஒரு மொழியை வளர்ந்த மொழியாக நான் எப்போது கருதுவேன்?


உலகத்துத் தொழில்நுட்ப அறிவியல், அறிவுச் செல்வம் அனைத்தையும், உலகத் தத்துவங்கள், உலக வரலாறுகள், உலக இலக்கியங்கள், உலகக் கலை நுட்பங்கள் அனைத்தையும், தமிழ்மொழி மட்டுமே அறிந்த ஒருவர், தமிழ் மூலம் கற்று அறியத்தக்க சாத்தியம் தமிழில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்ற நிலை வந்தால் மட்டுமே, தமிழ் வளர்ச்சியடைந்த மொழி என்று நான் கருதுவேன். என் இந்தக் கருதுகோளின்படி தமிழ் வளர்ந்த மொழி இல்லை என்பதே என் கருத்து. உலகத்தின் எந்த மூலையில் மனிதகுலத்தின் ஓரடி முன்னேற்றம் ஏற்பட்டாலும், அடுத்த நாளே அது என் மொழியின் ரத்தத்தோடு கலந்துவிட வேண்டும். உலகச் சமூகம் முன் எடுத்து வைக்கும் பாதங்களின் பத்து விரல்களில் ஒரு விரல் நம்முடையதாக இருக்க வேண்டும். ஏன் முடியாது?

இந்த லட்சியத்தை நோக்கி, நடக்கவிருக்கும் உலகச் செம்மொழி மாநாடு செயல்பட வேண்டும் என்பதே என் உள்ளார்ந்த விருப்பம். வெறும் உணர்ச்சிக் குப்பைகள், கனக விசயரின் தலையில் கல் சுமக்க வைத்த பழங்கற்பனைகள். கூட்டம், கூட்டம் பார்க்க வந்த கூட்டம், ரங்கராட்டினம், சோடா, கலர், சுண்டல், கண்காட்சி, ஊர்வலம், அவிழ்த்துவிட்ட கண்ணகியின் கூந்தல் - இவை எதுவும் தமிழை வளர்த்துவிடாது. தமிழ் வளர்ச்சி என்பது வேறு. செய்ய வேண்டிய சில அவசர அவசியக் காரியங்கள்.

அரசுகளை உருவாக்கிக் குடும்பம் என்ற நிறுவனத்தைக் கண்டு, மூன்று வேந்தர்கள், முன்னூறு குடிகள் என்று வாழ்ந்து, ஒரு ஆதி நாகரிகத்தைக் கண்ட தமிழ் இனத்துக்கும் மொழிக்கும் ஒரு முழுமையான, முறையான, அறிவியல் சார்ந்த வரலாறு எழுதப்பட்டிருக்கிறதா, இன்று வரை? இல்லை. இதுகுறித்து யாருக்கும் வெட்கம் இல்லை. இது குறித்துச் சிந்திக்குமா செம்மொழி மாநாடு?

ஒரு வரலாறு எழுதப்பட கல்வெட்டுகள், செப்பேடுகள் அனைத்தும், இலக்கிய ஆதாரங்களுடன் தொகுக்கப்பட வேண்டும். இந்தியாவிலேயே அதிகம் கல்வெட்டுகள் கிடைப்பது தமிழ்நாட்டில்தான். இந்த

இல்லாத ஆயிரம்!



● மார்க்யூஸ்



● மம்முது



● வேதநாயகம் பிள்ளை

நாட்டில்தான் இன்னும் சுமார் முப்பதாயிரம் கல்வெட்டுகள் எங்கோ இருட்சிறையில் கிடந்து உறங்குகின்றன. கல்வெட்டுகளைப் படி எடுத்து மக்கள்-அறிஞர்கள் பார்வைக்கு வைக்கும் முயற்சிகள் ஏதேனும் நடந்திருக்கின்றனவா? ஏன் இல்லை? அதுபோலவே செப்பேடுகளும்.

போர்ச்சுகீசியர், ஒல்லாந்துகாரர், டென்மார்க்காரர்கள், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் போன்ற தமிழக, இந்திய ஆக்ரமிப்பாளருடன் வந்த அலுவலர்கள், பாதிரிகள் தங்கள் தலைமை நிலையத்துக்கு எழுதின 300 ஆண்டு வரலாற்று ஆவணக் கடிதங்களைத் தொகுக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டனவா? இல்லை. நாட்டு வரலாறு எழுதப்படும் முன்பு: குமரி, நெல்லை, மதுரை தொடங்கி முக்கிய ஊர்களின் வரலாறு எழுதப்பட வேண்டும். இவை செய்யப்படவில்லை.

பிறகு, வரலாறு இல்லாமல்தானே இந்த இனம் இருக்கும். செம்மொழி மாநாடு இதுகுறித்துச் சிந்திக்குமா?

உண்மையில் 'மொழிபெயர்த்தல்' என்ற சொல்லை உருவாக்கித் தந்தவரே தொல்காப்பியர்தான். ஒரு மொழியில் வளம் என்பதே மொழிபெயர்ப்பால் மட்டுமே கூடும் என்பதை முன்னோர்கள் அறிந்திருக்கிறார்கள்.



1975-ம் ஆண்டுவாக்கில் லத்தீன் அமெரிக்க எழுத்தாளர் மார்க்யூஸ், தம் ஆயிரம் ஆண்டுத் தனிமை என்ற நாவலுக்கு நோபல் பரிசு பெற்றார். அந்த நாவலை எட்டு வேறு வேறு நபர்கள் மலையாளத்தில் ஆக்கம் செய்து, விற்பனையில் இருக்கிறது. தாய்த்தமிழில்...? கடந்த 20 ஆண்டுகளில் நோபல் பரிசு பெற்ற எந்த ஆசிரியரது படைப்பும் முழுமையாகத் தமிழில் வரவில்லை.

தமிழ் எப்படி வளரும்? செம்மொழி மாநாடு இதைப் பற்றிச் சிந்திக்குமா?

தமிழின் முதல் நாவலாசிரியரான மாயூரம் வேதநாயகம் பிள்ளை, சுமார் 140 ஆண்டுகளுக்கு முன், 'குற்றவாளிக் கூண்டில் நிற்பவரும் தமிழர். வழக்குரைஞனும் தமிழன். நீதி உரைப்பவனும் தமிழன். இடையில் எதற்கு ஆங்கிலம்?' என்பது போன்ற கருத்து சொன்னார். தாமே சுமார் ஆயிரம் வழக்குகளைத் தமிழில் எழுதிக் காட்டவும் செய்தார். ஆனால்

இந்த 2010-லும் தமிழ்த்தாய் தயங்கித் தயங்கி உயர்நீதி மன்றப் படிக்கட்டுகளில் தாழ்வு மனப்பான்மையோடு நிற்கிறாள்.

செம்மொழி மாநாடு என்ன செய்யப் போகிறது? எது பற்றிப் பேசப் போகிறது?

இந்த நாட்டின் பெயர் தமிழ்நாடு. ஆனால் பெரும்பான்மை அரசு அலுவலகங்களில் தமிழ் இல்லை. ஆக, ஆட்சி மொழிச் சட்டமே, கோளாறாக இருக்கிறது. 'தமிழ்தான் வேண்டுமானால், ஆங்கிலம்' ஏன் இருக்க வேண்டும்?

முத்தமிழ் என்று நீட்டி முழக்கப்படும் ஆரவாரச் சத்தம் காதை அடைக்கிறது. இசைத் தமிழுக்கான எந்த ஆவணமும், தொகுப்பு முயற்சியும் நடைபெறவில்லை. வீ.ப.க. சுந்தரம், அறிஞர் மம்முது போன்ற தனி நபர்களால் மட்டுமே பெரும் முயற்சிகள் தமிழில் நடக்கின்றன. இசைத் தமிழுக்கான இசைச் சொல் அகராதியைத் தனிநபராக அறிஞர் மம்முது முயன்று தொகுத்துள்ளார். இதுவே தமிழ்த் தொண்டு.

அரசுக்குச் **செம்மொழி மாநாடு இதுபற்றி என்ன வழி காட்டுதலைச் செய்ய இருக்கிறது?**

வீதி நாடகம் முதல் மேடை நாடகம் வரை பரீட்சார்த்தமாகச் செயல்படும் நாடகத் துறைக்கு அரசு எதுவும் பங்காற்றியதாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டு மேடைகளில் தமிழ்ப் பண்பாடு பற்றி முழங்காத, பேசாத 'மைக் மணிகள்' இல்லை. என்றாலும் பண்பாடு என்றால் என்ன என்பது பற்றி எந்தப் புரிதலும் எவருக்கும் இல்லை.

> தமிழர்களைத் தமிழ்த் தன்மைக் கொண்டவர்களாக மாற்றுவதுதான் இது போன்ற செம்மொழி மாநாட்டின் நோக்கமாக இருக்க முடியும்.

தமிழ்ப் பண்பாட்டு வரலாறு ஆவணப் படுத்தப்பட வேண்டும். பண்பாட்டுத் துறையில் அரசு என்ன செய்கிறது?

1960-களில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட ஆங்கிலம்-தமிழ், அகராதிகளுக்குப் பிறகு, இத்துறையில் தமிழின் இன்றைய வளர்ச்சியைக் கணக்கில் கொண்ட எந்த அகராதி முயற்சியும் அரசு தரப்பில் செய்யப்படவில்லை.

நவீன தமிழின் மிக அரிய படைப்புகள், உலகத்தில் எந்தப் பெரும் படைப்பாளிக்கும் சமமாக நிற்கவில்லை. இவை தொகுக்கப்பட்டுத் தமிழர்க்கும், மொழியாக்கம் செய்யப்பட்டு உலகுக்கும் தரப்பட வேண்டும். ஒன்றை அழுத்தமாக நான் சொல்ல வேண்டும். அந்த நவீன படைப்பாளிகள், அரசியல் கட்சி வட்டத்துக்குள் இருக்க மாட்டார்கள். (விதிவிலக்குகள் உண்டு) என்பதை அதிகாரத்தில் உள்ளவர்கள் உணர்வது நல்லது. உண்மைக் கவிகளும், உண்மைக் கதைஞர்களும் தங்களைக் கவிச் சக்ரவர்த்திகளாகவும், கதைப் பேரரசர்களாகவும் கருதிக் கொள்வதே இல்லை.

இறுதியாக, தமிழர்களைத் தமிழ்த் தன்மை கொண்டவர்களாக மாற்றுவதுதான் இதுபோன்ற செம்மொழி மாநாட்டின் நோக்கமாக இருக்க முடியும். தமிழில் முன்னரே உள்ள சிறப்புகள் அல்ல பிரச்னை. இல்லாத சிறப்புகளே நம் கவனத்தில் கொள்ள வேண்டியவை. தமிழில் உள்ளவை சில நூறுகள். இல்லாதவை பல ஆயிரங்கள். நாம் கவலைப்படுவது இந்த இல்லாமைக்காகத்தான். அறிவாளர்கள் இந்த இன்மைகள் பற்றி, அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். அதிகாரத்தை நோக்கி உண்மை பேசுபவர்களே உண்மையான அறிவாளிகள்.



"ஆசிரியப்பா... கலிப்பா... வெண்பா... ஸ்டைல்ல புலவர் கவிதையைப் படிச்சுட்டு மன்னர் என்ன சொன்னாரு..!"
"அடேங்கப்பா..!"
ஜி.வினோத்
அகராதியைப் பார்த்து வாங்கணும்!
"என்னுடைய அகராதியில முடியாது என்ற வார்த்தையே கிடையாது..."
"அகராதி வாங்கும்போது கவனமாப் பார்த்து வாங்க வேண்டாமா?"
தேனிமுருகன்
"அவரோட மனைவி சீரியல் பார்க்கும்போது அவரும் ஏன் பக்கத்துல உட்கார்ந்துக்கிறார்..?"
"அந்த நேரத்திலாவது, அவர் மனைவி அழுவதைப் பார்த்துச் சந்தோஷப் படுவாராம்..!"
எம்.மிக்கேல்ராஜ்

நடக்குமென்பார்; நடக்கும்!

தஞ்சை பரத்வாஜ்

மேஷம்: 'உள்ளுவதெல்லாம் உயர்வுள் எல்' என்ற வள்ளுவரின் வாக்குப்படி உங்களின் நல்ல எண்ணங்களெல்லாம் நிறைவேறும். வீடு/மனை வாங்கும் யோகம் வரும். வணிகத்தில் நல்ல லாபமுண்டு. சில பேருக்குக் கடல் கடந்து செல்லும் வாய்ப்பு கிட்டும். மகிழ்ச்சி நிறைந்த வாரம்.

ரிஷபம்: 'உலகம் பழித்ததை ஒழித்துவிட் டால், நினைப்பது நிறைவேறும்' என்பது வள்ளுவர் வாக்கு. வாகனங்களில் செல் லும்போது எச்சரிக்கை தேவை. சில கூட் டாளிகள் பிரிந்து செல்லும் நிலை ஏற்படும். என்றாலும், புதிய தொழில் முயற்சிகள் கைகொடுக்கும். பொறுமையாக இருக்க வேண்டிய வாரம்.

மிதுனம்: 'கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று ஒரு சொல்லுண்டு. உங்களது கடன் சுமை கள் தீரும். உறவினர்கள் உதவி செய் வார்கள். நீண்ட தூரப் பயணமுண்டு. பேச்சு வார்த்தைகள் மூலம் பல னுண்டு. வாணிபத்தில் முன்னேற்றமுண்டு. பிரச்னை கள் பறந்து போகும் வாரம்.

கடகம்: 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்பது பாரதிதாசனின் கவிமொழி. அந்தத் தமிழ் அமுதமாய் வாழ்வில் நல்ல சம்பவங்கள் நிகழும். பணவரவுக்குப் பஞ்சமில்லை. சிலருக்குப் பூமி மூலமாக வருமானமுண்டு. சிலருக்கு கௌரவப் பதவிகள் தேடி வரும். பலருக்கும் பணி உயர்வு கிட்டும். நிறைவான காரி யங்கள் நிகழும் வாரம்.

சிம்மம்: 'பரமனை வழிபட்டால் பாவமெல்லாம் தொலையும்' என்பது ஆன் றோர் வாக்கு. உங்களுக்கு கையிருப்பு கரைய லாம். பணப் பற்றாக்குறை ஏற்படலாம்; வியாபாரத்தில் மந்தநிலை ஏற்படலாம். என்றாலும், உங்களது இறைவழிபாடு எல்லாத் துன்பங்களையும் போக்கும். எச்சரிக்கையைக் கடைபிடிக்க வேண்டிய வாரம்.

கன்னி: அதிகாலைத் தென்றலாக ஆனந்தம் வீசும். திடீரெனப் பொருள் வரவுண்டு. கடன் சுமை நீங்கும். எதிர்ப்பு கள் விலகும். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். நண்பர்கள், சுற்றத்தார்கள் நன்மையுண்டு. பொருளாதாரச் சுமைகள் குறையும். மன மகிழ்ச்சி பொங்கும் வாரம்.

துலாம்: 'கடவுளை நம்பினோர் கைவிடப் படார்' என்ற வாக்கு உங்களுக்குரியது. மறைமுக எதிர்ப்புகள் வரும். செய்யும் தொழிலில் சில சிக்கல்கள் ஏற்படலாம். தேவையில்லாதசில வம்பு, வழக்குகள் வந்து சேரலாம். வியா பாரத்தில் சிலருக்குப் பணமுடக்கம் ஏற்பட லாம். இறைவழியில் துன்பம் தீரும் வாரம்.

விருச்சிகம்: 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என வள்ளுவர் கூறுவார். அன்பினால் எல்லோரையும் அனுசரித்துப் போகும் நேரமிது. திடீர்ப் பயணம் மேற்கொள்ள வேண்டி வரும். கைப்பொருள் மீது கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்களிடமும் எச்சரிக்கை தேவை. கடவுள் அருளால் துன்பம் விலகும் வாரம்.



தனுசு: 'எண்ணிய எல்லாம் மண்ணில் நிறைவேறும்' என்கிறார்கள் பெரியோர்கள். நீங்கள் வீடு/மனை வாங்கும் யோகம் கைகூடி வருகிறது. கடன்களெல்லாம் தீரப் போகிறது. வீட்டில் சுபகாரியம் நிறைவேறும். நெஞ்சம் நிறைய மகிழ்வு பொங்கும் வாரம்.


மகரம்: மகர யோகம் சகட யோகமாம்! மேல்நாடு செல்லும் வாய்ப்பு கிட்டுமாம். வரவேண்டிய நிலுவைகள் வந்து சேருமாம். பணம், பல வழிகளில் வருமாம். வாகன யோகமும் விரைவில் கூடுமாம். வீடு/மனை வாங்கும் தருணமாம். வாய்ப்புகளின் வரவில் வளம் கொழிக்கும் வாரம்.

20.06.2010
முதல்
26.06.2010
வரை

கும்பம்: 'எட்டுத் திக்கும் வெற்றியென்று கொட்டு முரசே!' எனப் பாரதி பாடியது போல, வெற்றிகள் வாய்க்கும் காலம். தொலைதூரத்திலிருந்து நல்ல தகவல் வந்து சேரும். பண வரவும் உண்டு. நீண்ட நாள் நிலுவையிலிருக்கும் வழக்கு வெற்றி பெறும். செல்வாக்கும், சொல்வாக்கும் உயரும் காலம்.

மீனம்: நெஞ்சத்தில் இனிமை சேரும். பதவி உயர்வு கிட்டும். வீடு/மனை மூலம் ஆதாயம் வரும். உற்றார், உறவினரால் அனுகூலம் உண்டாகும். குடும்ப வருவாய் கூடும். வெல்லமென வாழ்க்கை இனிக்கும் நேரம். ●

வாகனப் புகையின் வாடையினூடே எழும் மிருதுவான, மணத்தை உள் ளிழுக்கும்போதெல்லாம் எனக்கு சித்ரா டீச்சரின் நினைவுதான் வருகிறது. பஸ்ஸை விட்டு இறங்கி, தேன்மொழியிடம் பூ வாங்கிக் கொண்டு, மூக்கு திரும்பி ஏ.ஓ.கிளினிக்கைக் கடக்கும் போது தினமும் இந்த அனுபவம். மணம், தேன்மொழி தரும் மல்லி அல்லது செண்பகத்தினுடையது அல்ல. அந்தப் பூக்கள் ஃப்ரிட்ஜில் ஏறி அமர வசதியாய், காற்றுப் புகாத பிளாஸ்டிக் டப்பாவில் அடைக்கப்பட்டு என் பைக்குள் இருக்கும். கிளினிக் வாசலில் படர்ந்து பரவிய கொடியில் பூத்துச் சொரியும் இளஞ்சிவப்பு நட்ச த்திரப் பூக்கள்தான், நகரவாடையை வென்று என்னைப் பள்ளிப் பருவத்துக்குத் தினமும் கடத்துகின்றன. ஆர்ப்பாட்டமும் அதட்டலும் நிரம்பிய வகுப்புகளினூடே, அடங்கிய குரலில் எங்களையோர் அழகு பூமிக்குக் கடத்திச் சென்ற சித்ரா டீச்சரின் தமிழ் வகுப்புகளை



தமிழ் மணம்

நினைவுபடுத்துகின்றன. ஒரு பிரத்யேக மணம் கமழ்ந்தது அந்த வகுப்புகளில். சித்ரா டீச்சரின் வகுப்பில் அமராதவர்கள் வாழ்க்கையில் பெரிதாக ஒன்றை இழந்தவர்கள் என்றே சொல்வேன்.

சித்ரா டீச்சர், பவுடர் சென்ட் போன்ற அழகு சாதனங்களினால் வகுப்புக்கு மணமூட்டவில்லை! சாதாரணப் பருத்திச் சேலையும் பொருத்தமான ரவிக்கையுமாகத்தான் அவர் காட்சி அளிப்பார். எப்போதேனும் தலையில் ஒரு கிள்ளு மல்லிச்சரம். எப்போதும் முகத்தில் மஞ்சள் பூச்சு. "சாம்பார்ல குளிப்பாங்களாடா?" என்று எங்கள் வகுப்புப் பையன்கள் கேலி பேசினாலும், டீச்சர் பாடம் நடத்தும் போது கவனமாகி விடுவார்கள். பாடப் பகுதியை அவர் வாசிக்கும்போதே, குரலும் உச்சரிப்பும் உணர்ச்சியுமாக எங்களைக் கட்டிப் போட்டு விடுவார். நன்னூல் சூத்திரங்களைக் கூட விளையாட்டாக மனப் பாடம் செய்ய வைத்துவிடுவார். "நேர் நேர் தேமா நிரை நேர் புளிமா" என்று பாண்டியாட்டத்தில் பாடிக்கொண்டே நொண்டி வந்திருக்கிறோம். 'தண்டலை மயில்கள் ஆட...' பாடலை அவர் நடத்திய பிறகு, கோனார் நோட்ஸைத் தூக்கிப்போட்டு விட்டோம்!



"எத்தனை பேர் தாமரைக் குளம் பார்த்ததுண்டு?" என்று டீச்சர் கேட்க, ஒரு சில கைகளே உயர்ந்தன. மறுநாள் வகுப்புக்கு ஒரு தாமரை மொட்டை எடுத்து வந்தார். பத்து பேரை முன்வரச் செய்து தலைக்கு ஓர் இதழாக அந்த மொட்டைப் பிரிக்கச் செய்தார். "பார்த்து, பார்த்து, மெள்ள விரிக்கணும் இல்லைன்னா பிஞ்சுடும்" என்று அவர் எச்சரித்ததில், மர ஸ்கேலால் கத்திச் சண்டைபோடும் முரட்டுப் பையன்களெல்லாம் கவனமாக மடல் பிரித்தனர். வகுப்பறையின் மூலையில் இருந்த பெரிய குடிதண்ணீர்ப் பானையில், விரித்த தாமரையை மிதக்கவிடச் சொன்னார். "இப் படியே நூத்துக்கணக்கான பூக்களைக் கற்பனை பண்ணிப் பாருங்க... பச்சைப்பாய் விரித்தது போன்ற வயல்வெளிகளுக்கு, தாமரைப் பூக்கள் விளக்குச் சுடர் ஏந்தி

சீதா ரவி

ஆரத்தி எடுக்கின்றன... இந்தப் பாடலில் மருத நிலத்தின் நிறங்களும், ஓசைகளும், குளிர்ச்சியும், சுகந்தமும், அங்கே விளையும் செந்நெல்லின் சுவையும் கூட கலந்திருப்பதை உணர முடிகிறதல்லவா...? இருக்கும் இடத்தை விட்டு நகராமலே, நம் ஐந்து புலன்களாலும் இயற்கையின் எழிலை அனுபவிக்குமாறு கவிஞர் சொற்களைச் கோத்துப் போட்டிருக்கிறார் பாருங்கள்...''

- சித்ரா டீச்சரின் இந்த விளக்கத்தை நாங்கள் உணவு இடைவேளையில் ஒட்டிப் பார்த்ததைக் கேட்டுவிட்டு, தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட ரஜினி தமிழ் வகுப்புக்கு மாற்றிக் கொண்டாள். 'மாசில் வீணையும்', 'பச்சைமாமலை போல் மேனி', 'எல்லாம் ஏகுவே' என்று தமிழ்ப் பாடம் தொடங்கும் முன் பாட வேண்டிய பிரார்த்தனை கீதங்களை, எங்களுடன் சேர்ந்து ஒரே வாரத்தில் ரஜினியையும் கற்றுக்கொள்ள வைத்தார் டீச்சர்.

மற்ற பாடங்களில் சராசரி மதிப்பெண் எடுத்த எங்கள் 'செட்'டின் இரண்டு உஷாக்களும், பத்மினியும், ப்ரியாவும் நானும் தமிழில் டிஸ்டிங்ஷன் எடுத்து பள்ளியிறுதி தேறியதைக் கண்டு எங்கள் குடும்பங்கள் வியந்தன.

எல்லாமே சித்ரா டீச்சரால்தானே! பாடப் புத்தகத் துக்கப்பாலும் விரிந்த தமிழை அவர்தானே எங்களுக்குக் காட்டித் தந்தார் - ''கல்கியின் எழுத்தில் மொழி என்பது கதைக்கு வாகனம்; லா.ச.ரா. படைப்புகளில் அதுவே உணர்ச்சிப் பிழம்பு; தி.ஜானகிராமனுக்கோ தமிழ் என்பது ரசனையின் தூரிகை...'' என்றெல்லாம் ஆசைகாட்டி எங்களை வளர்த்தார். ''கா.ஸ்ரீ.ஸ்ரீ.யின் மொழிபெயர்ப்புத் தமிழைக் கவனியுங்கள். காண்டேகரின் மராட்டிக்கு உண்டான சாயலை மாற்றாமல் வடித்திருக்கிறார் பாருங்கள்...'' என்று புரிய வைத்தார்.

வாங்கிய மதிப்பெண்களுக்காக மட்டுமின்றி, அவர் வகுப்புகளில் வீசிய தமிழ் மணத்துக்காகவும் அதைத் துய்த்து பெற்ற நெஞ்சு நிறைவுக்காகவும் கண்களில் நீருடன் நன்றி நேக்கி நாங்கள் காத்து நின்றோம். மார்க் ஷீட்டெல்லாம் வாங்கியாயிற்று. சித்ரா டீச்சர் வந்தால்



விடைபெற்றுப் புறப்படவேண்டும். ஆனால் அவர் இப்படியொரு காரியம் செய்வார் என்று நாங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை!

''அவ யாரைக் கட்டிக்கிட்டா உனக்கென்ன போச்சு...? ஒழுங்கா போய் அப்ளிகேஷன் போட்டு அட்மிஷன் வாங்கற வழியைப் பாரு...'' என்று வீட்டில் என்னை அடக்கிவிட்டார்கள். எங்களுக்குத் தமிழைப் பரிந்தூட்டிய டீச்சர் ஓர் ஆங்கிலேயரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டதில், எங்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும் ஏமாற்றமும்

எங்கள் வீடுகளுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. குழந்தைகளின் அட்மிஷனுக்காகப் பெற்றோர்கள் அலையாத காலம் அது. அவரவரும் விரும்பிய கல்லூரிகளில் விண்ணப்பம் போட்டோம். விஞ்ஞானமும் கணிதமும் மருத்துவமும் படிக்கப் பிரிந்து போனாலும் தமிழால் இணைந்திருந்தோம்.

பத்மினிக்குக் கல்லூரிப் படிப்பை முடிக்கும் முன்பே திருமணம் பேசி விட்டார்கள். மணவறையில் அவளைப் பார்த்தபோது, ப்ரிஸிக்கும் எனக்கும் ஒருசேர சித்ரா டீச்சரின் நினைவுதான்



பேராசிரியர் பிரவுன் பேசிக்கொண்டே போக, எனக்கு உடல் சிலிர்க்கிறது. தமிழ் என் சொத்து என்று எண்ணிய என் பேதைமை தகர்கிறது.

வந்தது. இந்த இரண்டாண்டுகளாக எங்களுக்குள் கனன்ற ஏமாற்றத்தைப் பகிர்ந்து பேசிக் கொள்ளும் துணிவு துளிர்த்தது.

''ஏண்டி, சித்ரா டீச்சர் அப்படிப் பண்ணாங்க?''

''அதான் காதலுக்குக் கண்ணு இல்லேன்னு சொல்லுவாங்க இல்லே...'' என்றாள் ப்ரிஸி.

''அதுக்காக தமிழே தெரியாத ஒருத்தனை எப்படிக் காதலிச்சாங்க?''

''கஷ்டம்டீ. பழக்கம் வழக்கம் சாப்பாடு எல்லாத்தையும் விடு... தினமும் பேசிக்க வேண்டாமா...? இங்க்லீஷ்ல பேசிக்கிட்டா பேசிக்கிற மாதிரி இருக்குமாடீ...? அதுவும் புருஷன்-பெண்டாட்டி...?''

''அவங்க அவருக்குமே தமிழ் கத்துக் குடுத்துடுவாங்களாயிருக்கும். நம்ம கிளாஸ் ரஜினி தமிழுக்கு மாறலியா...?''

''ப்ஸ"... என்ன நீ சொல்றே? ரஜினி பிறந்ததுலேர்ந்து மெட்ராஸ்தான்.. வீட்டுக்கு வெளியில அவ தமிழைத்தானே கேட்டு வளர்ந்திருக்கா... இந்த ஆளு... அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்துட்டு ஆறு வாரம் சுத்திப் பார்க்க வந்த இடத்துல நம்ம சித்ரா டீச்சரை வளைச்சுப் போட்டுட்டான்...''

''மார்க் ஷீட் வாங்கற அன்னிக்கு அவன்கூட அவங்க வந்து இறங்கினாங்களே, அப்போ முகத்துல சந்தோஷத்தப் பார்த்தியா...? அது நாம தமிழ்ல டிஸ்டிங்ஷன் எடுத்ததுக்காக மட்டுமில்லேடீ.''

''தெரியும் தெரியும்...'' என்று ப்ரிஸி முடித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. கெட்டி மேளம் கொட்ட, பத்மினிக்கு மாங்கல்யதாரணம் ஆகியது.

இளஞ்சிவப்பு நட்சத்திரப் பூக்களின் மணம் நாசியை வருட, நான் வீடு திரும்பும் மாலைகளில், சித்ரா டீச்சரின் தமிழ் வகுப்புகளோடு ப்ரிஸியுடனான எனது உரையாடலும் நினைவு அடுக்குகளிலிருந்து எழுந்து வந்து பழித்துக் காட்டவே செய்தது. கூடவே ஒரு பயமும்... இந்தக் கால் நூற்றாண்டு நகர்வில் என் மகள் குழலி வளர்ந்து அமெரிக்கப் பல்கலை ஒன்றில் சுற்றுச்சூழல் இயலில் ஆராய்ச்சி மேற்கொண்டிருந்தாள். அவளும் தமிழில் டிஸ்டிங்ஷன் எடுத்தவள்தான்... சித்ரா டீச்சரின் வாழ்க்கையில் நுழைந்தவனைப் போல் அவளையும் ஒரு வெள்ளைக்காரன்... கற்பனை செய்யவே, அச்சமாக இருந்தது. கையளவுக்குள்

உலகமே சுருங்கிவிட்ட கணினி யுகத்திலும், சில வார்ப்புகளிலிருந்து வெளிப்பட்டு நெகிழ்த்திக் கொள்வது வலிதான். அதிலும் திருமணம் என்கிற உணர்வுபூர்வமான விஷயத்தில்... அவ்வப்போது எழுந்த அச்சத்தை நான் தலையில் தட்டி அமர்த்திக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே குழலியிடமிருந்து அழைப்பு வந்தது. நான் அங்கு வர வேண்டும் என்றும்; எனக்கொரு இனிய ஆச்சர்யம் அங்கு காத்திருக்கிறது என்றும்... ''பயந்துடாதே! நான் ஒண்ணும் மாப்பிள்ளையெல்லாம் பார்த்துடலே...'' என்று ஆறுதல் உத்தரவாதம் வேறு...!

எப்படியும் ஒரு நடை போய்வர வேண்டும் என்ற எண்ணத்துக்கு வேகம் சேர்த்த அழைப்பை ஏற்றுச் சென்றேன். அத்தனை பேரும் மெச்ச, பெற்ற மகள் வளர்ச்சியுற்றிருப்பதைப் பார்க்கப் பெருமிதமாகத்தான் இருந்தது. அவள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அமெரிக்க வாடை கலக்காமல் இருந்ததில் இன்னும் பெருமிதம்.

''இந்தப் பெருமிதமெல்லாம் ஒண்ணுமில்லைன்ற மாதிரி நாளைக்கு ஒண்ணு பார்க்கப் போறே...'' என்றவள், மறுநாள் அந்தப் பல்கலையின் தமிழ்த் துறைக்கு என்னை அழைத்துப் போனாள். அமெரிக்கர் ஒருவர்தான் தமிழில் வகுப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

மாசில் வீணையும் மாலை மதியமும்... திருநாவுக்கரசர் பதிகம்!

''பாடல் முழுவதும் விரவி வரும் மெல்லின, இடையின ஒலிப் பிரயோகங்களைக் கவனியுங்கள்...'' என்றவர், நிறுத்தி நிதானமாகப் பதிகத்தை முழுவதும் உணர்ச்சிப்பெருக்குடன் உச்சரித்தார்.

சுண்ணாம்புக் காளவாயில் போடப்பட்ட ஒருவர் பாடுகிறார்... அந்தக் கொடூர துன்பத்தின் வலி தெரியாமல் அவரை ஆட்கொண்ட பரம்பொருளின் உன்னதத்தை அனுபவித்துச் சொல்லும் அழகைப் பாருங்கள்... அவரது ஐம்புலன்களும் மாசில்லாத அனுபவங்களைப் பெறுகின்றன... மாசற்றுப் போகும்போது புலனின்பமே ஆன்ம அனுபவமாக உயர முடியும் என்பதாக ஏன் இருக்கக்கூடாது...?''

எதிரே பேராசிரியர் பிரவுன் பேசிக் கொண்டே போக, எனக்கு உடல் சிலிர்க்கிறது. தமிழ் என் சொத்து என்று எண்ணிய என் பேதைமை தகர்கிறது. சுற்றிலும் உள்ள மாணவர்களைப் பார்க்கிறேன். லயித்துப் போய் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வகுப்பு முடிந்து வெளியே வருகிறோம் குழலியும் நானும்... அட இதென்ன? இளஞ்சிவப்பு நட்சத்திரப் பூக்களின் நறுமணம்...? எங்கள் சித்ரா மிச்சரின் தமிழ் வகுப்பு மணமல்லவா இது...? சுற்றுமுற்றும் பார்க்கிறேன்... அங்கும் மலர்க்கொத்துகள் நிறைந்த கொடியொன்று தேனீக்களைச் சுறுசுறுப்பாக்கிக் கொண்டிருக்கிறது... இவை வேறு மலர்கள்தான். ஆனால் மணம் அப்படியே நட்சத்திரப் பூக்களினுடையதாக இருக்கிறது! ●



''என் வீட்டுக்காரர் என் மேலே உயிரையே வைச்சிருக்காருடி!''
''அதான் நடைப்பிணம் மாதிரி இப்படி அலைகிறாரா?''
- பி.பாலாஜி கணேஷ், சிதம்பரம்


மாபெரும் சிறப்புச் சலுகை 01.06.10 முதல் 30.06.10
1.51 ct வைர நெக்லஸ்
18.00 gm தங்கத்தின் எடை
விலை ரூ. 1,08,000
சலுகை விலை
ரூ. 92,000
1.00cts வைரத்தோடு
தங்கத்தின் எடை 5 கிராம்
~~67,000~~
தள்ளுபடி விலை
57,000
• வைர நகைகளுக்கு Perct 4000 தள்ளுபடி
• 7 கல் வைரத்தோடு - 25000 முதல்
• வைர மூக்குத்தி 1700 முதல்
• பேன்சி வைரமோதிரம் 4500 முதல்
• பேன்சி வைரதோடு 4500 முதல்
• பேன்சி டாலர் 4500 முதல்
• அனைத்து வைரங்களும் V V S E F கலர்
• திருப்பி தரும்பொழுது வைரத்திற்கு மட்டும் 100% அன்றைய மார்கெட் விலை
• 500 முதல் 5000 வரை மாத சீட்டு + இரட்டிப்பு போனஸ்
• 25000 மேல் வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் நகை பெட்டி வழங்கப்படும்.
0.84 ct
வைர வளையல்
12.00 gm
தங்கத்தின் எடை
விலை
ரூ. 71,000
சலுகை விலை
ரூ. 63,000
Sri Palsani Jewels
110, Dr. Radha Krishnan Road, (Near Sri Krishna Sweets) Chennai - 4
Phone: 2811 1737, 2811 7036 | www.sripalsanijewels.net



ஐரோப்பிய நாடுகளிலிருந்து 17, 18ஆம் நூற்றாண்டுகளில் மதத் தொண்டாற்ற வந்த போதகர்கள்... இன்றைய வெளிநாட்டு ஆராய்ச்சி மாணவர்கள் எனக் காலந்தோறும் தமிழைத் தங்கள் மொழியாகவே எண்ணி மகிழ்ந்த அயல் நாட்டவர் பலப்பலர். அவர்களில் சில முன்னோடிகளை, இந்தத் தருணத்தில் நன்றியோடு கல்கி அறிமுகப்படுத்துகிறது.

பார்தோலோமியூஸ் செயான்பலங் (ஜெர்மனி) (Bartholomaeus Ziegenbalg)

டேனிஷ் ஈஸ்ட் இந்தியக் கம்பெனி தரங்கம்பாடிக் கடல்பகுதியைத் தஞ்சை மன்னரிடமிருந்து விலைக்கு வாங்கியிருந்தது. பின்னர், அது டென்மார்க் அரசின் பகுதியாக அறிவிக்கப்பட்டது. பின், டென்மார்க் மன்னர் அந்தப் பகுதியில் கிறிஸ்துவ மதத்தைப் பரப்பப் போதர்களை அனுப்ப முடிவு செய்தார். அவ்வாறு 1706-ல் வந்தவர்தான் செயான்பலங். வந்த இடத்தில், கற்ற தமிழ் மொழியின் அழகில் மயங்கி, இரண் டாண்டுகளில் அதில் செய்திருக்கிற பணி நம்மை ஆச்சரியப்படுத்துகிறது. இரண்டாயிரம் வார்த்தைகளுடன் 1708-ல் தமிழின் முதல் சொல் அகராதியை, பதினேழாயிரம் வார்த்தைகளுடன் (ஜெர்மனியில் அச்சிட்டு வந்திருக்கிறது) உருவாக்கியிருக்கிறார். இதுதான், பின்பு வந்த பல சொல் அகராதிகளுக்கு முன்னோடியாக இருந்திருக்கிறது.

"தமிழர்களின் கலாசாரம் மிகப் பாரம்பரியமானது. மூடத்தனமான சில மதச் சடங்குகளைப் பின்பற்றினாலும், வானசாஸ்திரம், கட்டடக்கலை வரை பலவிஷயங்களை அறிந்தவர்கள் தமிழர்கள். இதை ஐரோப்பியர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்" எனத் தம்மை இந்தப் பணிக்கு அனுப்பிய பேராசிரியருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், அவர்கள் உங்கள் பணியை மட்டும் செய்யுங்கள் என்று



* டாக்டர் பிரான்கோஸ் கோர்ஸ்

சொல்லி, அந்தக் கடிதத்தை வெளியிடவே இல்லை! இந்த வல்லவர் பற்றிய செய்தி சில ஆண்டுகளுக்கு முன்புதான் தெரிய வந்திருக்கிறது.

டாக்டர் பிரான்கோஸ் கோர்ஸ் (பிரான்ஸ்) (Dr. Francois Gros)

பிரான்ஸ் நாட்டின் லயான்ஸ் பல்கலைக்கழகத்தில் பிரெஞ்சு, சமஸ்கிருதம், லத்தின், கிரீக் மொழிகள் கற்று எம்.ஏ. பட்டம் பெற்ற பின், பாரீசுக்கு வந்து தமிழ் கற்றவர் பிரான்கோஸ். இவருக்கு வயது எழுபத்தைந்து. பாண்டிச்சேரியில் பிரெஞ்ச் இன்ஸ்டிட்யூட்டில் ஆராய்ச்சிப் பணியைத் தொடர்ந்த இவர், சிலப்பதிகாரம்,



* பார்தோலோமியூஸ் சீகன்பால்கு

ஜார்ஜ் ஹார்ட் (அமெரிக்கா) (George Hart)

அமெரிக்க கலிஃபோர்னியா பர்க்லி பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறை மிகப் பழைமையானது. இவர்கள் ஆண்டு தோறும் தமிழ் மாநாடு நிகழ்த்துகிறார்கள்.

தமிழ் பயிற்றுவிப்பதைத் தவிர, தமிழ் மொழிக்கலாசாரம் குறித்த ஆராய்ச்சி சார்ந்த பணிகளை மேற்கொள்ள, இந்த பல்கலைக்கழகம் விசேஷ அந்தஸ்த்தில் ஒரு தனி அறக்கட்டளை அமைப்பைத் துவக்கியுள்ளது. அதன் தலைவராக நியமிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டிருப்பவர்

செம்மொழியே எம் மொழி!

தொகுப்பு : ரமணன்



*George Hart

பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட். இவர் ஒரு பன்மொழி வித்தகர்.

தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து பெற, தமிழின் தொன்மை குறித்தும், உலகின் பல மொழிகளோடு ஒப்பிட்டு, தமிழின் சிறப்பு குறித்தும், மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியவர் இவர். அந்தக் கடிதம்தான் தமிழ் செம்மொழி என அறிவிக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது.

இவர் செம்மொழி மாநாட்டில் கலந்துக் கொள்ளவிருக்கிறார் என்பது உபரியான இனிப்புச் செய்தி.

பரிபாடல், பத்துப் பாட்டுப் பற்றி ஆராய்ந்திருக்கிறார். பரிபாடலை பிரெஞ்ச் மொழியில் மொழிபெயர்த்திருக்கிறார். எட்டு ஆண்டுகள் செலவிட்டுச் செய்த அந்தப் பணி, பிரெஞ்ச் மொழியின் சிறந்த மொழி பெயர்ப்புக்கான பரிசைப் பெற்றிருக்கிறது.

1974-ல் இலங்கையில் நடந்த மாநாட்டைத் தவிர, இதுவரை நடந்த எல்லாத் தமிழ் மாநாடுகளிலும் கலந்து கொண்டிருக்கிறார். தமிழையும், தமிழ்க் கலாசாரத்தையும் நேசிக்கும் இவர், ஆண்டு தோறும் ஜனவரி முதல் மார்ச் வரையும், தொடர்ந்து ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரையும் பாண்டிச்சேரியில் தங்கி ஆராய்ச்சியைத் தொடர்கிறார்.

‘ழ’ கரப் பூங்காவுக்கு வாரீகளா?

உயரமான இடத்திலிருந்து பார்த்தால், தமிழின் சிறப்புகளுள் ஒன்றான ‘ழ’ என்ற எழுத்தின் வடிவத்தில் தெரிகிறது இந்தச் சிற்பப் பூங்கா. சிற்பங்களால் பூத்துக்குலுங்கும் இந்தப் பூங்கா மாமல்லபுரத்து சிற்பக் கல்லூரி மாணவர்களின் விரல்கள் செதுக்கிய தமிழ் வித்தை. செம்மொழி








மாமல்லபுரத்திலிருந்து
புகைப்படம், செய்தியுடன்:
பரத்ராம்

மாநாட்டையொட்டி சுற்றுலாத் துறை ஏற்பாடு செய்திருக்கும் இந்த 'ழ'கரப் பூங்கா தமிழனின் பெருமையை நெஞ்சில் தட்டச்சு செய்து அனுப்புகிறது. பல்வேறு சிலைகளினூடாக சிலப்பதிகார மாதவியின் சிலைகள்தாம் விசேஷம். பதினொருவிதமான நடனங்களை மாதவி ஆடி கோவலனை மயக்கினாள் என்பதைவிட, இத்தனை விதமான தமிழ் நடனங்கள் என்னவாயின என்பதே தேங்கிப்போன கேள்வியாயிருந்தது. நீங்களும் போய்ப் பாருங்களேன்... மாமல்லபுரத்துக்கு முன்னால், கிழக்குக் கடற்கரைச் சாலையில் பீச் ரிசார்ட்ஸ் வளாகத்தில் இருக்கும் இந்தத் தமிழ்க் கலைப் பூங்காவை!





யாரும் பணம் வாங்கலை!



• கௌதம் மேனன்...

தாம் இசையமைத்த செம்மொழிப் பாடலை, கௌதம் மேனன்தான் படம்பிடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட ரஹ்மான், ''தமிழை உலகளாவிய ஒரு விஷயமாக இந்தப் பாடலின் மூலம் எடுத்துக் கொண்டு போகவேண்டும்'' என்றாராம். அரசு தரப்பிலிருந்து ஒருங்கிணைப்பு செய்த கனிமொழியோ ''தமிழ்ப் பாரம்பரியம் பரிமளிக்க, மண்வாசனையோடு இருக்க வேண்டும்,'' என்றாராம். இரண்டையும் சமன் செய்து படம் பிடித்தது பெரிய சவால்தான் என்கிறார் கௌதம்.

வி.ஜி.பி. கோல்டன் பீச்சில் கடலை ஒட்டி, ''செம்மொழியான தமிழ் மொழியே!'' என்ற மெகா சைஸ் எழுத்துக்களின் பின்னணியில், ஒரு பிரம்மாண்டமான மேடையில், சீனியர் மோஸ்ட் டி.எம்.எஸ்., பி.சுசீலா தொடங்கி ஷ்ருதி ஹாசன் வரை மொத்தம் 40 பாடகர், பாடகிகள் இந்தப் பாடலைப் பாடியிருக்கிறார்கள். இவர்களில் அருணா சாயிராம், சௌம்யா, டி.எம்.கிருஷ்ணா, பாம்பே ஜெயஸ்ரீ போன்ற கர்நாடக இசைப் பாடகர், பாடகிகளும் உண்டு. யேசுதாசும், எஸ்.பி.பி.யும் வெளிநாட்டில் இருந்ததால், இதில் பங்கேற்க முடியவில்லை. மகாபலிபுரம் கடற்கரைக் கோவில் பின்னணியில் மணலில் சின்னதாக ஒரு மேடை போட்டு, பரதநாட்டியம் ஆடியிருப்பவர் ஸ்ரீநிதி சிதம்பரம்.

புதுமணத் தம்பதிக்கு ஆரத்தி எடுத்து அவர்கள் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கும்போது, அவர்களுக்கு 'நல்வரவு' வண்ணக்கோலம்; மனைவி ஆச்சரியமாய்ப் பார்க்க கணவன் வாணலியிலிருந்து தமிழ் எழுத்துகளின் வடிவில் முறுக்கு செய்வது, டைடல் பார்க்கில் முதல் நாள் வேலைக்குப் போனதும், இலேசான பயத்துடன் கம்ப்யூட்டரைத் தட்ட, இன்டர்நெட், தமிழ், விக்கிபீடியா என்று அடுத்தடுத்து திரையில் தோன்ற ஆச்சரியப்படும் கிராமத்து யுவதி, கிராமத்துப் பெண், அப்பாவின் டிராக்டரை ஓட்டியபடியே நிலத்தில் 'ண' போடுவது,

Scoop

கவரில் சித்திரம் வரைந்து முடித்து ஓவியர் ஸ்டைலாக 'எழில்' என்று கையெழுத்திடுவது எனப் பாடல் நெடுக கௌதம் மேனனின் முத்திரைகள்.

"பண்டைய கல்வெட்டுகளில் உள்ள தமிழ் எழுத்துக்கள் முதல் இன்றைய கம்ப்யூட்டர் எழுத்துருக்கள் வரை விதம்விதமான தமிழ் எழுத்துக்களைப் பாடல் முழுவதிலுமாகப் பயன்படுத்தியிருக்கிறேன்."

பாடலுக்கு மதிப்பைக் கூட்ட, கன்னியாகுமரியில் துவங்கி சென்னை வரை, தமிழ்நாடு நெடுக ஹெலிகாப்டரில் இரண்டு நாட்கள் பயணம் செய்து, ஏராளமான ஏரியல் ஷாட்கள் எடுத்தேன். வானில் பறந்து ஏரியல் ஷாட் எடுக்க மத்திய அரசு அனுமதிப்பதில்லை. ஆனால், செம்மொழி மாநாட்டுக்காகச் சிறப்பு அனுமதி பெற்று, எடுத்த அத்தகைய ஷாட்களைப் பாது காப்பு அமைச்சகத்துக்கு அனுப்பி, அவர்கள் அனுமதிக்குப் பிறகே அவை பயன்படுத்தப்பட்டன.

பாடலுக்காக முதல்வர் கலைஞரைப் படம்பிடிக்க வேண்டும் என்றதும், அவர் உடனடியாக ஒப்புக்கொண்டதும், நான் கேட்டுக்கொண்டபடி கையெழுத்திடுவது போல, யோசிப்பது போல, படிப்பது போல எல்லாம் செய்து ஒத்துழைத் தரும் எனக்குக் கிடைத்த அரிய அனுபவம்" என்கிறார் கௌதம்.

இந்தப் பாடலுக்கு இசை யமைத்ததற்காக ரஹ்மானோ, பாடியதற்காக பாடகர்களோ, படம்பிடித்த தற்காக கௌதம் மேனனோ, யாருமே பணம் வாங்கிக் கொள்ளவில்லை என்பதுதான் விசேஷமான நெகிழ்ச்சி.

சந்திப்பு : **மௌலி**



* ஸ்ரீநிதி சிதம்பரம்

விழுதுகளின்



'மலேசியாவில் தமிழ் பேசுகிறவர்கள் இருக்கிறார்களா? தமிழ் எழுத்தாளர்கள் உண்டா?' என்று கேட்டார் ஒரு பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர். சில ஆண்டு களுக்கு முன் நான் தமிழகம் வந்திருந்த போது இக்கேள்வி! அவரது அறியாமை மீது ஏற்பட்ட வருத்தத்தைவிட அப்படிப்பட்ட ஒரு நிலைக்குக் காரணமாக இருக்கிறோமே என்ற வெட்கம்தான் ஏற்பட்டது. தமிழகம், படைப்பாற்றலின் உச்சம் என்றால், மலேசியா சொச்சம்தான். ஆனாலும் கூட, தமிழ் மக்களுக்கு, மலேசியத் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தோம்,'' என்கிறார்; மலேசியாவிலுள்ள தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் ராஜேந்திரன்.

''அதையொட்டி, மலேசியாவிலிருந்து எழுத்தாளர்கள் குழு, தமிழ்நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அந்த இலக்கியப் பயணத்துக்கு நாங்கள் இட்ட பெயர் 'வேர்களைத் தேடி விழுதுகளின் பயணம்.' சுமார் இரு வார காலம் நடந்தது அந்த இலக்கியப் பயணம்.

''இப்போது 'மக்கள் ஓசை, மலேசிய நண்பன், தமிழ் நேசன் என மூன்று முக்கிய தினசரிகள் மலேசியாவில் வெளிவருகின்றன. நயனம், வானம்பாடி, தென்றல் ஆகியவை இங்கே பிரபலமான வார இதழ்கள். இவை தவிர நிறைய மாத இதழ்கள் வருகின்றன. கல்கி வைர விழா சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற எழுத்தாளர்களில் ஒருவர், எங்கள் மலேசிய எழுத்தாளரான கார்த்திகேசு என்பது உங்களுக்குத் தெரியுமா?' என்று சாதித்த பெருமையில் கேட்கிறார் ராஜேந்திரன்.


● ராஜேந்திரன்

பயணம்!

''இரண்டாம் முறை பயணத்தின்போது, தமிழகத்தில் சென்னை, புதுவை, மதுரை மற்றும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகங்களில் இலக்கியக் கருத்தரங்குகளுக்குத் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை ஏற்பாடு செய்திருந்தது. அவற்றில் நாங்கள் கட்டுரைகள் வாசித்தோம்; எங்களுடைய நூல்களை, சலுகை விலையில் மாணவர்களுக்கு வழங்கினோம்; தமிழறிஞர்களுடனும், எழுத்தாளர்களுடனும் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டோம் என்கிறார் ராஜேந்திரன்.

இன்றைய தலைமுறையினர் தமிழ் படிக்கின்றனரா? உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன என்றதற்கு...?

'ஆண்டுதோறும் இரண்டு தமிழ் எழுத்தாளர்களை மலேசியாவுக்கு வரவழைத்து, மலேசியப் படைப்பாளிகளுக்கு அவர்களுடன் கருத்துப் பரிமாற்றங்கள் செய்யவும், இலக்கிய விவாதங்கள் நடத்தவும், அவர்களைக் கொண்டு ஆர்வம் உள்ள இளைய தலைமுறையினருக்கு எழுத்து உத்திகளைக் கற்றுத்தரவும் திட்டத்தை விரைவில் உருவாக்கப் போகிறோம்.

'ஆறாம் வகுப்பு வரை பள்ளிகளில் தமிழ் வழியாகவே கல்வி கற்பதற்குரிய வாய்ப்புகளை அரசாங்கம் உருவாக்கிக் கொடுத்துள்ளது. பெரிய அளவில் வசதி இல்லாத தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குத்தான் அத்தகைய பள்ளிகள் என்று இருந்து வந்த எண்ணம் சமீபகாலமாக மாறி வருகிறது. மேலும், மலேசியத் தமிழ்ச் சங்கம் எடுத்து வரும் முயற்சிகளின் பலனாக, மக்கள் மத்தியில் தமிழ் பேசும், படிக்கும் ஆர்வம் அதிகரித்துள்ளது. இவை எல்லாம் ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள்' என்கிறார் ராஜேந்திரன்.

சந்திப்பு : **எஸ்.சந்திரமௌலி**

தமிழன் என்று பெயரிட்டவர்!

தொல்காப்பியத்திலும், சிலப்பதிக்காரத்திலும் தமிழன் என்ற சொல் காணப்படவில்லை. அப்பர் சுவாமிகள்தான் ''ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய், அண்ணாமலை உறை எம் அண்ணல் கண்டாய்'' என்று எழுதியுள்ளார். இவரை யடுத்து பூதத்தாழ்வார் 'பெருந்தமிழன் நல்லேன் பெரிது' என்று குறிப்பிட்டுள்ளார்.

- கு.மூர்த்தி, திருச்சி



'ஈழத் தமிழ் மக்களோட முதுகெலும்பை முறிச்சு, உலகளாவிய தமிழ்ச் சமூகத்துக்குப் பேரழிவு ஏற்படுத்தப்பட்டிருக்கு இலங்கை அரசால். அதைப் பற்றி எந்தவிதமான குற்ற உணர்வும் இல்லாம, இதற்கெல்லாம் பரிகாரமா எதுவுமே செய்யாம, வெறுமனே மக்களைத் திசை திருப்ப அவசரம் அவசரமாக ஒரு செம்மொழி மாநாடு நடத்துவதை என்னைப் போன்ற தமிழ் உணர்வாளர்களால் ஒத்துக்

கிரீடம் சூட்டி கோவணத்தை உருவலாமா?



கொள்ள முடியலை.' இப்படியாக அதிருப்திக் குரல் கொடுக்கிறார் இலக்கியவாதியும், விமர்சகருமான கோவை ஞானி.

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலை கிடைக்கலை; தமிழ்நாட்டுல மக்களோட வாழ்க்கை ரொம்ப அவலமா ஆகிக்கிட்டிருக்கு. தற்கொலைகளும், மனநோய் பாதிப்பும் அதிகமாகிக்கிட்டே இருக்குது.

தமிழ் நாட்டில் இருந்தாலும், தமிழ் படிக்க வேண்டிய தேவை இல்லைன்னு தமிழ் இளைஞர்கள் மத்தியில ஒரு மனப்பான்மை வந்திட்டது. தமிழ் நாட்டுல ஆங்கிலத்துக்குத் தரப்படும் முக்கியத்துவம், தமிழுக்குக் கொடுக்கப்படலை. தமிழனுடைய தலையில ஒரு கிரீடம் சூட்டி, இடுப்புல இருக்குற துணியை உருவுகிற வேலைதான் இங்கே நடக்குது.

கலைஞரைப் பற்றி விமர்சனம் செய்யத் தமிழ் அறிஞர்கள் பயப்படறாங்க.

எங்களால சில ஆயிரம் பேரைத் திரட்டி ஒரு ஊர்வலம் கூட நடத்த முடியாது. எங்களால முடிஞ்சதெல்லாம் எங்கள் உணர்வுகள் பிரதிபலிக்கும்படியா ஒரு மலர் வெளியிட முடியும். ஒரு சின்ன கருத்தரங்கம் நடத்தி, அதை வெளியிட முடியும். அவ்வளவுதான்.

நாங்க வெளியிடும் மலரில் யார் யாரெல்லாம் பங்களிக்கறாங்கன்னு நான் முன் கூட்டியே வெளியில சொல்ல வேணாமுன்னு பார்க்கறேன். எழுதியவர்களை அரசு கைது செய்யும் சூழல் நிகழலாம்.

எங்க வழியில் ஏதோ சின்ன அளவுல ஆதங்கத்தைப் புரிஞ்சு எங்க அதிருப்தியை வெளிப்படுத்தறோம். எங்கள் மலரைப் படிக்கிறவங்களும் புரிஞ்சுப்பாங்க!'

இந்தத் தமிழ்ச் சமூகத்தின் மேலயும் இவங்களுக்கு உண்மையான அக்கறை இல்லையேங்கற ஆதங்கம் எனக்கு நிறைய இருக்கு. இன்னிக்கு தமிழின், தமிழனின் நிலை பெருமைப்படும்படியாகவா இருக்கு?'' என்றுக் கேட்கும். கோவை ஞானியின் குரலில் தார்மீகக் கோபம் கொப்பளிக்கிறது.

சந்திப்பு : **கௌதம்**







ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501. திருவாரூர் மாவட்டம்.

ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா

24.6.2010 வியாழக்கிழமை

அன்புடையீர்,

பாடல்பெற்ற இத்தலத்தின் ஆலயம் கால வெள்ளத்தினால் சிதிலமுற்றிருந்ததைக் கண்டு கருவேலி குழந்தை அய்யர் அவர்களின் சந்ததியினர் மேற்கொண்ட பெரும் முயற்சியினால் அழகுற திருப்பணிகள் செய்விக்கப் பெற்று 1997ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. அதன்பின் மீண்டும் சமீபத்தில் மூன்று ஆண்டுகளுக்கு முன் திருப்பணிகள் துவங்கி, முக்கியமாக ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத சுப்ரமண்யர், ஆஞ்சநேயர், சிம்மவாஹினி ஸன்னதிகள், ஸ்வாமி அம்பாள் ராஜகோபுரங்கள், கட்டப்பட்டு, ஸர்வதாரி ஆண்டு ஆனி மாதம், 30ந் தேதி 14.7.2008 திங்கட் கிழமை மீண்டும் கும்பாபிஷேகம் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தற்பொழுது இதன் **இரண்டாம் ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகம் மங்களகரமான விக்ருதி வருஷம், ஆனி மாதம், 10ம் தேதி,** 24.6.2010 **வியாழக்கிழமை** அனுஷ நக்ஷத்திரம், சித்தயோகம் கூடிய சுபதினத்தில் கீழ்கண்ட நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறுகிறது. ஆன்மிக அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஸ்ரீஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீசற்குணேஸ்வரப் பெருமானின் பேரருளை பெற வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நிகழ்ச்சி நிரல் : காலை 8 மணி - அனுக்ஞை, விக்னேஸ்வரபூஜை, கணபதி ஹோமம், கடஸ்தாபனம் ஹோமங்கள் ஆரம்பம், பகல் 12 மணி - பூர்ணாஹுதி, கடங்கள் புறப்பாடு - அபிஷேகம் அலங்காரம் - தீபாராதனை, மாலை 5 மணி - திருக்கல்யாண நிகழ்ச்சிகள் ஆரம்பம், இரவு 7 மணி - திருக்கல்யாணம் பூர்த்தி

Dr. V. கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை அறங்காவலர்
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
தலைவர்: **ஸ்ரீ ராமசர்மா,** (போன்:94434 05965)
செயலாளர்: **திரு ஜி.குஞ்சிதபாதம்** (97864 61493)
மற்றும்
கருவிலி கிராமவாசிகள்

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

திரு. ஜி.கண்ணன், Secretary, Sri Sarguneswarar Temple Management Committee, **கே.கே.நகர், சென்னை - 600 078.** போன் : 98840 34020

திரு. ஆர்.சின்னதுரை, மேனேஜர், ஸ்ரீ சற்குணேஸ்வரர் ஆலயம், போன் : 04366 - 273900

திரு. வைத்தியநாத ஸ்வாமி, கும்பகோணம், போன் : 0435 - 2403772

திரு. கிருஷ்ணமூர்த்தி ஐயர், கும்பகோணம், போன் : 0435 - 2443388, செல்:9443 384845

இந்தியாவின் பல்வேறு மொழிகளில் உள்ள இலக்கியங்களையும், அவற்றைப் படைத்த எழுத்தாளர்களையும் கூர்மையுடன் ஆராய்ந்து, நான்கு பாகங்கள் கொண்ட தொகுப்பு நூலாக உருவாக்கியுள்ளார் சிவசங்கரி. பேட்டிகள், தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட படைப்புகள், சமூக வரலாறு என இந்தியாவின் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு நாற் திசைக்குமான செறிவுள்ள இலக்கிய ஆவணங்கள் 'இலக்கியம் மூலம் இந்திய இணைப்பு' தொகுதிகள் எனலாம். இப் பணியின் மூலம், தமிழின் உன்னதங்களையும் அவர் பிற இந்திய மொழிக்கு கொண்டு சென்றிருக்கிறார். இதனூடாய் அமைந்த தமது இமாலய இலக்கியப் பணி அனுபவங்களைக் கல்கி வாசகர்களோடு பகிர்ந்துகொள்கிறார் சிவசங்கரி...



திசைதோறும்

நான் எழுத ஆரம்பித்து 25 ஆண்டுகள் ஆனபோது, ''இந்த நாட்டுக்கும், இலக்கிய உலகத்துக்கும் நான் இன்னும் தரவேண்டியது என்ன? என என்னை நானே கேட்டுக் கொண்டேன். அப்போது, என் மனத்தில் உதித்த எண்ணம் தான் இலக்கியம் மூலமாக இந்திய இணைப்பு. இதைச் செய்யச் சொல்லி யாரும் என்னைக் கட்டாயப்படுத்தவில்லை; இது நானாக விரும்பி எடுத்த முடிவு.''

பதினெட்டு இந்திய மொழிகளிலும் நான் முதலில் செய்தது ஹோம்-வொர்க். மாநிலம் பற்றியும், அதன் இலக்கியம் மற்றும் எழுத்தாளர்கள் பற்றியும் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியானவற்றை முழுமையாகப் படித்து முடித்தேன். அடுத்து, பல்வேறு மொழிப் பத்திரிகைகளுக்கும், எழுத்தாளர்களுக்கும், அமைப்புகளுக்கும் அந்தந்த மொழியில் உள்ள மிகச் சிறந்த இலக்கியவாதிகள், கவிஞர்கள், சிறுகதை மற்றும் நாவலாசிரியர்களின் பெயர்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கடிதம் எழுதினேன். பல பத்திரிகைகளுக்கு, தங்கள் மொழியின் சிறந்த இலக்கியவாதிகள் யாரென்றே தெரியவில்லை! அப்படியே பெயர் தெரிந்திருந்தாலும், அவர்கள் உயிரோடு இருக்கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை; அவர்களின் முகவரி தெரியவில்லை; எப்படியோ சிரமப்பட்டு மொழிவாரியாகப் பட்டியல் தயார் செய்து, அந்த எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டது மூன்றாவது கட்டம். போன் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் அவர்களுடன் தொடர்பு கொண்டு, ஒரு குறிப்பிட்ட கால கெடுவுக்குள் அவர்கள் அனைவரது அப்பாயின்ட்மென்ட்களையும் வாங்கி, அதன் பிறகு அவர்களைச்

சந்திக்கச் சென்றேன்.

நான்காவது கட்டம், டேப்பில் பதிவுசெய்த எழுத்தாளர்களுடனான எனது உரையாடல்களை, நேர் காணலை மொழிபெயர்த்து எழுதுவது. இதற்கிடையில் நான் சந்தித்து, உரையாடிவிட்டு வந்த சிவராம்கரந்த் (கன்னடம்), வைக்கம் முகம்மது பஷீர், தகழி சிவசங்கரன் பிள்ளை (மலையாளம்) வீரேந்திர குமார் பட்டாசார்யா (அஸ்ஸாமி) போன்ற சில மிகவும் மூத்த எழுத்தாளர்களின் மரணம் என்னைப் பயமுறுத்தியது.

சுபாஷ் முக்கோபாத்யாயா என்று வங்க மொழியில், கம்யூனிச சித்தாந்தத்தில் பற்றுகொண்ட மூத்த கவிஞர். அவரை நான் சந்தித்தபோது, எல்லாக் கேள்வி களுக்கும் விளக்கமாகப் பதில் தந்தார். இரண்டு வருடங்கள் கழித்து, அவரைப் பற்றி எழுதி முடித்துவிட்டு, திருத்தங்களுக்காக மீண்டும் அவரைச் சந்தித்தபோது,

தமிழ்!

அவர் முழுமையாகக் கேட்கும் திறன் இழந்து, பேசவும் முடியா மல் போய், தாம் சொல்ல விரும்பி யவற்றை பலகையில் எழுதிக் காட்டினார்.

இம்மாதிரியான இயற்கை தந்த இடர்ப்பாடுகளினூடாக ஒரு பிராந்தியத்துக்குரிய இலக்கியப் பணியை முடிக்க, எனக்கு பத்து, பன்னிரண்டு லட்சம் ரூபாய் வரை தேவைப்பட்டது. இதற்காக யாரிட மிருந்தும் எனக்குப் பெரிதாக நிதியுதவி கிடைக்கவில்லை. என் கைகாசைத் தான் செலவழித்தேன்.

Sixty Page

நவகாந்த பருவா. அஸ்ஸாமியக் கவிஞர். அவர் எழுதிய ''பரிணாம வளர்ச்சி'' என்ற அற்புதமான கவிதை யின் மொழிபெயர்ப்பைப் படித்துப் பிரமித்துப் போனேன் :

ஒரு அவலட்சணமான புழு, தன் னைச் சுற்றி ஒரு கூட்டைக் கட் டிக் கொண்டு அஞ்ஞாத வாசம் இருந்துவிட்டு, அந்தக் கூட்டைப் பிரித்துக் கொண்டு மிக ரம்யமான ஒரு வண்ணத்துப்பூச்சியாக வெளியில் வருகிறது. ஒரு புழு இப்படி அழ கான வண்ணத்துப்பூச்சி ஆவதைத்தான், பரிணாம வளர்ச்சி என்று சொல்கிறோம். ஆனால், வண்ணத்துப்பூச்சி இன்னொரு வண் ணத்துப்பூச்சியைப் பிரசவிப்பதில்லை! புழு வாக உருவாகக்கூடிய முட்டையைத்தான் அத னால் இடமுடியும்! அதுபோலத்தான் நம் சமூகத் தையும், கஷ்டப்பட்டு உழைத்து அதனை மேம்படுத்தினாலும்கூட, அது மீண்டும் மோசமான மனிதர்களையே உருவாக்கு கிறது.


* எம்.டி.வாசுதேவன்

இதுபோல அற்புத மான சிந்தனைகளை ஒவ்வொரு மொழியி லும் சில எழுத்தாளர்கள் அளித்திருக்கிறார்கள்.

மொழியால் இந்திய மக்கள் வேறுபட்டிருந்தா லும், அவர்கள் அனைவரையும் இணைக்கும் நூல் நம்முடைய கலாசாரம்தான். இந்தக் கலாசார இணைப்பு அந்தந்தப் பகுதியின் இலக்கியங்களில்

பிரதிபலித்திருக்கிறது.

நான் பார்த்தவரையில் 18 மொழி எழுத்தாளர் களுக்கும் ஒரு கவலை இருக்கிறது. டெலிவிஷன், இன்டர்நெட் போன்ற மாற்று ஏற்புகள் நிறைந்த சூழலில் இலக்கியம் சவால்களுக்கு உட்பட்டிருப்பது பற்றி கவலை.

சிந்தி, மணிப்புரி போன்ற சில மொழிகளில் முழுநேர எழுத்தாளர்களையே நான் பார்க்க வில்லை. அவர்கள் வருமானத்துக்கு ஏதோ ஒரு வேலை பார்த்துக் கொண்டு, எழுதுகிறார்கள். தினமணி சிங் என்ற மணிப்பூரி எழுத்தாளர், ''நான் ஆத்மதிருப்திக்காக ஆசையோடு என்னு டைய குரு எழுதிய புத்தகத்தை ஆயிரம் பிரதிகள் அச்சிட்டேன்; இரு நூறு பிரதிகளை இல வசமாகக் கொடுத் தது போக மீதி எண் ணூறு அப்படியே இருக் கிறது. உங்களுக்குத் தரு கிறேன். எடுத்துக்கொண்டு போகிறீர்களா?'' என்று மனம் நொந்து கேட்டார்.



வண்ணத்துப்பூச்சி, வண்ணத்துப்பூச்சியைப் நேசிப்பதில்லை. புழுவாக உருவாகக்கூடிய முட்டையைத்தான் அதனால் விடமுடியும்!
- நவகாந்த் பருவா

மலையாளம், இந்தி, தமிழ், பெங்காலி, மராத்தி என்று சில மொழி எழுத்தாளர்கள் மட்டுமே, எழுத்தின் மூலம் சம்பாதித்து வரி கட்டும் அளவுக்கு வசதியாக இருக்கிறார்கள். ஒரு மொழி வளர வேண்டும் என்றால், இலக்கியம் வளர வேண்டும். இலக்கியம் வளர வேண்டும் என்றால் எழுத்தாளர்களும், பதிப்பாளர்களும் நிறைய உருவாக வேண்டும்; அப்படி இல்லை என்றால், எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளை எழுதி எழுதித் தங்கள் வீடுகளிலேயே வைத்துக் கொள்ள வேண்டியதுதான்.

ஜாதிக்கொடுமை போன்ற சமூகப் பிரச்னை கள் குறித்து எல்லா மொழிகளிலும் எழுதப்பட் டிருக்கின்றன. ஜாதிக் கொடுமை காரணமாக சீக்கிய மதத்துக்கு மாறியவர்கள், அங்கே போன பிறகும் தாழ்த்தப்பட்டவர்களாகவே நடத்தப்படுவது பற்றி சீக்கிய மதத் துக்கு மாறிய பல்தேவ் மாதவ் பூரி என்ற எழுத்தாளர் என்னிடம் கூறினார். மதம் மாறிவந்த தாழ்த் தப்பட்டவர்களுக்காக தனி குருத் வாரா இருக்கிறதாம்! செருப்பு தைக்கும் இனத்தைச் சேர்ந்த பல்தேவ் மாதவ், சீக்கிய மதத்துக்கு மாறின பிறகு, தம் பெயருடன் 'சிங்' என்று சேர்த்துக் கொள்ள அனுமதி மறுக்கப்பட்டுள்ளார்! இதை அவர் சொன்னபோது, எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

ஜாதி ஒழிய என்ன வழி என்ற கேள்விக்குப் பல எழுத்தாளர்களும் 'கலப்புத் திருமணங்களை ஊக்கு விப்பதுதான்' என்று ஒரே மாதிரி பதில் அளித்தார்கள்.

கேரளாவில், திரூரில் உள்ள எழுத்தச்சன் நினை வாலயத்துக்கு என்னை அழைத்துக் கொண்டுபோய், அவருடைய எழுத்தாணியை என் கையில் கொடுத்து எழுதச் செய்து வாழ்த்தி னார் பிரபல மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் நாயர். அந்தக் கணம் நான் மெய்சிலிர்த்துப் போனேன்.

குறுக்கு, நெடுக்காக இந்தியா முழுக்க பயணம் செய்து பதினெட்டு மொழிகளின் இலக்கிய ஜாம்பவான்களின் சிந்தனைகளை அச்சில் பதிவுசெய்திருக்கிறேன். இந்த அரிய வாய்ப்பு எனக்கு பெரும் பாக்கியம்தான்!

தொகுப்பு: **எஸ்.சந்திரமௌலி**

அவாரஸியத்தின் ரகசியம்!

வி.கே.லக்ஷ்மி நாராயணன்

அன்று யதேச்சையாக உண்டியலைக் கையில் எடுத்தாள் பவித்ரா. உண்டியல் கனமாக இருக்க, குஷியோடு இரண்டு தடவை குலுக்கிப் பார்த்தாள். உள்ளேயிருந்த நாணயங்களின் 'ஜலீர்' சத்தம், அவள் காதுகளில் தேனாய்ப் பாய்ந்தது.

தந்தை கொடுத்த பாக்கெட் மணியில், செலவுபோக, மிச்ச மீதியிருந்த காசுகளை அந்த உண்டியலில்தான் போட்டு வைத்திருந்தாள். இப்போது முக்கால்வாசி நிரம்பியிருந்தது.

பணம் தந்தையுடையதுதான் என்றாலும், சேமிப்பு தன்னுடையது என் கிற பெருமை பவிக்கு.

உடனே உண்டியலைத் திறந்து பார்க்கும் ஆவலில் அவற்றை நிமிர்ந்து பார்த்தவளுக்கு அதிர்ச்சி! ஆணியில் தொங்கிக் கொண்டிருந்த உண்டியல் சாவியைக் காணவில்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

தன் பிறந்த நாள் பரிசாகத் தந்தை ஆசையோடு வாங்கிக் கொடுத்த உண்டியல்! இப்போது சாவி இல்லாதபட்சத்தில் உண்டியலை உடைக்க வேண்டியிருக்குமே என்று நினைக்கும்போது, அழுகை வரும்போல் இருந்தது அவளுக்கு.

முகவாட்டத்துடன் வெளிப்பட்ட மகளை என்னவென்று ராகவன் விசாரிக்க விஷயத்தைச் சொன்னாள் பவி.

''அட, இதுக்கேன்ம்மா இப்படிக் கவலைப்படறே? உண்டியலைச் சேதாரமில்லாம திறக்க நானாச்சு!'' என்றவர், அடுக்களையில் நுழைந்து வெளிப்பட்டபோது, அவர் கையில் ஒரு ஸ்பூன் இருந்தது.

அந்த ஸ்பூனின் அடிப்பாகத்தை சாவித் துவாரத்தினுள் நுழைத்து, லாவகமாகத் திறக்க, ஜம்மென்று திறந்து கொண்டது உண்டியல்! உள்ளேயிருந்த நாணயங்கள் மேஜை மீது உருண்டோடின.


''இப்போ ஓ.கேவா பவி?''

'ஆம்' என்று தலையசைத்தாலும், பவிக்குள் தோன்றிய ஷண நேர சந்தோஷம் சட்டெனக் காணாமல் போனது.

மனத்தில் நெருடல். 'எதைக் கொண்டும் உண்டியலைத் திறக்க முடியுமென்றால், அப்புறம் எதற்காக சாவின்னு ஒண்ணு!'

சேஃப்டி லாக்கரைப் போல் எண்ணி பெருமைப்பட்டிருந்தவளுக்கு, இப்போது அந்த உண்டியல் வெறும் தகர டப்பாவாய்க் காட்சியளிக்க, உண்டியலைத் தூக்கிப் பரணில் எறிந்தாள் பவித்ரா. ●





Scooty pept

செம்மொழி மாநாட்டுக்கு நல்வாழ்த்தையும், கூடவே ஒரு கோரிக்கையையும் சொல்லிக் கொண்டு தொடங்குவோம்(கோரிக்கை கொசுறாக வராத வாழ்த்து ஏது?).

'ஆனைக் காரியத்திலே சேனைக் காரியமாக', மாநாட்டை ஒட்டி மதுரை, கோவை, திருச்சி விமான நிலையங்களில் ராடார் நிறுவ தமிழக அரசு ஏற்பாடு செய்தால், விமான விபத்து அபாயங்களில் இருந்து தப்பிப் பிழைத்து, தமிழ் உலகே மறுபடி வாழ்த்தும். அடுத்தடுத்த கோரிக்கைகளையும் கூடவே வைக்கும்.

ராடாரும் தொழில்நுட்பம் தொடர்பானது தான். ஆனாலும் டெக்னாலஜி என்றால், சட்டென்று கம்ப்யூட்டரும் அதோடு இணைந்த சிந்தனையாக இணையம் என்ற இண்டர்நெட்டும் மாத்திரம் நம்மில் பலருக்கும் நினைவுக்கு வருகிறது போல், மாநாட்டு அமைப்பாளர்களுக்கும் வந்ததைக் குற்றம் சொல்லிப் புண்ணியமில்லை.

ஊரோடு ஒத்து வாழணுமா? சரி. கம்ப்யூட்டரையே எடுத்துக் கொள்வோம். சுவர் ஓரமாக உட்கார்த்தி வைத்திருக்கும் அதை இயக்கலாம், - மின்சாரம் இருந்தால். பொத்தானை அழுத்தி, திரை உயிர் பெற்றதும் ரஹ்மானின் இசையமைப்பில் முதல் துளி போல் அற்புதமான ஒலி. அப்புறம் 'விண்டோஸ்

வடம்பிடிக்கலாம் வாங்க!

இரா. முருகன்

இஸ் ஸ்டார்டிங் நௌ' என்று செய்தி. எங்க இங்கிலீஷ் வாத்தியார் கேட்டால், இலக்கணப் பிழை என்று மணிக்கட்டில் அடிப்பார். தப்போ, சரியோ, இதெல்லாமே இங்கிலீஷில்தான்.



மைக்ரோசாஃப்ட் பில்கேட்ஸை தட்டிக் கேட்க முடியாது. ஆனாலும், தயவாகக் கேட்கலாமே. மாட்டேன் என்றால் யாரும் சமைத்து யாரும் பயன்படுத்தும் இலவச சத்திரச் சாப்பாடான லைனக்ஸ் இருக்கவே இருக்கு. தமிழில் யார் முதல் கம்ப்யூட்டர் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை எழுதப் போகிறோம்? எப்போது?

கம்ப்யூட்டரில் தமிழ் எழுத்துரு (font) இறக்கிக்கலாம். மாநாடு தொடர்பாகப் பத்திரிகையில் வெளியான செய்திக் குறிப்பில் 'எழூத்துறு'ன்னு தப்பா அடிக்க வந்திருக்கு. அதை விடுங்க. என்ன மாதிரியான எழுத்துரு? தமிழுக்கே தனியான டிஸ்க்கியா, 'டாப்'-ஆ, டாம்-ஆ, உலகப் பொதுமறையான யூனிகோடா என்று ரெண்டு மாமாங்க காலம் தமிழ்-இணைய அறிஞர்கள் சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களுக்கு விமானம் ஏறிப்போய்ப் போரிட்டு, ஒரு வழியாக யூனிகோட் எழுத்துருவை ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்ய இத்தனை காலமாச்சு!



இப்போதைக்கு தமிழ் யூனிகோட் எழுத்துருவையும், முரசு-அஞ்சல் போன்ற தமிழ் மென்பொருட்களையும் பயன் படுத்தி, இங்கிலீஷ்காரக் கம்ப்யூட்டரில் தமிழில் எழுதி, அச்சடித்து, மின்னஞ்சல் அனுப்பி, இணையத்தில் போட்டு வைக்கலாம். வாழ்க!

தமிழ் வெர்ச்சுவல் பல்கலைக்கழகம், மதுரைத் திட்டம் போன்ற இணைய தளங்களில் சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, திவ்யப் பிரபந்தம் தொடங்கி பாரதி, பாரதிதாசன் படைப்புகள் வரை இப்படித் தட்டித் தட்டி சேமித்து வைத்திருக்கிறார்கள். பொள்ளாச்சி நசன் போன்ற அபூர்வ மனிதர்களின் தயவால், தமிழில் சிறு பத்திரிகைகளும் நூறு வருடத்துக்கு முந்திய தமிழ் இதழ்களும் ஸ்கேனரால் வருடப்பட்டுப் பிம்பமாக இணையத்துக்கு வந்தன. இவர்களும் வாழ்க.

ஸ்கேனர் என்றதும் நினைவு வருது. பழைய புத்தகத்தை வருடி ஏற்படுத்திய நகலை, அப்படியே எழுத்துருவாக மாற்றிச் சேமித்து வைக்க ஆப்டிகல் கேரக்டர் ரெகக்னிஷன் சாதனங்களான ஓ.சி.ஆர் போன்றவை பல ஆண்டுகளாக ஆங்கிலத்தில் பயன்படுத்தப்படுகின்றன. ஹார்ட்வேர் - சாப்ட்வேர் தொகுதியான இந்த ஓ.சி.ஆரை தமிழ்ப் புத்தகங்களுக்கும் பயன்படுத்தப் புதிதாக எழுதியபோது, முதல் சிக்கல் - லை, நை, னை, ணை இதெல்லாம் பழைய உருவில் இருந்தால் ஓ.சி.ஆர் தடுமாறும். அது ஔவையாரை

ஔ-ள-ளையார் என்று வேறு படித்து அரண்டு கொண்டிருந்தது. ஒரு வழியாகத் தட்டிக் கொட்டி சரி செய்து மென்பொருளை நேராக்கியதாக எப்போதோ செய்தி படித்த நினைவு. அப்புறம், மங்கலான அச்செழுத்தில் பழைய புத்தகங்களை வருடும் போது எழுத்து புரியாமல் பிரச்சனை வேறு. சமாளித்தார்களா? எல்லோரும் உபயோகிக்க எதுவாக, சொற்ப விலைக்கு அல்லது இலவசமாக எப்போது தமிழ் ஓ.சி.ஆர் கிடைக்கும்?

நமக்கென்று எப்போது ஒரு தக்கி (தமிழ் விக்கி), தமிழ் மேய்வான் (ப்ரவுசர்) கிட்டும்? அப்புறம் தமிழ் எழுத்தில் இணைய தளப் பெயரை எப்போது வைக்கலாம்?

வருடியோ, பெட்டியில் பொறுமையாகத் தட்டியோ தமிழ்ப் புத்த கங்களை இணையத்தில் ஏற்றி வருங்காலத் தலைமுறை படிக்க வாய்ப்பாகச் சேமித்து வைப்பது நல்ல காரியம்தான். ஆனால் இலக்கியம் மட்டும் போதுமா? தமிழில் தொழில்நுட்பத்தை இணையம் ஏற்றுவது பழைய - புதிலக்கியப் படைப்புகளோடு முடிந்து விட்டதா? தமிழ்க் கம்ப்யூட்டரானது, இலக்கியத்தைக் கடந்து அறிவியலை, மருத்துவத்தை, பெர்மா தியரியையும், கர்மாகர் சமன்பாட்டையும் விளக்கும் கணிதத்தை எல்லாம் எப்போது இணையத்தில் தமிழில் ஏற்றப் போகிறது?

'அன்பே'ன்னு விளிக்க அத்தான் இல்லை, பிள்ளை பிறந்தால் என்ன பெயர் வைக்கலாம்னு யோசிக்கறது போலத்தான் இது. ஆர்க்கியாலஜியில் இருந்து ஏ டு இஸட் ஆக, ஸுவாலஜி வரை தமிழில் அறிந்து கொள்ளப் புத்தகங்கள் வேணும். ஆர்க்கியாலஜியை தொல்பொருள் ஆராய்ச்சி என்றும், ஸுவாலஜியை உயிரியல் என்றும் தமிழ்ப் படுத்திவிட்டு, அக்கடா என்று ஓய்வு எடுக்கிற விஷயமில்லை. உட்கார்ந்து பொறுமையாகத் தொழில்நுட்பச் சொற்களைத் தமிழாக்க வேண்டும்.

எல்லா டெக்னிக்கல் வார்த்தைக்கும் நல்ல தமிழில் கலைச் சொல்லாக்கம் நடத்தியே ஆகணும் என்ற பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்தி, அங்கங்கே ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் பாவித்து, கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழுக்கு மாறுவது எளிய வழி. சுலபமாகப் புரிய வைப்பதுதான் இங்கே நோக்கம். தமிழ்ப் புலமையைக் காட்ட தமிழ் சினிமா உட்பட வேறு வழிகள் இருக்கின்றன.

அடுத்து, தமிழ் என்சைக்ளோபிடியா. விக்கிபிடியாவின் முதுகில் குதிரையேறி தமிழ் விக்கியை உருவாக்கலாம்தான். ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். நமக்கென்று எப்போது ஒரு தக்கி (தமிழ் விக்கி), தமிழ் மேய்வான் (ப்ரவுசர்) கிட்டும்? அப்புறம் தமிழ் எழுத்தில் இணைய தளப் பெயரை எப்போது வைக்கலாம்?

நாம் இங்கே இணையத்தில் தமிழைக் கொண்டு வரப் பேசிக் கொண்டிருக்கிறோம். தமிழ் எழுதத் தெரியாமல் இரண்டு தலைமுறை வளர்ந்து விட்டதைக் கணக்கில் எடுத்துக் கொண்டோமா? இந்தியா உள்ளிட்ட பன்னாட்டுத் தமிழர்களில் எத்தனை பேருக்குத் தமிழில் தம் பெயரை மட்டுமாவது எழுதத் தெரியும்? இணையத்தில் தமிழ் சொல்லிக் கொடுக்க, ஒளி-ஒலி உருவத்தில் பெரிய அளவில் ஏற்பாடு உண்டா?

இதெல்லாம் அரசு மட்டும் செய்கிற காரியம் இல்லை. ஊர்கூடி இழுக்க வேண்டிய தேர் இது. வாருங்கள், வடம் பிடிப்போம்.



MILKY WAY CELL TECH®

SALES & SERVICE

MOBILES | Airtel | DTH

For transferring your mobile contents, photos, videos and sms, you can visit our show room and we also service specialist in all models.

- Once water gone inside mobile, remove the battery immediately and clean the set peripherals then put the battery and use the mobiles.
- Always charge the battery once showing "battery low".
- Don't Transfer data through Bluetooth that will spoil the mobile frequency.

மில்கிவே செல் டெக்®

No. 94 Habibllah Road, T.Nagar, Chennai - 600 017.
Tel: 2834 2020, 2834 2929, Fax: 4212 5090 Mobile: 98400 66110-8
milkyway.celltech@yahoo.com

"Service is our way of life"

கோவை ரேஸ் கோர்ஸ் சாலையில், விருந்தினர் இல்லத்தில் முதல் மாடி. அதிகாரிகள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்க அரசு முதன்மைச் செயலாளரும், தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் தனிஅலுவலருமான கா. அலாவுதீன், கொஞ்சம் கூட டென்ஷன் இல்லாமல், நம்மைப் புன்னகையுடன் வரவேற்கிறார். ''உங்கள் சர்வீஸில் இந்தப் பொறுப்பு பெரிய சவால்தானே?'' என்று துவங்கினோம்.



✸ கா. அலாவுதீன்

''இந்தப் பெரிய பொறுப்பை என்னை நம்பி மட்டும் முதல்வரும், துணை முதல்வரும் ஒப்படைக்கவில்லை. கீழே இருந்து மேலே வரை ஒட்டுமொத்த அரசு ஊழியர்களும், அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பு கொடுப்பதால்தான் திட்டமிட்டபடி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தப் பொறுப்பில் இருந்தாலும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டால் நமக்கு ஒரு ஆத்மதிருப்தி கிடைக்கும்'' என்கிறார். மாநாட்டுக்கென அமைக்கப்பட்டுள்ள இருபத்திரண்டு குழுக்களோடு இணைந்து செயல்படுவது; ஒவ்வொரு குழுவுக்கும் தேவையான நிதியை, அது தொடர்பான துறையிலிருந்து பெற்றுத் தருவது. அந்த நிதி சரியான முறையில் செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணிப்பது; இடையில் முதல்வர், துணை முதல்வர், தலைமைச் செயலாளர் ஆகியோரை அடிக்கடி சந்தித்து அவ்வப்போது எழும் பிரச்னைகளைத் தீர்க்க ஆலோசனை கேட்பது என அன்றாடம் பதினெட்டு மணி நேரம் செம்மொழி மாநாட்டுச் சிந்தனையிலேயே இருக்கிறார் அலாவுதீன். அறுபது துறைகள் மற்றும், நிறுவனங்களோடு செயல்பட வேண்டும்.

''முதல்வர் சரியான அதிகாரியை இந்தப் பொறுப்பில் போட்டிருக்கிறார்,'' என்கிறார்கள் உயர்அதிகாரிகள். திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் பட்டம் பெற்று வஃக்ப் போர்டு கல்லூரியில் பேராசிரியராக வாழ்க்கையைத் துவங்கியவர் அலாவுதீன். பின்னர் குருப் ஒன்



அலாவுதீன் கையில்



பரீட்சை எழுதி நெல்லை மாவட்டத்தில் வருவாய்த்துறை அதிகாரியானார். 1981ல் ஐ.ஏ.எஸ். ஆகத் தேர்வு பெற்றார். பல்வேறு மாவட்டங்களில் கலெக்டர், மதுரை சென்னை மாநகராட்சிகளில் ஆணையர், சுகாதாரம் மற்றும் சர்க்கரைத் துறைகளில் உயர்நிலை அதிகாரி என்று பல பொறுப்புகள்.

''மதுரை மாநகராட்சியில் பொறுப்பு வகித்தபோது, ஆக்ரமிப்புகளை அகற்றி அசத்தினார். தர்மபுரியில் மனம் திருந்திய நக்ஸலைட்டுகளுக்கு மறுவாழ்வு வசதி செய்து கொடுத்தார். ரயில்வேத் துறை இணையமைச்சராக இருந்த வேலு, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி. அவர் கலெக்டராக இருந்தபோது அவர் கீழே வேலை பார்த்தவர் அலாவுதீன். அந்த நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு தாம் நெடுஞ்சாலைத் துறைச் செயலராக இருந்தபோது, ஏராளமான மேம்பாலங்கள், சுரங்கப் பாதைகளைத் தமிழகத்திற்கு கொண்டு வந்தார் அலாவுதீன்'' என்கிறார் ஒரு அதிகாரி.

"எந்தப் பொறுப்பில் இருந்தாலும், உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்டால் நமக்கு ஒரு ஆத்மதிருப்தி கிடைக்கும்."

''பந்தல், மேடை, கண்காட்சி அரங்கம், தங்குமிடம், உணவு, வாகன வசதி, ஆய்வுக்கூடங்கள், போக்கு வரத்து, கோவைக்கு கட்டுமான வசதிகள் என்று சுமார் 300 கோடியில் மாநாடு ஒட்டமிடப்பட்டிருக்கிறது. செலவுகளைப் பொறுத்தமட்டில் நான் ஒரு கண்காணிப்பாளர் தான். ஒரு வெளிப்படையான தன்மையோடு, அதே சமயம் விதிகளுக்கு உட்பட்டு, விரைந்து முடிக்க வேண்டிய அவசியத்தையும் கணக்கில் கொண்டு செயல்படுகிறோம்'' என்கிறார் அலாவுதீன்.

கோவையில் பணிகள் நடந்த வேகத்தைப் பார்த்தபோது, அலாவுதீன் கையில் அற்புதவிளக்கு ஏதாவது வைத்திருக்கிறாரோ என்று வியக்கச் செய்தது!


- ப்ரியன்

படங்கள்: ராஜன்



அற்புத விளக்கு!

* செந்தில்நாதன்



நிர்வாகத்தில், நீதி மன்றத்தில், வழி பாட்டில், என 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்ற நிலை உருவாகிடப் பல்வேறு தளங்களில் போராடி வருகிறது, 1975-ல் துவங்கப்பட்ட தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம். ''செம்மொழி மாநாடு வெறும் விளம்பரமாகவும், கொண்டாட்டமாகவும், வெடிச் சத்தம் போல அந்த சமயத்தில் காதுகளைச் செவிடாக்கிக் காற்றில் கரைந்து போகக் கூடாது'' என்கிறார் இச்சங்கத்தின் துணைத் தலைவர், வழக்கறிஞர் செந்தில்நாதன்.

வீண் என்ற வாதம் சரியல்ல!

மாநாடு இப்போது அவசியமா?

இலங்கைத் தமிழர் பிரச்னைக்காகத் தொடர்ந்து போராடி வரும் அதே வேளையில், அத்தோடு செம்மொழி மாநாட்டைத் தொடர்புபடுத்தத் தேவையில்லை. மேலும் இதுவரை நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடுகள் முற்றிலும் வீண் என்ற வாதமும் சரியல்ல.

முந்தைய மாநாடுகளின் வெளிப்பாடாக நடந்த விஷயங்கள்?

முதல் மாநாடு 1966-ல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடந்தது. தனிநாயகம் அடிகள் மாநாட்டை முன்னின்று நடத்தினார். 150 ஆய்வுக் கட்டுரைகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்டன.

1968-ல் நடந்த இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்கு முழுப்பலமாக இருந்தவர் அப்போதைய முதல்வர் அண்ணா. இந்த மாநாட்டில் ஆய்வுக் கூட்டங்கள் நிகழ்த்தப்பட்டு, முக்கியமான ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. சிந்து சமவெளிக் குறியீடுகள், ஆதிகாலத் திராவிடப் பண்பாட்டின் குறியீடுகளாக இருக்கலாம் என்பது பற்றிய தமது ஆய்வை, அறிஞர் ஐராவதம் மகாதேவன் இந்த மாநாட்டில் தான் முன்வைத்தார். இதுவரை நடைபெற்ற எட்டு மாநாடுகளுள் யாழ்ப்பாணம் (1974) கோலாலம்பூர் (1987) மொரீஷியஸ் (1989) ஆகிய மாநாடுகளில் முன்வைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இன்னமும் தொகுத்து நூல்களாக வெளியிடப்படவில்லை. அந்த வகையில் பின்னடைவே.

மாநாடு ஆக்கபூர்வமாக அமைய என்ன செய்ய வேண்டும்?

''இதற்குச் சரியான பதில், 1968ம் ஆண்டு மாநாட்டின்போது பேராசிரியர் நா.வானமாமலை, 'தமிழைச் செம்மொழி என்று வானளாவப் புகழும் நாம், அதை அயல் நாட்டினர் தெரிந்துக் கொள்ள எந்த வகையில் உதவி செய்யப் போகிறோம்?' - என்று எழுப்பிய கேள்விதான். அதுவே இந்தச் செம்மொழி மாநாட்டுக்கும் பொருந்தும்.

- ப்ரியன்



ஸ்ரீ ராம ஜெயம்



ஸ்ரீ மயூரவல்லி சமேத ஸ்ரீ ஆதிகேசவாயநம:
ஸ்ரீ யோகா நரசிம்ம சமேத மஹா சுதர்ஸனாய நம:
ஸ்ரீ விகனஸ மஹாகுரவே நம:

லோக க்ஷேமத்திற்காக 09.07.2010 ஸ்ரீ மஹா சுதர்ஸன ஜெயந்தியை முன்னிட்டு

ஸ்ரீ சுதர்ஸன மஹா யஜ்ஞம்

நாள்: 09.07.2010 வெள்ளி முதல்
11.07.2010 ஞாயிறு வரை

ஸ்ரீ சுதர்ஸன மஹா யஜ்ஞம்
நடைபெறும் இடம்:
ஷோபனா கல்யாண மண்டபம்,
74, ஆரியகௌடா ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை - 600 033
போன்: 2488 0885

ஹோமம் நடைபெறும் நேரம்

வெள்ளிக்கிழமை - 9.7.2010
காலை 6.30 முதல் 9.30 மணி வரை

சனிக்கிழமை - 10.7.2010
காலை 8.00 முதல் மதியம் 12.30 மணி வரை
மாலை 5.30 முதல் 9.30 மணி வரை

ஞாயிற்றுக்கிழமை - 11.7.2010
காலை 7.00 முதல் மதியம் 12.30 மணி வரை

ஸ்ரீ சுதர்ஸன மஹா யஜ்ஞம் கட்டணம்

ரூ. 100/- ரூ. 250/- ரூ. 500/- ரூ. 1000/- ரூ. 2500/- ரூ. 5000/-

மேற்கண்ட அனைத்து கட்டணங்களுக்கும் யாக பூஜையில் விசேஷ சங்கல்பம் செய்து ரக்ஷை அணிவித்து, குங்குமம், அட்சதை, பிரசாதங்களும், சர்வ மங்களம் அருளும் ஸ்ரீசுதர்ஸனம் படமும் / கவசம் / பக்தி மெல்லிசை பாடல்கள் அடங்கிய Audio C.D. மற்றும் கீழ்க்கண்ட பொருட்களும் வழங்கப்படும்.

ரூ. 100/- செப்பு சுதர்ஸன டாலர் ● ரூ. 250/- செப்பு சுதர்ஸன யந்திரம் ● ரூ. 500/- செப்பு சுதர்ஸன யந்திரம், வெள்ளி சுதர்ஸன தாயத்து ● ரூ. 1000/- சுதர்ஸன யந்திரம், வெள்ளி டாலர் ● ரூ. 2500/- சுதர்ஸன ஜனாகர்ஷன, தனாகர்ஷன, மனாகர்ஷன அஷ்ட மங்களம், பஞ்சாயுதம் யந்திரம், வெள்ளி தாயத்து, வெள்ளி டாலர் ரூ. 5000/- சுதர்ஸன ஜனாகர்ஷன, தனாகர்ஷன, மனாகர்ஷன அஷ்ட மங்களம், பஞ்சாயுதம் யந்திரம், வெள்ளி தாயத்து, வெள்ளி டாலர், கலச தீர்த்தம்.

குறிப்புகள்: இந்த யாகத்தில் கொடுக்கப்படும் செப்பு டாலர் மற்றும் வெள்ளி டாலர், ஒருபுறம் ஸ்ரீவத்ஸம், சின்னமும் மறுபுறம் பஞ்சாயுத சின்னங்களும் பொறித்த டாலர் வழங்கப்படும். இவை அணிபவர்களுக்கு சர்வ மங்கலமும், சர்வ சத்ரு நிவாரணமும், சர்வ ஜெயமும் உண்டாகும்.

இந்த யாகத்தில் கொடுக்கப்படும் சுதர்ஸன படம் சர்வ மங்களமும், சர்வ செல்வமும் உண்டாக்கும் கற்பகவிருட்சம், காமதேனு ஐராவத யானையும், உச்ரவஸ் மங்கள குதிரையும், அஷ்டமங்கள சின்னங்கள் அடங்கியவையும் சர்வ ஜெயத்தையும் அளிக்கும் பஞ்சாயுதச் சின்னங்களுடன் ஸ்ரீ விஜயவல்லி தாயாருடன் ஸ்ரீ சுதர்ஸன மூர்த்தி படம் அளிக்கப்படும். (இந்த படத்தை வீட்டிலோ அல்லது வியாபார ஸ்தலத்திலோ வைத்து பூஜை செய்தால் நினைத்த காரியம் உண்டாகும்)

இந்த யாகத்தில் கொடுக்கப்படும் ஸ்ரீ சுதர்ஸன ஜனாகர்ஷன, தனாகர்ஷன, மனாகர்ஷன, அஷ்டமங்களம், பஞ்சாயுதம் யந்திரம் வீட்டில் அல்லது வியாபார ஸ்தலத்தில் வைத்து பூஜை செய்தால் ஜனங்கள் அபிவிருத்தி யாகி அதிக செல்வம் பெருகி புதிய மனை வாங்கவும், செய்யும் தொழில் நிர்வாகம் சீராக செய்ய வழி அமையும்.

சுதர்ஸன யாகத்திற்கு முக்கிய· கிளை சீட்டு இடம் மற்றும் M.O. / D.D. / காசோலை அனுப்ப வேண்டிய முகவரி

S. ஸ்ரீரங்கராஜ பட்டாச்சாரியார்
32 (ப.எண் 5), கேசவ பெருமாள் சன்னதி தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004.
போன்: 24951513 செல்: 94440 80130, 98404 00781
e-mail: srirangarajabattachariyarhomam@gmail.com

குறிப்பு: M.O./ D.D / காசோலை அனுப்புபவர்கள் தங்கள் பெயர், கோத்திரம், நட்சத்திரம் குறிப்பிட்டு முகவரியை விபரமாக எழுதி அனுப்பவும்.
M.O./ D.D / காசோலை - அனுப்புவர்களுக்கு பிரசாதம் (Speed Post-ல்) அனுப்பப்படும்.

டிக்கெட்டுகள் மண்டபத்திலும் கிடைக்கும்

மனைவி ஒரு மாடர்ன் ஆர்ட்!

"நீங்களும் நானும் பீச்சிலே இருந்ததை என் அப்பா பார்த்துட்டார்..."
" என்ன சொன்னார்?"
"உங்ககிட்டே ஐயாயிரம் ரூபாயைக் கைமாத்து வாங்கி வரச் சொன்னார்."
– நடேஷ்கண்ணா



"இந்த கிரைண்டர்லே மாவு அரைச்சா இட்லி பூ மாதிரி இருக்கும்."
" என்னங்க, நல்லா கேட்டுக்குங்க."
– நடேஷ்கண்ணா



"என் மனைவி ஒரு மாடர்ன் ஆர்ட் மாதிரி..."
" எப்படி?"
"அவ்வளவு சீக்கிரம் புரிஞ்சிக்கவே முடியாது."
– பி.பாலாஜி

"என்ன இது? சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் தலைவர் ஏதேதோ பேசறார்?"
"நீ வேற, கட்சியின் கொள்கையை விளக்கிப் பேசறார்ப்பா..!?"
– அனன்யா

பந்தா காட்டாத பந்தல் சிவா!



''காத்து எப்படி அடிக்குதுன்னு பாருங்க. சூறைக் காற்று அடித்தால் கூட நம்ம பந்தல் 'நச்'சுனு நிக்கணும். தெரியுதா?'' என்று வேலையாட்கள் முதுகில் தட்டியவாறே சொல்லிச் செல்கிறார் பந்தல் சிவா. ஏழு லட்சம் சதுர அடியில், சுமார் ஒரு லட்சம் பேர் தாராளமாக அமரும் வகையில், செம்மொழி மாநாட்டுப் பந்தல் வேலைகள் இவரது கண்ணசைவில் துரித கதியில் நடந்து கொண்டிருக்கின்றன. மேலே துணியில் பூ வேலை செய்து கொண்டிருக்கும் கலைஞர்களைப் பார்த்து, ''அண்ணே... டிசைன் ஓ.கே.தானே... இல்ல மாத்திடலாமா?'' என்று கேட்கிறார். அந்த மனிதர்:சிவா! மாநாட்டைப் பொறுத்தவரை அமைச்சர்கள், அதிகாரிகளை விட சிவாதான் படுபிஸி... வெறும் சிவா என்று சொன்னால் பலருக்குத் தெரியாது. 'பந்தல்' சிவா என்று சொன்னால், தமிழகத்தில் உள்ள சர்வகட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்ல; பிரமுகர்களுக்கும் தெரியும். ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் அரசியல் மாநாடாகட்டும்; அரசு நிகழ்ச்சியாகட்டும், அல்லது வி.வி.ஐ.பி. வீட்டுக் கல்யாணமாகட்டும்... பந்தல் போட வேண்டுமென்றாலே, 'கூப்பிடு தஞ்சை பந்தல் சிவாவை' என்று தயங்காமல் சொல்லி விடுவார்கள். மெகா, மெகா பந்தலை நிர்மாணிக்க வசதியாக ஆள் பலமும், அடிப்படைக்கட்டுமானப் பொருட்களும், தமிழகத்தில் ரெடியாகக் கைவசம் வைத்திருக்கும் ஒரே பந்தல் காண்ட்ராக்டர் சிவாதான்.

சிவாவுக்கு சொந்த ஊர் வடுவூர். ''எங்க ஊர் ராமரின் ஆசியால்தான் என்னுடைய தொழிலில் பிரகாசிக்க முடிகிறது'' என்கிறார் சிவா. இவரது தாத்தா விஸ்வநாதன் உப்பு வியாபாரம் செய்தாலும், அப்பா ராமசாமியின் காலத்தில் பந்தல் போடும் வேலையை, சிறிய அளவில் துவங்கியிருக்கிறார்கள். கல்லூரிப் படிப்பு முடிந்ததும், அப்பாவுக்குத் துணையாகத் தொழிலில் சிவாவும் குதித்து விட்டார். ''என்ன பொருத்தம் பாருங்க... 1995-ல் நடந்த தஞ்சைத் தமிழ் மாநாட்டிலும் பந்தல் போட்டது





பந்தலின் முகப்புத் தோற்றம்

"எல்லாம் எங்க ஊர் ராமரின் ஆசிதான்!"

நான்தான். இந்தச் செம்மொழித் தமிழ் மாநாட்டிலும் பந்தல் போட வாய்ப்பு கொடுத்த கலைஞர் ஐயா... தளபதி ஆகியோரை என்றும் மறக்க மாட்டேன்'' என்கிறார். அண்ணா நூற்றாண்டு விழா, திருச்சி தி.மு.க. மாநாடு, சேலம் உருக்காலைத் திறப்பு விழா ஆகியவற்றுக்கு மாபெரும் பந்தல்களை அமைத்தவர் சிவாதான். ''நெல்லை இளைஞரணி மாநாட்டுப் பந்தல் வேலையின் போது, தினசரி ஸ்டாலின் அவர்கள் வந்து பார்வையிடுவார்கள். அப்போது அவர் சொன்ன சில யோசனைகள் என் தொழிலுக்கு மிக உபயோகமாக இருந்தன'' என்று சொல்கிறார் சிவா.

திடீரென்று மெகா பந்தல் போட ஒப்புக்கொள்ள முடியாது. நூற்றுக்கணக்கான இரும்புக் கம்பங்கள், பைப்கள், ஆயிரக்கணக்கில் தகர ஷீட்டுகள் கைவசம் இருக்க வேண்டும். இவற்றைத் தவிர, ஆயிரக்கணக்கான மீட்டர் வெள்ளை, கலர், கலர்த் துணிகள், கலைநயம் மிக்க துணிப் பூக்கள் ரெடியாக இருக்க வேண்டும். பந்தலில் உட்கார்ந்து மேலே பார்த்தால், 'அட... அசத்தல் அழகு வேலையா இருக்கே' என்று சொல்லுமளவுக்கு நுணுக்கமான வேலை செய்யும் கலைஞர்கள் இருக்க வேண்டும். பந்தலின் முகப்பு பெரும்பாலும் பனை ஓலை குருத்துக்களால்தான் அமைக்கப்படும். ஆயிரக்கணக்கில் அவை ஸ்டாக் இருக்க வேண்டும். அலங்காரத் துணிப் பூக்கள், மணிகள் போன்றவற்றை ஜெய்ப்பூர் போன்ற இடத்திலிருந்து வாங்குகிறார் சிவா.

'செம்மொழி மாநாட்டு முகப்புத் திராவிடக் கட்டடக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைக்கச் சொல்லியிருக்கிறாராம் முதல்வர்.

கும்பகோணம் பள்ளியில் தீ விபத்துக்குப் பிறகு, ''மக்கள் கூடும் இடங்களில் கீற்றுக் கொட்டகைகளுக்குத் தடைபோட்டு விட்டது தமிழக அரசு. ஏகப்பட்ட கீற்றுகளையும், சவுக்குக் கட்டைகளையும் ஸ்டாக் வைத்துக்கொண்டிருந்த சிவாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. ''அந்தச் சமயத்தில் எனக்கு தைரியம் கொடுத்து தொழிலில் தொடர்ந்து இருக்க ஆதரவாக நின்றவர் உணவு அமைச்சர் எ.வ.வேலுதான்'' என்கிறார்.

செம்மொழி மாநாட்டுப் பந்தலுக்காக ஐந்நூறு கலைஞர்கள் இரவும் பகலுமாக வேலை செய்து வருகிறார்கள். முகப்பில் மூன்று லட்சம் பனை ஓலைக் குருத்துக்கள் பயன்படுத்தப்படும் என்கிறார் பந்தா இல்லாத பந்தல் சிவா.


பேட்டி: ப்ரியன்; படங்கள்: ராஜன்

கழக மாநாடுகள் என்றால் கருணாநிதி, ''கொடியோடு வா; குடும்பத்தோடு வா'' என்று கடிதம் எழுதுவார். ஆனால், செம்மொழி மாநாட்டுக்கு, கழக உடன்பிறப்புகள் கொடியில்லாமல்; கரைவேட்டி கட்டாமல் வரவேண்டும் என்பது தலைமையின் அறிவுரையாம். ''கூடியவரையில் செம்மொழி மாநாட்டில் கட்சிச் சாயம் இல்லாமல் இருக்க வேண்டுமென்று தலைவர் விரும்புகிறார். அமைச்சர்கள், அவரவர்கள் மாவட்டத்திலிருந்து குறைந்தது இரண்டாயிரம் பேரையாவது கூட்டி வரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணப் பொதுமக்கள் போல அவர்களைக் கூட்டிச் செல்ல வேண்டும்'' என்கிறார் காஞ்சிபுரம் மாவட்ட முக்கிய ஆளும்கட்சிப் பிரமுகர். தொண்டர்களைக் கோவைக்கு கூட்டிப் போவது மட்டுமல்லாமல், ஊட்டி, முதுமலை ஆகியவற்றையும் சுற்றிக் காட்டுவார்களாம்.



* பொன்முடி

உடன்பிறப்பே! கொடியில்லாமல் ஓடி வா!



* அன்பரசன்

அமைச்சர் பொன்முடியிடம் நூறு கோடி ரூபாய் கேட்டு மானநஷ்ட வழக்கு தொடர இருக்கிறார் பாட்டாளி மக்கள் முன்னேற்றக் கட்சியின் தலைவரான சி.என். ராமமூர்த்தி. டாக்டர் ராமதாஸ் எதிர்ப்பாளர்களாக இருக்கும் வன்னியர்களின் அமைப்பு இது. எதற்காக வழக்கு? ''வன்னியர்கள் எண்ணிக்கையில் உயர்ந்தவர்களாக இருந்தால் மட்டும் போதாது; எண்ணத்தில் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்'' என்று பொன்முடி பேசியதோடு, ''ஒதுக்கீட்டால் கல்வி, வேலை வாய்ப்புகளை அதிகம் பற்றியிருக்கிறார்கள்'' என்றும் தவறாகப் பேசினாராம். வக்கீல் நோட்டீஸ் விட்டவுடன் சமாதானத் தூது விடுகிறார்கள்'' என்கிறார் பா.ம.மு.க.வின் தலைவர் சி.என். ராமமூர்த்தி.

வெளிநாட்டு நிறுவனங்கள், ''எங்கள் தொழிற்சாலையில் தொழிலாளர் சட்டங்களைச் சரியாக அமுல்படுத்தி ஊதியமும் நியாயமாகக் கொடுப்போம். ஆனால், தொழிற்சங்கம் அமைக்கக்கூடாது'' என்ற நிபந்தனையோடுதான் வருகிறார்கள். சமீபத்தில் ஹூண்டாய் நிறுவனத்தில் தொழிற்சங்கம் வேண்டி நடந்த உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் இறங்கிய அறுபத்தியேழு பேரை வீட்டுக்கு அனுப்பி விட்டது நிர்வாகம். இது தொடர்பான பஞ்சாயத்து, தொழிலாளர் நல அமைச்சர் அன்பரசன் வீட்டில் இரண்டு நாட்கள் நடந்தபோது... ''அராஜகத்தில் இறங்கியவர்களை வேலையில் சேர்க்க முடியாது. அவசியமானால் எங்கள் தொழிற்சாலையையே ஆந்திராவுக்கு மாற்றி விடுவோம்'' என்று சொன்னார்களாம் நிறுவன அதிகாரிகள். அமைச்சர் ஆடிப்போய்விட்டாராம்.

– சஞ்சயன்

KOTHARI SAFE DEPOSITS LTD

Since 1936

ABSOLUTE SAFETY...!

Celebrating



Platinum Jubilee Year

1936 - 2010

Offers

Safe Deposit Lockers

at Rs.650/-* P.A. onwards

- 11 Different sizes to suit your needs
- Reasonable Annual Rental Charges
- Full A/c & Uninterrupted Power Supply
- Exclusive & Personal Attention
- Total Privacy

*Conditions apply

LOCKERS ALSO AVAILABLE AT
Parrys
2535 8775
Purasawalkam
2532 2398
Nungambakkam: 2833 1999

Anna Nagar Branch open on Sundays also

ANNA NAGAR: "Tamilvanan Complex" (Basement), AA-144, 3rd Avenue, (near Hotel Vasantha Bhavan), Anna Nagar, Ph: 2620 7271.

ALWARPET: "Century Centre" (Basement), 75, T.T.K. Road, (Opp. Naradhagana sabha) Alwarpet Ph : 2498 3832.

மைலாப்பூர் B.M. சில்க் சாரீஸ்

வழங்கும்

பிரத்யேக பாவாடை வகைகள்...



பாவாடைகள்
ரூ. 180 முதல் ரூ. 600 வரை
(பெரிய அளவு - தாவணி உட்பட)

ரெடிமேட் பாவாடைகள்
ரூ. 250 முதல் ரூ. 700 வரை
(காஞ்சனா சில்க்)

பேன்சி லர்க் சேலைகள், காதி சில்க்
ரூ. 450 முதல்
ரூ. 2500 வரை

மற்றும் பற்பல புதிய ரகங்கள்



SILK MARK

சில்க் மார்க் அங்கீகாரம் பெற்ற மைலாப்பூரில் உள்ள ஒரே ஸ்தாபனம்

B.M. சில்க் சாரீஸ்

எண். 9. வடக்கு மாட வீதி. மைலாப்பூர். சென்னை - 4. போன்: 2461 2799. 2464 2799


குழந்தையின் உலகம்

நிலாரசிகன்



இந்தப் பசுவிற்கு நான்தான்
அம்மா என்றது.
இந்தப் பசு எப்போதும்
பால் தருமென்றது
பசுவின் கன்றுக்கு
தன்மொழி புரியுமென்றது.
பசுவைக் கட்டிக்கொண்டே
உறங்குவேன் என்றது
கோணலாய் இருப்பினும்
குழந்தையின் உலகிலிருக்கும்
ஓவியப்பசு அழகாய்த்தானிருக்கிறது

வீடு கட்டக் குவித்திருக்கும்
ஆற்றுமணலில் விளையாடிக் கொண்டிருந்தார்கள்
சிறுமியும் அவளது பொம்மையும்.
பொம்மையுடன் பேசுவதற்கென்றே
தனிமொழியை உருவாக்கியிருந்தாள்
சிறுமி.
வெகுநேர விளையாட்டிற்குபின்
குடிசைக்குள் சென்ற சிறுமியின்
வலக்கையில் தலையும்
இடக்கையில் உடம்புமாய்
துண்டுகளாகியிருந்தது பொம்மை.
அப்போதும் அதனுடன் பேசிக்கொண்டிருக்கிறாள்
அவள்.


தீராத மூட்டுவலி ஆர்த்தரைட்டீஸ்
நோயாளரா
நீங்கள்?
தீராத மூட்டுவலி ஆர்த்தரைட்டீஸ் நோயாளரா நீங்கள்?
வலி மாத்திரை சாப்பிடாமல் வாழ முடியவில்லையா?
வேளை தோறும் Pain Killer மாத்திரைகளை சாப்பிடுகிறீர்களா?
தொடர்ந்து ஸ்டீராய்டு வகை மருந்துகளை சாப்பிடுகிறீர்களா?
தொடர்ந்து வலி மாத்திரைகளை சாப்பிட்டால் உங்கள் கிட்னி செயல் இழந்துவிடும் என்று World Health Organisation (WHO) எச்சரிக்கிறது.
பக்கவிளைவுகளற்ற 100% மூலிகை சிகிச்சை சித்தர்களின் சங்கேத குறிப்புகளைக் கொண்டு எங்கள் மருத்துவமனையில் சிறப்பு சிகிச்சையை வழங்குகிறோம்.
மூட்டுக்கள் ஒன்றோடு ஒன்று உராய்வதால் ஏற்படும் மூட்டு எலும்பு தேய்மானம், மூட்டுக்களில் வீக்கம், நடக்கும்போது மூட்டுக்களில் சத்தம் வருவது,ருமடாய்டு ஆர்த்தரைட்டீஸ், ஆஸ்டியோ ஆர்த்தரைட்டீஸ், யூரிக் ஆசிட் அதிகமாவதால் ஏற்படும் ஆர்த்தரைட்டீஸ், டிஸ்க்பிரோலாப்ஸ், டிஸ்க் Compression ஆகிய நோய்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கிறோம். ஆங்கில மருந்தோடு சேர்ந்து மூலிகை மருந்துகளையும் எடுத்துக் கொள்ளலாம். பக்க விளைவுகள் இல்லை.
மேலும் விவரங்களுக்கு:
ரத்னா சித்த மருத்துவமனை மற்றும்
மூலிகை ஆராய்ச்சி மையம்
அரும்பாக்கம், சென்னை-106.
போன்: 044-2622 3828/2622 4688, 94433 74341,
94445 34444
www.rathnasiddha.com/e-mail:thiruthani12@yahoo.co.in

தமிழ்க் கொலை

உலகத்திலேயே வேறு எந்த மொழியிலும் 'ழ' என்ற ஒலி உச்சரிப்பை உருவாக்குகின்ற எழுத்து கிடையாது. அந்த வகையில் 'ழ'கரம் தமிழுக்குச் சிறப்புதான். ஆனால் மிக அதிகமாக உச்சரிப்பில் உதைபடுவதும் அதுவே! தமிழ் உச்சரிப்பு அவலங்கள் குறித்துக் காரசாரமாகப் பேசுகிறார் தமிழருவி மணியன்:

''நம் மொழியைச் சரியாக உச்சரிக்க வேண்டும் என்ற உணர்வு இல்லாத தமிழர்கள் பலர் இருக்க என்ன காரணம்?''

''தமிழர்களுக்குண்டான ஒரு சாபம் என்னவென்றால், அவர்களுக்கு எவை யெல்லாம் சிறப்பு தரக்கூடியவையோ, அவற்றையெல்லாம் தங்களுடைய வாழ்வில் செயல்படுத்தக்கூடிய சூழலில் அவர்கள் இல்லாமல் போனதுதான். பொதுவாக நல்ல தமிழ் தென் மாவட்டங்களில்தான் இருக்கிறது என்று சொல்வார்கள். ஆனால், தென் மாவட்டத்துக்காரர்கள் பல பேர் 'ழ'கரத்தைச் சரியாக உச்சரிக்க மாட்டார்கள்.

''அதற்கு என்ன காரணம்?''

''கற்றல் என்பது கற்பித்தவனிடமிருந்து வருவது. கற்பிப்பவன் எதையும் முறையாகக் கற்றுக் கொடுத்தால், கற்பவன் அவற்றைச் சரியாகக் கற்றுக் கொள்வான். ஆக, கற்பிப்பவன் 'ழ'கரத்தைச் சரியாகக் கற்றிருந்து, ஒழுங்காகக் கற்றுக் கொடுத்திருந்தால், இந்தப் பிரச்னை வந்திருக்காது. ஆக, ஏதோ ஒரு கட்டத்தில், ஆசிரியர் வாயிலிருந்தே 'ழ' கரத்துக்குப் பதிலாக லகரம் வந்திருக்க வேண்டும். அதுதான் பிரச்னையின் அடிப்படைக் காரணம்.

''இன்று தமிழ், தமிழாக இல்லாமல் தமிங்கிலமாக இருக்கிறதே! இது ஒரு சீர்கேடு இல்லையா?''

''நம்மிடம் இருக்கும் அடிமை மனோபாவம்தான் இதற்கு முதல் காரணம். ஆங்கிலத்தில் பேசுவது அறிவின் அடையாளம்; தமிழில் பேசினால் அது தற்குறித்தனம் என்ற பேதைமை சார்ந்த எண்ணம் நம் அடிமனதில் பதிந்துவிட்டது. மேலும், தமிழ் நம் வாழ்க்கைக்கு வளம் சேர்க்காது; ஆங்கிலம் மூலமாகவே வளமான வாழ்க்கை வந்து சேரும் என்ற எண்ணம் ஒவ்வொரு தமிழனுக்குள்ளும் இருக்கிறது. அதனால்தான், குறிப்பாக இளையதலைமுறையினரிடம் முழுமையாகத் தம்மால் ஆங்கிலத்தில் பேச முடியாதுபோனாலும், இடையிடையே, ''டுமாரோ ஈவினிங் சிக்ஸ் ஒ கிளாக் பீச்ல மீட் பண்ணுவோம்'' என்பது போலச் சில ஆங்கில வார்த்தைகளைச் சேர்த்துப் பேசுவதன் மூலமாகத் தம்மை ஒரு அறிவாளி போலக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்கள்.

உங்கள் தாய்மொழியை வயிற்றுப் பிழைப்புக்காகப் படிக்காமல், உங்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியப் பெருமைகளை அறிந்துகொள்வதற்காகப் படி



...செய்தால் தண்டனை!

வேண்டும்; நீதிமொழியாக இருக்க வேண்டும்.

"உங்களுக்கு அதிகாரம் இருந்தால், தமிழ்க்கொலை செய்பவர்களுக்கு என்ன தண்டனை கொடுப்பீர்கள்?"

"தமிழ்க்கொலை செய்பவர்களுக்கு என்ன தண்டனை என்பது முக்கியமல்ல; அவர்கள் அப்படிச் செய்யாமல் இருப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கி, அவர்கள் அந்த வழிமுறைகளைப் பின்பற்றச் செய்வதுதான் சரி! ஊடகங்கள் தொடங்க அனுமதி வழங்குகிறபோதே, மற்ற விதிமுறைகளைப் போல, மொழி வளம் காக்க வேண்டும் என்பதையும் ஒரு விதியாகக் குறிப்பிட்டால், வியாபார நோக்கத்துடன் அதை ஆரம்பிப்பவர்கள், தங்கள் வியாபார நலன் கருதி, மொழி குறித்த விதியையும் கடைபிடிப்பார்கள். அப்படிச் செய்யாது போனால், அனுமதியை ரத்து செய்யலாம்.

யுங்கள்" என்பதுதான் நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது.

"அப்படியென்றால் தமிழ் ஆட்சி மொழியாக இருப்பதன் பலன் என்ன?"

"1956-ல் காமராஜர் ஆட்சியின்போது, தமிழ் ஆட்சி மொழி என்று சட்டம் இயற்றப்பட்டது. இன்றும் பல அரசாணைகள் ஆங்கிலத்தில்தான் வெளியிடப்படுகின்றன. அரசாங்கத்தை நடத்தும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் ஆங்கிலத்தில்தான் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கிறார்கள்.

ஒரு மொழி சிறப்புற வேண்டுமென்றால், அது முதலில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; அடுத்து கல்வி நிலையங்களில் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்; நிர்வாக மொழியாக இருக்க

> "டுமாரோ ஈ-வினிங் சிக்ஸ் ஓ கிளாக் பீச்ல மீட் பண்ணுவோம்" என்று பேசுவதன் மூலம் தன்னை அறிவாளி என்று காட்டிக்கொள்கிறான் தமிழன்.

சந்திப்பு: **எஸ்.சந்திரமௌலி**



"வேர் பிறந்த தேதியினை
விதை அறியும்; வளர் தமிழின்
சீர் பிறந்த தேதியினை
ஜகத்தினிலே யார் அறிவார்?"

– காவியக் கவிஞர் வாலி

"மொழிக்கு மொழி தித்திப்பாக
முத்தமிழ் நால்வர் சொல்லும் தமிழ்"

– தாயுமானவ சுவாமிகள்

ஓவியம்: தமிழ்

"இதுவரை நமக்குக் கிடைத்துள்ள
தமிழ் எழுத்துக்களில் மிகவும் பழைமையானவை,
கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை."


– இரா.நாகசாமி, கல்வெட்டு அறிஞர்

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய் தமிழ்ச் செயுமாறே!"

– திருமூலர்



சுத்தத் தமிழுக்



"தமிழ்மொழியைப் பற்றி நான் அறிந்துள்ளது சொற்பமே. ஆனால் அந்தச் சொற்ப அறிவைக் கொண்டே, அம்மொழியின் அழகையும் வளத்தையும் உணர்ந்திருக்கிறேன். அத்தகைய மொழியை அசட்டை செய்தல் பெருங்குற்றமாகும் என்று சொல்வேன்."

- மோ.க. காந்தி

(1933ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் அன்பர் மகாநாட்டுக்கு, மகாத்மா காந்தி தமிழிலேயே கையொப்பமிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தி.)



"மலையில் பிறந்து தென்னன் மடியில்
கிடந்து சங்கத்
துறையில் வளர்ந்த தமிழ் ரத்தினமே!"

– கவியரசு கண்ணதாசன்

"தெய்வம் தொழுவோம்!
திருந்தத் தமிழ் கற்போம்!"

– கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

தொகுப்பு:
சுப்ரபாலன்

"இன்பத்துப்பாலில் தமிழ்த்தாய் தன்
கன்னிமைக் காலத்துக் கனவுகளை
ஆசையோடு அள்ளிக் கொள்கிறாள்."

– ஈரோடு தமிழன்பன்



"தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!"


– பாவேந்தர் பாரதிதாசன்

ரூ.ஐந்து பரிசு!

"சமஸ்கிருதம் முதலிய அந்நிய மொழிச் சொற்களில் ஒன்றும் கலவாது எழுதப்படும் கட்டுரைக்கு ரூ. ஐந்து பரிசு தரப்படும்."

- 1915 ஜூன் 'ஞானபானு' இதழில்
சுப்பிரமணிய சிவா அறிவிப்பு





ரசிகமணி டி.கே.சி.

கண்டுபிடிச்சேன்... கண்டுபிடிச்சேன்...

செந்தமிழ்ப் போட்டி 4

ஒரு பிரபல தமிழ்ப் பாடலின் ஒற்றை ஒரு வரியைத் தேர்வு செய்திருக்கிறோம். அந்த வரியிலிருக்கும் சொற்கள் 6.6.2010 இதழில் தொடங்கி நான்கு வாரங்கள் (இந்த இதழ் முடிய) கல்கியில் இடம் பெறும் தலைப்புகளில் கலந்து இடம் பெறுகின்றன. குறிப்புகளைக் கொண்டு அந்தச் சொற்களைக் கண்டு பிடித்துச் சரியாக வரிசைப்படுத்தி அந்தப் பாடல் வரியைக் கண்டுபிடிக்க வேண்டும். நாங்கள் தேர்வு செய்து வைத்திருக்கும் அந்தப் பாடல் வரியையும், அதை எழுதியவரின் பெயரையும் குறிப்பிட்டு, சுயமுகவரியுடன் அனுப்பி வைக்க வேண்டும். சரியான விடை எழுதிய 5 நபர்களுக்கு (குலுக்கல் முறையில் தேர்வு செய்து) பரிசு அளிக்கப்படும். வெற்றி பெற்றவர்களைப் புகைப்படத்தோடு அறிவிப்போம்.

அட! இந்த வாரக் கடைசி குறிப்பைக் கொண்டு அந்த பாடல் வரியைக் கண்டுபிடிச்சாச்சா? அடுத்து, கொஞ்சம் ரசிகமணிகளாக மாறுங்களேன்... உங்களுக்குப் பிடித்த, நீங்க ரசித்த ஏதாவது ஒரு திரைப்பாடலில் இருக்கும்



செந்தமிழ்ப் போட்டி,
''கண்டுபிடிச்சேன்... கண்டுபிடிச்சேன்''
கல்கி காரியாலயம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



படைப்புத் திறன் போட்டி!

இலக்கியத் தரம் வாய்ந்த ஒரு வரியை மட்டும் எழுத வேண்டும். அந்த வரியை நீங்கள் ஏன் வியக்கிறீர்கள் என்பதை பத்து வரிகளுக்குள் அடக்கி எழுதவேண்டும். உங்க போட்டோவோடு கவரில் போட்டு அனுப்புங்க. அதாவது நான்கு வார வாசிப்பில் தலைப்புகளில் சொல் தேடி நீங்க கண்டு பிடிச்ச வரி - அதை எழுதியவர் பெயர் - ஒரு சினிமா பாடல் வரி - அது பற்றிய உங்க ரசனையான பத்து வரி - உங்க போட்டோ... இவ்வனைத்தையும் கவர்ல போட்டு, இவ்விதழில் இடம் பெற்றிருக்கும் கூப்பனை மேலே ஒட்டி அனுப்புங்க. சரியான விடையுடன் மிகச் சிறந்த பத்து வரி விளக்கமும் அளிக்கும் ஒரு வாசகருக்கு லேப்டாப் பரிசு!

கடைசி தேதி : 30.7.2010

ஆசிரியரின் தீர்ப்பே இறுதி.

இந்த வாரக் குறிப்பு :

எடைக்குப் போடாமல் சேர்த்து வைத்ததற்குக் கிடைத்த அங்கீகாரம்...

Scoop

திறம் வியந்து அளித்த பணி!

"எட்டாம் வகுப்பு படிச்சப்ப, என்கூட படிச்சவங்கள்ல ஒருசிலர் நாணயங்கள், தபால்தலைகள்னு நெறைய சேகரிச்சுட்டிருந்தாங்க. எனக்கும் ஏதாவது சேகரிக்கணும்னு உடனே தோணிச்சு. தினசரி செய்தித்தாள்கள், வாரம் மற்றும் வாரமிருமுறை இதழ்கள், மாதம் மற்றும் மாதமிருமுறை இதழ்கள், காலாண்டிதழ்கள்னு ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்தே சேகரிக்கத் தொடங்கினேன். இப்போ பத்தாயிரம் இதழ்கள், காகிதக் குன்றுகளாய் என் வீட்டு மாடியில் குவிந்து கிடக்குது!" எனக் குறிப்பிடுகிறார் திருச்சி லயன் க.பட்டாபிராமன்.

ஓ... ஒருஷ, ஜிங்லி, டம்டம், 20 40 41, ஜல்ஜல், கட்டி, பாட்டி, பித்தன், கசடதபற, கலாநிதி... இதெல்லாம் என்னன்றீங்க? வெளிவந்து இடையில் நின்று போன தமிழ் இதழ்களின் பெயர்கள். 150 ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்த பிரம்மவித்யா, கலாநிலையம், லோகோபகாரி, வித்தகம், பித்தன் எனக் கேட்டறியாதவை தொடங்கி, சுதேசமித்திரன், திராவிடஸ்தன், தென்னாடு, பராசக்தி, தென்றல், தேசபக்தன், இந்தியா எனக் கேள்விப்பட்ட, ஆனால் தற்போது படிக்க வாய்ப்பில்லாத இதழ்களில் ஒவ்வொன்றையும் சேகரிப்பதைக் கடந்த நிமிடம் வரை, பொழுது போக்காகவும் முழுநேர வேலையாகவும் செய்து வருகிறார். ஓய்வு பெற்ற பொதுப் பணித்துறைப் பொறியாளரான இவரை, 'பழைய பேப்பர் பட்டாபிராமன்' எனக் கல்கி ராஜேந்திரன் குறிப்பிட்டுப் பேசியதைப் பெருமையாகக் கூறுகிறார். இதுவரை ஏழு நகரங்களில் இவற்றை வைத்துக் கண்காட்சியாக நிகழ்த்தியுள்ளார்.



"சென்னையில் இயங்கி வரும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், என் திறம் வியந்து ஒரு பணியினை ஒப்படைத்துள்ளது. ஒவ்வொரு இதழின் அட்டையை ஸ்கேன் செய்வது. இதழின் பெயர், ஆசிரியர் பெயர், இதழ் வெளிவந்த ஆண்டு, தற்போது வருகிறதா? போன்ற விவரங்களைக் குறிப்பெடுத்து, அவைகளைக் கணினியில் அட்டவணைப்படுத்தி, பின்னர் இதற்கென இணையதளம் உருவாக்கி, அதில் பதிவு செய்கிற முழுமையான பணி; தற்போது என் மேற்பார்வையில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் சிலரின் ஒத்துழைப்புடன் அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது" என்கிறார் பழைய பேப்பர் லயன் க.பட்டாபிராமன்.

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

New Showroom @ Malleswaram Inauguration on 24.06.10



experience and enjoy the ethnic presence

SILK COTTON

www.prashanti.co.in

5% off (for all Varieties)
Upto 15th August 2010
"gift vouchers available"

Gurucharan Charanam
PRASHANTI™
House of Silk Cottons

Open on All days

• Sarees • Salwars • Pavadai • Kurthis • Material / Readymades

CHENNAI: MYLAPORE: 16, 6th Cross Street, CIT Colony, Mylapore, Chennai - 4. Ph: 2499 1850 / 2499 7636

BANGALORE: MALLESWARAM: - # 52, 4th Main Road, 17th Cross, Tel: 2334 1632, Mob: 98861 85951
JAYANAGAR: # 2080, 38th Cross, East End 'B' Main Road, 9th Block, Tel: 2244 9595

பட்டின் பொலிவு, பருத்தியின் மென்மை, பிரசாந்தியின் சில்க் காட்டன்

உடல் எடை குறைக்க இயற்கை மருத்துவம்

உடல் எடை குறைக்க : அதிகபட்சமாக வீட்டில் இருந்தால் 28 நாட்களில் 17 கிலோ வரை / இங்கு தங்கினால் 8 - நாட்களில் 15 கிலோ வரை குறைந்துள்ளது. அப்போது அல்சர், கேஸ்ட்ரபுள், பிரசர், முழங்கால் வலி, தலைவலி, pcod, டென்ஷன் போன்ற மற்ற தொந்தரவுகளும் பாதுகாப்பாக பெருமளவு குணமாகின்றன.

பலருக்கு ஒரே வாரத்தில் எடை குறைவது நன்கு தெரியும். இரண்டாம் மாதத்திலிருந்து மேலும் மேலும் எடை குறைவதோடு உடல் அளவும் வேகமாக குறைந்து உடல் நன்கு இறுகும், பலமும் அழகும் அதிகரிக்கும்.

உடலிலுள்ள கொழுப்பு, ஊளைச் சதை போன்றவை நீங்குவதால் கருத்தரிக்கும் வாய்ப்பும் மிகவும் பிரகாசமடையும். உடலின் இயற்கையான இயக்கத்தின் மூலம் அழுக்குகள், துர்நீர் வெளியேற்றப்படுவதால் எவ்வித பின்/பக்க விளைவுகள் ஏற்படுவதில்லை. ஒரு மாத மருந்து ரூ.1600/- முதல் ஐந்து விலைகளில் கிடைக்கும். போனில் விவரம் கேட்டு, முகவரி தெரிவித்து, வி.பி.பி. மூலமாகவும், நேரிலும் மருந்துகளைப் பெறலாம்.

சுகர்: உடல்நிலையைப் பொறுத்து மூலிகை மருந்து/எளிய உணவுமுறையில் நிறையப் பேருக்கு ஒரு மாதத்திற்குள் நார்மலாகி பூரண ஆரோக்கியத்தைத் திரும்பப் பெறும் வாய்ப்புள்ளது.

எமது மூலிகை மருத்துவத்தில் எந்த தொந்தரவுக்காக சிகிச்சை பெற்றாலும் மொத்த உடல் ஆரோக்கியமே மேம்படும். சிறுநீர்க்கல், காமாலை, நிற்காத மாதவிடாய், முகப்பருக்கள் குணமாகி பசி தூக்கம் ஒழுங்காகும். இரத்தம் சுத்தமாகும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். மேலும் தலைவலி, உடல் வலிகள், வயிற்றுக் கோளாறுகள் குழந்தையின்மை உட்பட, உணவு சாப்பிட்டு நடமாடும் நிலையில் உள்ளவர்களின் எல்லா நோய்களுக்கும். இயற்கை மருத்துவர். M. முத்துக்குமார் B.Sc., DNYS., இயற்கை மருத்துவ இல்லம் (பதிவு). ஸ்ரீ குருகுலம் பள்ளி எதிரில், மூலவாய்க்கால், கரட்டடிபாளையம் (Po.), கோபிசெட்டிபாளையம் - 638 453, ஈரோடு (Dt.) போன் : (04285) 240650 செல்: 93602 09393, e-mail : natureclinic@gmail.com

நமது இயற்கை வைத்திய சாலையைப் பற்றிய திருப்பரின் நேர்காணல் மற்றும் முழுவிபரமான கருத்துரையை கடந்த ஜனவரி2010 மங்கையர் மலரில் பக்கம் 114-ஐ பார்த்து தெளிவாக அறியலாம்.

Story part

எல்லாம் வந்தன

ஆயத்த அமர்க்களம்

சலவைக்குக் கொடுத்து வாங்கிய துணிகள் போல், கோவையின் முக்கியச் சாலைகள் பளிச்சென்று இருக்கின்றன. செம்மொழி மாநாட்டை யொட்டி நடக்க இருக்கும் அலங்கார ஊர்திகளின் அணி வகுப்புக்காக வ.உ.சி. மைதானத்தில், இலக்கியக் காட்சிகளுடன் ஊர்திகள் தயாராகின்றன. கொடீசியா எனப்படும் கோவை சிறுதொழில் முனைவோர் சங்க வளாகத்தில், நான்கு பெரிய அரங்கங்கள், இருபத்தியேழு பிரிவுகளாக அமைக்கப்பட்டு, ஆய்வரங்குகள் தயாராகின்றன. இப்படி மாநாட்டு ஏற்பாடுகள் ஒரு பக்கம் நடக்க, கோவை நகர மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஃபாஸ்ட் டிராக் வேலைகள் நடந்து வருகின்றன. சாலைகள், மேம்பாலங்கள், பூங்காக்கள் என்று பார்க்கும் இடங்களில் எல்லாம், ஏதாவது ஒரு மேம்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது. இதற்காக அமைக்கப் பட்டுள்ள குழுவின் தலைவர் மேயர் வெங்கடாச்சலம். செம்மொழி மாநாட்டினையொட்டி, நகரம் மேம்பாடு அடைவது குறித்து மேயருக்கு இரட்டிப்புச் சந்தோஷம். தமிழால் எல்லாம் கிடைத்தது என்கிறார். பேச்சில் உற்சாகம்.

''எழுபத்தாறு சாலைகள், இருபத்தியாறு கோடியில் புதுப்பிக்கப்படுகின்றன. பதின்மூன்று கோடியில் அவினாசி சாலை, ரங்கவிலாஸ் சாலை, மசக்காளிபாளையம் சாலை ஆகியவை போடப்படுகின்றன. இவை தவிர, நான்கு மேம்பாலங்கள். இதனால் நகரத்தின் போக்குவரத்து நெருக்கடி ரொம்பவே குறையும். நடை பாதைகள் கண்ணைக் கவரும்படி அமைக்கப்படுகின்றன. நாற்பது பூங்காக்கள். இதில் மகளிருக்கும், குழந்தைகளுக்கும் தனிப் பூங்கா. பொதுக் கழிப்பிடங்கள்,



காளிதாஸ்



சைலேந்திர பாபு



தமிழாலே!

கோவையிலிருந்து...
ப்ரியன்

குடிநீர் வசதிகள், என்று அடுத்த பத்தாண்டுகளில் செய்ய வேண்டிய வளர்ச்சிப் பணிகளை இப்போதே செய்துவிட்டோம். இனி கோவையின் வளர்ச்சி பிரமிக்க வைக்கும்,'' என்கிறார் மேயர். மத்திய சிறை மாற்றப்பட்டு அங்கே பிரம்மாண்டமான தாவரவியல் பூங்கா வர இருக்கிறதாம்.



கிருஷ்ணா

நடந்து வரும் பணிகளைப் பொதுவாக மக்கள் பாராட்டினாலும், 'இத்தனை அவசரம் தேவையில்லை. இன்னமும் கவனம் செலுத்த வேண்டிய ஏரியாக்கள் நிறைய உண்டு' என்றும் குரல்கள் கேட்கின்றன. ''முதல்வர் அண்ணா நூற்றாண்டு விழா, சட்டசபைக் கட்டடம், மற்றும் செம்மொழி மாநாடு ஆகியவற்றில் அவசரமும், ஆர்வமும் காட்டுவதற்கு அரசியல் உள்நோக்கம் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நகரில் நான்கைந்து நாட்களுக்கு ஒருமுறை தான் குடிநீர் வருகிறது. குளங்களை மேம்படுத்தி, நொய்யலைத் தூய்மைப் படுத்தலாம். அதேபோல் மாநாட்டையொட்டிப் புதிதாக சர்வதேசத் தரத்தில், ஒரு நவீன அரங்கம் கட்டியிருக்கலாம். இப்போது போடப்படுகிற உள்வட்ட இணைப்புச் சாலைகள் கூட, அரசியல்வாதிகளின் ரியல் எஸ்டேட் தொழிலை மேம்படுத்தப் போடப்படுகிறதோ என்ற சந்தேகம் உண்டு. மற்றபடி சமய இலக்கியங்கள் ஆய்வரங்கங்களில் இடம் பெறுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்கிறார் இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத்.


இவரது கருத்தையே ஓரளவுக்குப் பிரதிபலிக்கிறார்கள் 'சிறு துளி தன்னார்வத்








* எ.வ.வேலு



* மேயர் வெங்கடாச்சலம்



* பரிதி இளம் வழுதி

தொண்டு' நிறுவனத்தைச் சேர்ந்த வனிதா மோகனும், வெங்கடேஸ்வர்லுவும். "சிறு வாணியைத் தூர் எடுத்தால் கொள்ளளவு அதிகமாகும். மேலும் ஹாஸ்பிடாலிட்டி தொழில் என்று சொல்லப்படும் ஹோட்டல்கள் இங்கே அதிக அளவில் இல்லை. ஒரு சர்வதேச மாநாடு அல்லது கருத்துக் களம் நடத்த வேண்டுமென்றால், கன்வென்ஷன் ஹால் கிடையாது. உலகத் தரத்தில் ஹோட்டல்கள் கட்ட ஒற்றை ஜன்னல் முறையில் அனுமதி தர வேண்டும். கூடிய விரைவில் நகரில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடப்போகிறோம்" என்கிறார்கள் அவர்கள்.

சுற்றுச்சூழல் ஆர்வலரான 'ஓசை' காளிதாஸின் ஆதங்கம் இலக்கியத் தாகத்துடன் இருக்கிறது. "இயற்கைக்கு இலக்கணம் வகுத்தவன் தமிழன். நிலங்களை ஐவகையாகப் பிரித்தான். இவற்றில் முல்லை என்பது மலையடிவார சமவெளிக் காடுகள். ஆனால் இவை இன்று அழித்தொழிக்கப்படுகின்றன. இந்த மாநாடு ஆய்வரங்கத்தின் முக்கியப் பணியாக, இலக்கியங்களில் சொல்லப்பட்ட தமிழனின் இயற்கையறிவைப் பதிவுசெய்வதாக இருக்க வேண்டும். இலக்கியங்களை அழகியல் பார்வையாக ரொம்பவே பார்த்து விட்டோம். கொஞ்சம் சுற்றுச்சூழல் பார்வையோடு மறு வாசிப்புக்கு உட்படுத்தலாம்" என்று புதிய தடத்தைக் காண்பிக்கிறார் காளிதாஸ்.

இதற்கிடையில், காவல் துறையும் தன் பங்குக்கு மாநாட்டுப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மும்முரமாக இறங்கியிருக்கிறது. அதிரடி அதிகாரியான சைலேந்திர பாபு, இந்தச் சமயத்தில் கோவை நகரக் காவல் ஆணையராக இருப்பது நல்ல பொருத்தம். "எங்களுடைய பெரிய சவால், ஒன்பது கி.மீ. ஊர்வலத்தை மக்களுக்குச் சிரமமில்லாத வகையில் நடத்தி முடிப்பது; பந்தல் பாதுகாப்பு, வி.வி.ஐ.பி. பாதுகாப்பு



ஆகியவைதான். வெளி மாவட்டங்களிலிருந்து வரும் மக்கள் நகருக்குள் நுழையாமல், நேரே மாநாட்டு வளாகத்துக்குச் செல்லும் வகையில் ஏற்பாடு நடக்கிறது. நகர மக்களுக்கு எந்தவித முகச்சுளிப்பும் இல்லாத வாறு பார்த்துக் கொள்வோம்'' என்கிறார் சைலேந்திரபாபு.

கோவையில் திரளும் லட்சக் கணக்கான மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை வழங்க, விருந்தோம்பல் குழு சுறு சுறுப்பாகக் களத்தில் குதித்திருக்கிறது. மாநாட்டுத் திடலை யொட்டிப் பெரிய கொட்டகைகளில் ஃபுட் மால்கள் அமைக்கப்படுகின்றன. ''ஓட்டல்கள் சங்கத்தினர் எங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுக்கின்றனர். மலிவான விலை மட்டுமல்லாது, நல்ல தரத்திலும் உணவுப் பண்டங்கள் விற்கப் படும்,'' என்று உறுதி அளிக்கிறார் உணவு அமைச்சர் எ.வ. வேலு.

''**மா**நாட்டுத் துவக்க விழா, நிறைவு விழா, ஆய்வரங்க நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்த செய்திகள், மற்றும் படங்களை செய்தியாளர்கள் 24 மணி நேரமும் அனுப்பி வைக்க, நவீன மீடியா சென்டர் ரூபாய் அறுபது லட்சத்தில் உருவாக்கப் பட்டிருக்கிறது. பத்திரிகையாளர்கள் எந்தவிதச் சிரமத்துக்கும் ஆளாகாமல் தங்கள் பணிகளை விரைந்து முடிக்கத் தக்கவண்ணம், கட்டமைப்புகளை உருவாக்கியிருக்கிறோம்'' என்கிறார் செய்தித் துறை அமைச்சர் பரிதி இளம்வழுதி.



* வெங்கடேஸ்வர்லு



* வனிதா மோகன்



* அர்ஜுன் சம்பத்

நமது ரவுண்ட் அப்பின் இறுதியாக, கோவை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸின் அதிபர் கிருஷ்ணாவைச் சந்தித்தோம். ''இந்த மாநாடு உலகத்தோடு கோவைக்குக் கிடைத்திருக்கும் கலாசார இணைப்பு. சர்வதேச அளவில் தமிழர்கள் வர இருக்கிறார்கள். எனவே இதை ஒரு விஸிட்டிங் கார்டாக எடுத்துக் கொண்டு, கோவையின் வளர்ச்சி குறித்துத் திட்டமிட வேண்டும். அமெரிக்காவில், திருப்பூரைப் பற்றித் தெரிகிறது. ஆனால், கோவையைத் தெரிய வில்லை. இனி அது மாறும் வகையில் இம்மாநாடு உதவ வேண்டும்'' என்றார் கிருஷ்ணா.

''நகரில் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடப்போகிறோம்!''

படங்கள் : **ராஜன்**

வட்டமேஜை



காலம் கடந்த ஞானம்!

தேநீர் இராமாயணக் காலத்துப் பானம் என விவரங்களுடன் விளக்கியுள்ளது ஒரு அருமையான தகவல்.

- கே.வி.ராமன், சேலையூர்.

கருத்துமிக்க கதைகள் என்றாலே அது கல்கிதான் என வாரா வாரம் நிரூபித்து வருகிறீர்கள்.

- சியாமளா ரங்கநாதன், மந்தைவெளி

நெய்வேலி பாரதிக்குமார் உயிர்ச் சுமை சிறுகதையில் சந்துருவிற்கு மணியின் மீதான பாசத்தை அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டி இருக்கிறார்.

- ஜே.துரைராஜ், வளசரவாக்கம்

காசிக்கு இணையான சந்திரசூடேஸ்வரர் ஆலயச் செய்தி அறிய வேண்டிய ஆன்மிகப் பகுதி!

- வள்ளியூர் ஏ.பி.எஸ். ரவீந்திரன், நாகர்கோவில்

இலங்கைத் தமிழர் பிரச்னைக்குக் குரல்கொடுத்து நெருக்கடி கொடுக்க வேண்டிய நேரத்தில், காங்கிரஸுக்குக் கைகொடுத்துத் தூக்கிவிட்ட திருமாவளவன் இன்று ஏதாவது அரசியல்ரீதியான அதிரடி வேண்டும் என்று சொல்வது காலம் கடந்த ஞானம்!

- ஆர்.நாகராஜன், சென்னை-117

நான்காவது வாரம் எப்போது வரப் போகிறது என ஆவலுடன் எதிர்பார்க்கச் செய்து விட்டது 'செந்தமிழ்ப் போட்டி!'

- டீ.என்.பாலகிருஷ்ணன், சென்னை-91

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட ஸ்பெஷல் II அருமையான தொகுப்பு! பாராட்டுக்குரிய வண்ணம் படைப்புகள் பிரமாதம்!

- பா.அச்சுதன், வயலூர்

'**கொ**ச்சைப் படுத்தும் தீர்ப்பு' தலையங்கம் படித்து வேதனையடைந்தேன். இந்தியர்களின் உயிரின் விலை இவ்வளவு மலிவாகப் போய் விட்டதா?

-வே.முருகேசன், ஆதம்பாக்கம்.

'**க**டுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தி...' என்பது போல, பல்வேறு கோயில்களின் கோபுரங்களைப் பற்றிய சுவையான பல செய்திகளை ஒரே அத்தியாயத்தில் எளிமையாகக் கொடுத்து விட்டாரே ஸ்ரீநிவாச ராகவன்! வெல்டன்!

- க.தெய்வசிகாமணி, சென்னை-5

வண்ணநிலவனின் தொடர்கதையும், வட்டமேஜையில் இடம்பெறும் பரிசுக் கடிதமும் அடுத்த வாரம்.

(-ஆர்.)


MILKA
WONDER CAKE
களிப்பூட்டும் ஆறு சுவைகளில்...

Scoop page

ஈழப் பிரச்னையில் மற்ற தலைவர்களை விட ஆவேசமாகக் குரல்கொடுத்துக் கொண்டிருக்கும் இயக்குநரும், நாம் தமிழர் கட்சியின் தலைவருமான சீமானைச் சந்தித்தோம்...

தமிழகத்தில் ரயிலைக் கவிழ்க்கும் முயற்சி...?

அவசியமற்றது. விரும்பத்தகாதது. வன்முறை மூலம் எதையும் சாதிக்க முடியாது. பல ஆண்டுகளாக ஏவி விடப்பட்ட சிங்கள பயங்கரவாதத்தை எதிர்த்து ஈழத்தில் மக்கள் போராடினார்கள். அங்கு இறுதிப் போர் நடந்தபோது கூட இங்கே நாம் அறப்போராட்டம்தான் நடத்தினோம். தம்பி முத்துக்குமார் தன்னுயிரை ஈந்தார். தமிழக மக்கள் எப்போதும் ஜனநாயக உணர்வுடன்தான் எதிர்ப்புகளைப் பதிவுசெய்கிறார்கள். உண்மையான ஈழ விடுதலை ஆதரவாளர்கள் தமிழின ஆர்வலர்கள் இதுபோன்ற செயல்களில் ஈடுபட மாட்டார்கள். சம்பவம் நடந்த இடத்தில், "பிரபாகரனின் தம்பிகள்" என்று நோட்டீஸ் இருந்ததாகவும், சொல்கிறார்கள். பிரபாகரனின் தம்பிகள் இதுபோன்று செய்யவே மாட்டார்கள்.

அப்படியென்றால் ஏதேனும் சதி?

கொதிக்கும் பிரச்னைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்ப இதுபோன்ற செயல் நடத்தப்பட்டிருக்கலாம். இதுபோன்ற சம்பவத்தை நிகழ்த்தி, ஈழ ஆதரவாளர்களை முடக்கி வைக்க நினைத்தவர்களின் சதிச்செயலாகக் கூட இருக்கலாம். ராஜபட்சேவின் தமிழக நண்பர்களின் சதிச்செயலாகக் கூட இருக்கலாம்.

கபாலீஸ்வரர் கோயில் கருவறை நுழைவுப் போராட்டம்?

அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. மேலும், வழிபாட்டு மொழியாகத் தமிழ் இருக்க வேண்டும் என்பதற்காகவும் நாங்கள் போராடுகிறோம். மற்றபடி, சிலையைத் தொட்டுப் பூஜை செய்ய வேண்டும் என்பது எங்கள் கோரிக்கையல்ல. ஏனெனில் பகுத்தறிவுவாதிகளான நாங்கள் கடவுளை நம்புவதில்லை. நம்பிக்கையில்லாதவர்களுக்குக் கோவில் பிரச்னைகள் ஏன் என்ற கேள்வி அவசியமற்றது. தமிழ்நாட்டில் தமிழில் வழிபாடு வேண்டும் என்பது பெரும்பான்மைத் தமிழர்களின் விருப்பம். அதற்காகவே எங்கள் போராட்டம்.

ராம ராவணன் மலையாளப்பட எதிர்ப்பு...?

தமிழ் மண்ணில் அந்தப் படம் திரையிடப்பட்டால், கண்டிப்பாக எதிர்ப்போம். திட்டமிட்டுத் தமிழர்களையும் தமிழினப் போராளிகளையும் கேவலப்படுத்த எடுக்கப்பட்ட படம் அது. அதனால் அதைக் கடுமையாக எதிர்க்கிறோம். யாரேனும் மீறித் திரையிட முயற்சித்தால், படத்தை எரிக்கவும் தயங்க மாட்டோம்.

நம் நாட்டுக்கே

டக்ளஸ் விசிட்...?

ஆள்கடத்தல், துப்பாக்கிச்சூடு என்று மூன்று வழக்குகள் அவர் மீது உள்ளன. அவர் ஒரு தேடப்படும் குற்றவாளி. கடந்த காலத்தில் பிரபாகரனை ஒப்படைக்க

வேண்டும் என்று சொன்ன இந்தியா, டக்ளஸ்ஸை ஒப்படைக்க வேண்டும் என்று கேட்கவில்லை. சட்டத்திற்கு முன்பு எல்லாம் சமம் என்றால், இதையும் இந்திய அரசு செய்திருக்க வேண்டும். இந்தியாவில் தேடப்படும் குற்றவாளி, நமது பிரதமரோடு கைகுலுக்குவது நமது நாட்டுக்கே அவமானம்.

பிரபாகரன்?

அந்த விஷயத்தைப் பற்றிப் பேச விரும்பவில்லை. தமிழன் என்ற முறையில் எனக்கு ஒரு வரலாற்றுக் கடமை இருக்கிறது. அதை நான் செய்கிறேன். எங்க அண்ணன் இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதைக் காலம்தான் சொல்லும். இயக்கமும் இல்லை, தலைவரும் இல்லை என்று இலங்கை அரசு சொல்கிறது. அப்படியென்றால், இல்லாத இயக்கத்திற்கு எதற்குத் தடை தொடர்கிறது? உள்துறை அமைச்சர் சிதம்பரம், இறப்புச் சான்றிதழ் கொடுத்து விட்டார்கள் என்கிறார்.

அவமானம் !



ஆனால் சி.பி.ஐ. 'தரவில்லை' என்கிறது. எது உண்மை? சான்றிதழ் இருந்தால் கொடுத்துவிட்டு ராஜீவ் காந்தி கொலை வழக்கை முடிக்கலாமே! இதுபோன்ற கேள்விகளில் தான் என் நம்பிக்கை இருக்கிறது.

- ப்ரியன்

இயக்கமுமில்லை. தலைவருமில்லை என்று இலங்கை அரசு சொல்கிறது அப்படி என்றால் இல்லாத இயக்கத்திற்கு. எதற்கு தடை?

"மக்களுக்கு, மன முதிர்ச்சிக்கு வழிவகுக்கும், இந்தச் சமூகத்துக்கு நல்ல விஷயங்களைக் கொடுக்கும், நல்ல தமிழில் நிகழ்ச்சிகளை வழங்கும் ஒரு தொலைக்காட்சி இல்லையே என்பது (டாக்டர்) ஐயாவுடைய வெகு நாளைய ஆதங்கம். சுமார் இரண்டு ஆண்டுகள் இதுபற்றித் தீவிரமாக யோசித்து, ஒரு தொலைக்காட்சியைத் துவக்கினார். அது மக்களுக்கான ஒரு தொலைக்காட்சி என்பதால், 'மக்கள் தொலைக்காட்சி' என்றே பெயரிட்டுவிட்டார். மூன்று ஆண்டுகளாக சமூகப் பொறுப்புணர்வுடன் தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் அளித்து, சிறப்பாகச் செயல்பட்டு மக்கள் வரவேற்பைப் பெற்றுள்ளது" என்கிறார் மக்கள் தொலைக்காட்சியின் நிர்வாகத்தைக் கவனித்து வரும் சௌம்யா அன்புமணி. அவருடன் ஒரு சந்திப்பு:

சமூகப் பொறுப்புணர்வுடன், அதே சமயம் வணிகரீதியாக வெற்றிகரமாக ஒரு தொலைக்காட்சியை நடத்துவது என்பது பெரிய சவாலாக இல்லையா?

"நாம் கொடுப்பது அவர்களுக்குப் பிடித்துப் போய்விட்டால், விடாமல் தொடர்ந்து பார்க்கிறார்கள். உதாரணமாக, நீதியின் குரல், தமிழ் பேசு; தங்கக் காசு; சொல் விளையாட்டு என்று சில நிகழ்ச்சிகளைக் கூறலாம். இப்படிப் பார்வையாளர்கள் இருக்கும்போது, விளம்பரதாரர்கள் ஆதரவும் கிடைக்கிறது. இவை

அடையாளத்தை



யெல்லாம் சேர்ந்து எங்களுக்கு நிகழ்ச்சிகள் வழங்கவும், தொலைக்காட்சியைத் தொடர்ந்து நடத்தவும் ஊக்கமளிக்கின்றன."

பண்பலையிலும், தொலைக்காட்சியிலும் ஆங்கிலக் கலப்புடன் தமிழ்க் கொலை செய்வது ஸ்டைலாக இருக்கும்

சௌம்யா அன்புமணி

ன் இழக்க வேண்டும் ?

போது, நீங்கள் மட்டும் ஏன் பிடிவாதமாக நல்ல தமிழ் பேசும் கொள்கையைக் கடைப் பிடிக்கிறீர்கள்?

''நல்ல தமிழ் பேசுவது என்பது எங்கள் கொள்கை இல்லை; அதுதான் இயல்பாக எல்லோருக்குமே இருக்க வேண்டும். மக்கள் தொலைக்காட்சியோ, (டாக்டர்) ஐயாவோ ஆங்கிலத்துக்கு எதிரி அல்ல. ஒன்றில் இன்னொன்றைக் கலந்து களங்கப்படுத்தக்கூடாது. அதைத்தான் நாங்கள் கடைப் பிடிக்கிறோம். சோகம் என்னவென்றால், நம் பிள்ளைகளுக்கு நல்ல ஆங்கிலமும் தெரியவில்லை; நல்ல தமிழும் வரவில்லை.''

அதற்காக வலிந்து, நடுவண் அரசு என்று சாதாரண மக்களுக்குப் புரியாத தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும் பிடிவாதம் ஏன்?

''நாங்கள் இப்போது பயன்படுத்தும் சில தமிழ்ச் சொற்கள் இப்போது புழக்கத்தில் அதிகமாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் அவற்றை மக்கள் வெகு சரளமாகப் பயன்படுத்தலாம் இல்லையா? தொடர்ந்து திரும்பத் திரும்பப் பயன்படுத்தினால் தமிழ் வார்த்தைகளை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். என்னுடன் பேசுகிறவர்கள் அனைவரும் 'காலை வணக்கம்' என்றுதான் சொல்கிறார்கள். நான் அனைவருக்கும் அப்படிச் சொன்னதால் ஏற்பட்ட மாற்றம் அது.''

நல்ல தமிழ் பேசும் தொகுப்பாளிகள் கிடைப்பது சிரமமாக இல்லையா?

''மக்கள் தொலைக்காட்சியில் அனைவருக்கும் உச்சரிப்புப் பயிற்சியும், கலப்பில்லாத தமிழ் உரையாடல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. எங்களின் இந்த முயற்சியால், முன்பெல்லாம் 'லைவ்' என்று குறிப்பிட்டவர்கள் இப்போது 'நேரலை' என்று குறிப்பிடுகிறார்கள். செய்திகளில் நல்ல தமிழ் அதிகரித்திருக்கிறது. தொகுப்பாளினிகள் விஷயத்திலும் முன்னேற்றம் தெரிகிறது.''

மக்கள் தொலைக்காட்சிக்கு சினிமா மீது ஏன் அத்தனை வெறுப்பு?

''தொலைக்காட்சி, மக்கள் மீது பெரும் தாக்கம் ஏற்படுத்தும் ஓர் ஊடகம். சினிமாவையே காட்டி அதை வெறும் பொழுதுபோக்கு ஊடகமாக்கிவிடக் கூடாது என்பது எங்கள் அழுத்தமான எண்ணம்.''

ஒரு அரசியல் கட்சியின் நேரடித் தொடர்பு இருப்பதால் உங்களுடைய நடுநிலைமையின் நம்பகத்தன்மை பாதிக்கப்படவில்லையா?

''எங்கள் நடுநிலைமையின் மீது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையுள்ளது. மேலும், எங்கள் தொலைக்காட்சியில் தனிநபர் தாக்குதலோ, ஆபாசமான காட்சிகளோ, அரசு அங்கீகாரமில்லாத முறையற்ற மருத்துவ நிகழ்ச்சிகளோ, தரம்தாழ்ந்த இழிசொற்களோ நிச்சயமாக இருக்காது. உடைகளிலும் தமிழ் அடையாளமே இருக்கும். நமது அடையாளத்தை நாம் ஏன் இழக்க வேண்டும்?''- **கௌதம்ராம்**

உலகத் தமிழ் செம்மொழி மாநாடு

சிறக்க

வாழ்த்துக்கள்!



இமயமே வியக்கும் தலைவா!
தமிழின் வரலாற்றுப் பெட்டகமே...!
ஓய்வறியா உதயமே...!
செந்தமிழ் செழித்தோங்கச் செய்திட்ட
சிறப்பதிகாரமே...!
உலகத்தமிழரின் இதயப்பெட்டிக்குள் நிறைந்த
முழுமதியே...!
திக்கெட்டும் தழைத்தோங்கும்
தமிழ்மொழிக்கு முழுமை சேர்த்த முகவரியே...!
தமிழரின் மேன்மையை பிரபஞ்சமே அறிந்திட
உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில்
ஒன்றிணைவோம்...! தலைவா!
உழைப்பையே உயிரெனக் கொண்ட ஆதவன்
உன்னோடு...!

இதோ... புறப்பட்டோம்!
உன் இதழ் கொட்டும் இன் தமிழ் சொல் குவியும்
உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற்கு...

Registered with the Registrar of Newspaper of India under No.1041/57" Registered No.TN/CC (S) DN / 144 / 09 - 11" Licensed to post without prepayment under PMG's Licence No.WPP TN / CC (S) DN / 70 / 09 /11" Registered as a Newspaper in Srilanka.

